
கல்கி




KALKI ஜூன் 3, 1951 4 அண

இக்கைகள் சுறுசுறுப்பாயிருக்கின்றன, ஆனால்...



...சுறுசுறுப்பான கைகளும் அழுக்கடைகின்றன!



அழுக்கடைந்த கைகள்

மறைந்திருக்கும்

அபாயத்தைத்

தாங்குகின்றன. !

அழுக்கில் கண்களுக்கு
புலப்படாத கிருமிகள் இருப்பதால்!

லைப்பாயினால் அடிக்கடி கழுவுங்கள்

லைப்பாய் சோப்

அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து
உங்களை காப்பாற்றுகிறது!

L. 183-50 TM



சிறு குழந்தை சரியான வழியில் வளர ஆரம்பிக்கிறது

மிக்க திடமான குழந்தைப்பருவத்தை யடைய



OSTERMILK

'ஆஸ்டர் மில்க்' சிறுகுழந்தைகளின் பால் உணவு.




'ஆஸ்டர் மில்க்' உட்கொள்ளும் சிறு குழந்தை தன் வாழ்நாளை மிக்க நேர்மையான வழியில் ஆரம்பிக்குமென்பதை தாய் அறிவாள். அது எளிதில் ஜீரணமாகிறது. குழந்தை திருப்தியடைகிறது. நன்றாய் தூங்குகிறது. ஆரோக்யமான வலிமையுடன் வளருகிறது. 'ஆஸ்டர்மில்க்'கில் சேர்க்கப்பட்ட இரும்பு, விடமின் 'D' யுடன் கூட, மிக்க திடமான வளர்ச்சிக்கு வேண்டியவும் அவசியமான மூலப்பொருள்களும் உள்ளன. 'ஆஸ்டர் மில்க்' சாப்பிடுவதால் உங்கள் சிறுகுழந்தை ஆரோக்கியமான குதூகலமுள்ள குழந்தைப்பருவத்தையடையும்.

கிளாக்ஸோ லெபரெட்டரீஸ் (இந்தியா) லிட்., பம்பாய், கல்கத்தா, மதராஸ்

 LAS. (B)

இன்று உங்கள் பற்களை
நீங்கள் **மக்ளீன்** செய்தீர்களா?



"இதோ! என் பற்கள்
அழகாயில்லையா?
நான் எப்போதும்
மக்ளீன்ஸையே
உபயோகிக்கிறேன்.
அது அத்தனை
சுத்தமானது,
ஆனந்தமானது!"

வாயைச் சுத்திகரித்து
மூச்சின் நாற்றத்தை
போக்குகிறது.

உமிழ்நீர்
கெடுதலைத் தடுத்து
ஈறுகளைப் பாதுகாக்கிறது.

மேலே உள்ள கறைகளை அகற்றி
பற்களுக்கு
வெண்மை
தருகிறது.

மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை ஒரு ட்யூப் வாங்குங்கள். அது எவ்வளவு சுத்தமாக இருக்கிறது என்பதைப் பாருங்கள். அச்சடித்த அழகான ட்யூப், பற்பசைக்கும் வெள்ளை மூடி எல்லாம் வெகு ஜோர். இவ்வளவு ஜாக்கிரதையாக உங்கள் மக்ளீன்ஸைப் பாதுகாப்பதுதான் சரி; ஏனெனில் நவீன விஞ்ஞான சாதனைப் பிரகாரம் அது பரிசுத்தமாகவும் பலனளிப்பதாகவும் இருக்க வேண்டும் அல்லவா?


இன்றே மக்ளீன்ஸ் வாங்குங்கள்!




MTX-41 TM

நேர்த்தியான அமைப்பு - அழகிய தோற்றம்

வாடிக்கைக்காரர்களின் விநியோகத்திற்கென்றே உலகப் பிரசித்தி பெற்ற கடிகாரங்களை தருவித்துள்ளோம். யாவும் ஸ்விஸ் தயாரிப்புகள். சரியான நேரத்தை அறிவிக்க உத்தரவாதம் கொண்டவை. 17 ஜுவல் கொண்டவை 5 வருஷத்திற்கும், 15 ஜுவல் 3 வருஷமும், 7 ஜுவல் 2 வருஷமும், மற்றவை ஒரு வருஷமும் உத்தரவாத முள்ளவை. ஒரிஜினல் பிளாஸ்டிக் வாட்ச் கேஸ், ஸ்ட்ராப்புடன் ஒரு கியாரண்டி சர்டிபிகேட்டும் ஒவ்வொரு கடிகாரத்துடன் அளிக்கப்படும். பாக்கிங் தபால் செலவு, விற்பனை வரி இலவசமாக இன்ஷ்யூர் வி. பி. யில் கடிகாரங்கள் அனுப்பப்படும். 1951 ஜுலை 15-ம் தேதி வரை தையலற்ற ஒரு அமெரிக்கன் பிளாஸ்டிக் மணிபர்ஸ் ஒவ்வொரு கடிகாரத்துடனும் இலவசமாக அளிக்கப்படும்.



கேட்லாக் நெ.	கர்வேக்ஸ் சைஸ் 7½			விலை
410	ரோல்டு கோல்டு கேஸ்	5	ஜுவல்ஸ்	48 0
508	ரோல்டு கோல்டு கேஸ்	7	..	60 0
605	க்ரோம் ஸ்டீல்பேக்	15	..	72 0
606	ரோ. கோ. ஸ்டீல்பேக்	15	..	72 0
705	ரோல்டு கோல்டு ஸ்டீல் பேக், ஆப்டிக் கிளாஸ்	17	..	84 0




கேட்லாக் நெ.	டன்ஹோ சைஸ் 8½			விலை
412	ரோல்டு கோல்டு கேஸ்	5	ஜுவல்ஸ்	48 0
510	ரோல்டு கோல்டு கேஸ்	7	..	60 0
607	க்ரோம் ஸ்டீல்பேக்	15	..	72 0
608	ரோ. கோ. ஸ்டீல்பேக்	15	..	72 0
706	ரோ. கோ. ஸ்டீல்பேக் ஆப்டிக் கிளாஸ்	17	..	84 0



சிறிய ரவுண்டு சைஸ் 8½

308	ரோல்டு கோல்டு கேஸ் ஜுவல்களுடன்			36 0
406	ரோல்டு கோல்டு கேஸ்	5	..	48 0
504	ரோல்டு கோல்டு கேஸ்	7	..	60 0
601	க்ரோம் ஸ்டீல்பேக்	15	..	72 0
602	ரோ. கோ. ஸ்டீல்பேக்	15	..	72 0



பேபி சைஸ் 5½

512	ரோல்டு கோல்டு கேஸ்	5	ஜுவல்ஸ்	60 0
611	ரோ. கோ. ஸ்டீல்பேக்	15	..	72 0
707	ரோ. கோ. ஸ்டீல்பேக், ஆப்டிக் கிளாஸ் & சில்க் கயிறுடன்	15	..	84 0
1005	20 மைக்ரோன் கோல்டு கேஸ் கெப்பு நடு செகண்டு முள்ளுடன் & சில்க் கயிறுடன்	17	..	120 0
1006	18 காரட் கோல்டு கேஸ்	15	..	120 0



வாடர் ப்ரூப் சென்டர் செகண்டு
ரேடியம் டயல் சைஸ் 10½

609	க்ரோம் ஸ்டீல்பேக்	15	ஜுவல்ஸ்	72 0
610	ரோ. கோ. ஸ்டீல்பேக்	15	..	72 0
701	க்ரோம் ஸ்டீல்பேக் ஆல் ப்ரூப்	17	..	84 0
1002	20 மைக்ரோன் கோல்டு கேஸ் ஆல் ப்ரூப்	17	..	120 0
702	க்ரோம் ஸ்டீல்பேக் (சிறியது 8½) சைஸ் ஆல் ப்ரூப்	15	..	84 0
1008	க்ரோம் ஸ்டீல்பேக் (சிறியது 8½) சைஸ் ஆல் ப்ரூப்	17	..	120 0



சென்டர் செகண்டு சைஸ் 9½

309	க்ரோம் கேஸ் ஜுவல்களுடன்			36 0
404	ரோல்டு கோல்டு கேஸ்	5	..	48 0
502	ரோல்டு கோல்டு கேஸ்	7	..	60 0
603	க்ரோம் ஸ்டீல்பேக்	15	..	72 0
604	ரோ. கோ. ஸ்டீல்பேக்	15	..	72 0
1004	20 மைக்ரோன் கோல்டு	17	..	120 0


டைம்பீஸ் & பாக்கெட் கடிகாரங்கள்

302	இங்கிலீஷ் அலாரம் டேபிள் கடிகாரம் பெரிய சைஸ், லௌட் அலாரம்	36 0
201	ஜெர்மன் பாக்கெட் கடிகாரம் க்ரோம் கேஸ் சாதாரண டயல்	24 0
301	ஜெர்மன் பாக்கெட் கடிகாரம், ரோ. கோ. கேஸ் ரேடியம் டயல்	36 0

SWISS WATCH CO., P. B. No. 3552, BOMBAY - 4

தொல்லைதரும். சகிக்கவொண்ணாத வலிகள் அவளைப் படுக்கையிலேயே கிடத்தியிருந்தன. ஆனால்......





"க்ருஷன்"

வெகு துரிதமாக நிவாரணம் அளித்தது

இவ்வாறு நிவாரணம் அடைந்த பின்னர், இந்த ஸ்திரீயினால் "க்ருஷன்" இல்லாமல் இருக்க முடியவில்லை. அவளது அனுபவத்தை அவள் வாக்குகளைக் கொண்டே படியுங்கள்:


"நான்கு மாதங்களாகப் படுக்கையில் கூடத் திரும்பிப் படுக்க முடியாதபடி அதிக வலிகளினால் அவதிப்பட்டேன். அச்சமயம் அநேக சிகிச்சைகளைக் கையாண்டும் யாதொரு குணமும் கிடைக்கவில்லை. ஆஸ்பத்திரிக்குப் போவது பற்றி தீவிரமாய் யோசித்தேன். எனினும், என்போன்று அவஸ்தைப்படும் ஒருவரைப் பற்றி "க்ருஷனின்" விளம்பரம் ஒன்றில் கண்டு நானும் அதை ஒருமுறை பரீக்ஷித்துப் பார்த்தேன். ஆச்சரியகரமாக வலிகள் குறைவடைவது கண்டு பெரிதும் வியப்புற்றேன். நான்கு மாதங்களாகத் தவறாமல் க்ருஷன் உபயோகித்து வருகிறேன். அது இல்லாமல் என்றால் ஒருபோதும் இருக்க முடியாது." — B. C.

முதுகு வலி முதலியவற்றின் சித்திரவதையிலிருந்து சீக்கிரம் நிவாரணம் அடைய வேண்டுமாயின் 'க்ருஷ'னில் அடங்கியுள்ள முக்கியமாக ஆறு உப்புக்களையும் ரத்தத்திற்குள் செலுத்துங்கள். அம்முறையாவது:— இயற்கையின் நியதிக்கிணங்க மூத்திரக்காய்கள் மறுபடியும் இயங்குமாறு க்ருஷன் உப்புக்கள் செய்கின்றன. குடலில் சேர்ந்துள்ள விஷப் பொருள்கள் தவறாமல் வெளியேற்றப் படுகின்றன. விஷப் பொருள்கள் போனால் வலிகளும் தாமே ஒழியும். "க்ருஷன்" 'ஒரு சிறு அளவு' தொடர்ந்து சாப்பிட்டுவர, இவ்வலிகள் மறுபடியும் உங்களை பாதிக்காது. ஜலத்துடனே, டீயிலோ கலந்து க்ருஷனைச் சாப்பிடலாம். எல்லா கெமிஸ்டுகளிடமும் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.



KSID. 14


தொண்டை
புண்ணா?
கொப்புளிப்பதற்கு
ஆஸ்ப்ரோ


INTRODUCING
Bauchet
HYPERPANCHROMATIC
(32° Sch.)
ROLL FILMS
FILM PANCHROMATIQUE
SUPER-RAPIDE
Price
Rs. 2/8/- per Roll
நல்ல கலர் போட்டோக்களைச் செவ்வனே எடுக்கும் அதி நுட்பமான உயர்தர க்ரெயின் பான்க்ரோமாடிக் ரோல்பிலிம், 120 அல்லது 620 சைஸ்களில் எடுக்கும் காமிராக்களுக்கு தற்போது கிடைக்கும்.
எல்லா உயர்தர போட்டோ
வியாபாரிகளிடமும் கிடைக்கும்
சோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :
எல். வி. ஜெட் & கோ., லிமிடெட்
கல்கத்தா-12 : பம்பாய்-18 - மதராஸ்-2


ஓர் ஒப்புயர்வற்ற
ஈரல் சஞ்சீவி
க்யூமரேஷ் ஈரல், வயிற்றுக் கோளாறு களை நிவர்த்தி செய்வதில் ஓர் ஒப்பற்ற சஞ்சீவியாக இருப்பதுடன், ஈரல் குலைகளுக்கு அன்றாடம் வேலைகளை செவ்வனே செய்யும் பொருட்டு — ரத்தத்தை சுத்தம் செய்வது முதல், தேகத்திற்குத் தகுந்த போஷாக்கு அளித்து நோய் தொத்தாவண்ணமும் உதவி, அதிக ஊக்கத்தையும் ஊட்டுகிறது.
க்யூமரேஷ்
ஈரலை நன்கு பாதுகாக்கிறது
QUMARESH



அழகிற்கான அரிய சாதனம் 'ஓடின்'

"I use OATINE CREAM and OATINE SNOW regularly to preserve my complexion and ensure freshness. I find OATINE delightful and I recommend it to all my friends."

Sunanda Devi



OATINE

SNOW AND CREAM

Make sure seal is unbroken

பொருள் அடக்கம்

கல்கி

மலர் 10 இதழ் 44 | 1951 ஜூன் 3 | கர ௵ வைகாசி 20உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே

அட்டைப்பட விளக்கம்


இந்தியாவுக்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்பு இதிகாச-புராண ரீதியாகத் திரேதா யுகத்தில் ஏற்பட்டது; சரித்திர ரீதியாக, புத்த பகவானுடைய காலத்தில் ஏற்பட்டு நீடித்திருப்பது. தமிழகமும் இலங்கையும் ஒரு குடையின் கீழ் வாழ்ந்த காலமும் உண்டு. இராஜேந்திர சோழனுடைய சாம்ராஜ்யத்தில் இலங்கை ஒரு முக்கிய பகுதியாக இருந்தது. பிற்காலத்து இலங்கை அரசர்களில் கண்டி ராஜாக்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். இலங்கையில் ஒரு பெரும் பகுதியில் தமிழர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு குடியேறி இன்றளவும் தமிழையும் தமிழர் பண்பாட்டையும் பாதுகாத்து வருகிறார்கள். அரசியல் துறையில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டிருந்த போதிலும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் கலாச்சாரத் தொடர்பில் எந்தவித மாறுதலும் நிகழவில்லை. இலங்கையின் பழமையான சிற்ப—சித்திரக் கலைகள் பாரத நாட்டுக் கலைகளே ஆகும். 'கண்டி நடனம்' என்று இலங்கைச் சிங்களவர்களிடையே தற்போது சிறந்து விளங்கும் நடனக் கலை மலையாளத்துக் 'கதகளி' நடனத்தை ஒத்தது. மலையாளம் பழைய காலத்திய தமிழகத்தைச் சேர்ந்ததாகவே இருந்தது என்று சொல்ல வேண்டிய தில்லை யல்லவா?



இந்தியா—இலங்கைக் கலாச்சாரத் தொடர்பைக் குறிப்பிடும் ஸிகிரியா சித்திரங்களும் கண்டி நடனத் தோற்றமும் நமது இந்த இதழ் அட்டையை அலங்கரிக்கின்றன.



மதராஸ் ரெவின்யூ செக்ரடேரியட், ரிடையர்டு சூபரின்டென்டண்டு ஸ்ரீ எஸ். சுப்பிரமணிய அய்யர் குமாரி சௌபாக்கியவதி ஜயலக்ஷ்மிக்கும், மதுரை காலேஜ் லெக்சரர் ஸ்ரீ டி. ஜி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் தமயன் குமாரன் ரிஸர்வ் பாங்கியில் உத்யோகத்திலிருக்கும் சிரஞ்சீவி K. கணபதி B. (Com.) க்கும், திருச்சியில் 30-4-1951 அன்று விமரிசையாக விவாகம் நடந்தேறியது.



டாக்டர் எஸ். லக்ஷ்மிகாந்தராவ் அவர்களது குமாரி சௌபாக்கியவதி சூர்யகாந்தாமணிக்கும் டாக்டர் எஸ். பி. ராமச்சந்திரய்யா அவர்களது குமாரர் சிரஞ்சீவி எஸ். ஆர். சுப்பிரமணியம் B.Sc., அவர்களுக்கும் சென்ற மே மாதம் 18-ம்தேதி சென்னை பறங்கிமலை "லக்கி பங்களாவில்" விவாகம் இனிது நடந்தேறியது.

வாழ்க சூர்ய காந்தாமணி
பாலசுப்பிரமணியம்

கல்கி

மலர் 10 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 44

பிடியுங்கள் கொடியை !

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஏற்படுவதற்கு முன் பிரிட்டிஷார் சாதாரண வியாபாரிகளாக இருந்தார்கள் அல்லவா? அப்போது அவர்களுக்கு ஒரு ஆசை உண்டாயிற்று.

பரந்த முறையில் உலகம் முழுதும் சென்று வியாபாரம் செய்ய வேண்டும், உலகத்தின் செல்வத்தை யெல்லாம் திரட்டி மூட்டை கட்ட வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள்.

உலகத்தின் மொத்த நிலப் பரப்பிலே நாலாயிரத்தில் ஒரு மடங்கு கூட இல்லாத இங்கிலாந்தைச் சேர்ந்த மக்கள் அவ்வாறு ஆசைப் பட்டால் அது எவ்வளவு காலமாயினும் நடக்கக் கூடிய காரியமா?

எனினும், கிடைப்பதற்கரிய அந்த அதிர்ஷ்டம் பிரிட்டனுக்குக் கிடைத்தது. அந்த ஆசை சித்தியாவதற்குரிய அபூர்வ மந்திரத்தை அவர்களிடையே ஒருவர் கண்டு பிடித்துக் கூறினார்!

அவர்தான் உலகப் பிரசித்தி பெற்ற இலக்கிய மேதாவியும் சரித்திரக் கதை ஆசிரியருமான சர் வால்டர் ஸ்காட்.

"உலக வர்த்தகத்தைக் கைப்பற்றுவதாயின் கப்பல்களை அபரிமிதமாகப் பெருக்கிக் கடலுக்கு எஜமானராக விளங்க வேண்டும். உலகத்தின் வர்த்தகத்துக்கு யார் எஜமானரோ அவர்தான் உலகத்தின் செல்வத்துக்கு எஜமானர். உலகத்தின் செல்வத்துக்கு யார் எஜமானரோ அவர்தான் உலகம் முழுவதற்கும் எஜமானர்" என்ற மந்திரத்தை சர் வால்டர் ஸ்காட் கண்டு பிடித்துப் பிரிட்டிஷாருக்கு உபதேசித்தார்.

அவர்கள் அந்த உபதேசத்தை உறுதியுடன் பின்பற்றியதால் ஏழு கடல்களுக்கும் உலகத்தில் உள்ள பல நாடுகளுக்கும் உலகத்தின் செல்வத்தில் பெரும் பகுதிக்கும் எஜமானர்களாகத் திகழ்ந்தார்கள்.

பிரிட்டிஷாருக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, பாரத நாட்டு மக்கள் மேற்கூறிய இரகசியத்தை அறிந்திருந்தனர்.

அதன் பலனாக பாரசீகத்திலிருந்து பர்மா, சயாம், இந்தோ சீனா, இந்தோனேஷ்யா வரையில் இந்தியக் கப்பல் வியாபாரமும் இந்திய சாம்ராஜ்யமும் வியாபித்திருந்தன.

கப்பல் வியாபாரத்தில் இந்திய மக்கள் உலகத்துக்கு எஜமானர்களாக விளங்கியது போல், கப்பல்களை நிர்மாணிப்பதிலும் நிபுணர்களாக விளங்கினார்கள் என்று அன்னிய நாட்டுச் சரித்திராசிரியர்களும் யாத்திரீகர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அத்தகைய கீர்த்தியுடனும் செல்வாக்குடனும் விளங்கிய இந்தியக் கப்பல் தொழிலும் கப்பற் படையும் இடையில் அன்னியரின் ஆதிக்கத்தினால் நசுக்குண்டு மறைந்தன.


சுதந்திர இந்தியாவில் அவை மறுபடியும் புத்துயிர் பெற்று வருகின்றன.


சென்ற வாரம் பம்பாயில் இந்தியக் கடற்படைக்கு ஜனாதிபதியின் கொடி பரிசளிக்கும் வைபவம் கோலாகலமாக நடைபெற்றது.

எத்தகைய ஆபத்து நேர்ந்தாலும் அந்தக் கொடியைக் கடற்படை வீரர்கள் கடைசி வரையில் பாதுகாக்க வேண்டும் என்பதே அந்த வைபவத்தின் கருத்தாகும். அந்தக் கொடியைப் பாதுகாப்பது என்றென்றும் பாரத நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதே.

ஆஸ்தான ஜோசியர்!

- சாஸ்திரி




"அமெரிக்காவிலிருந்து கோதுமை எப்போது வரும்?"
"அந்தக் கேள்விக்கு மாத்திரம் கடவுள் கூட பதில் சொல்ல முடியாது."
"வரி கொடுக்காமல் ஏமாற்றுபவர்களில் ஒருவரையே உங்களுக்கு உதவியாக நியமியுங்கள். வரி கொடாத்திருடர்களைக் கண்டு பிடித்து விடலாம்."
என்ற கொள்கையைக் கடைப் பிடியுங்களேன்"
"போம், வெளியே! உம்மைக் காட்டிலும் எனக்கு அதிக ஜோஸ்யம் வரும்."
!?
"நாங்கள் மறுபடியும் பார்லிமெண்டு அங்கத்தினராக வருவோமா?"
"இந்தக் கேள்விக்கு ஜனங்கள் அல்லவா பதில் அளிக்கவேண்டும்!" — என்று சொல்லி விட்டு நமது ஜோஸ்யர் ஓட்டம் எடுத்தார்.

மேற்கூறிய கொடி அளிக்கும் வைபவத்தின்போது, ஜனாதிபதி பாபு ராஜேந்திர பிரசாத் இந்தியக் கடற்படையின் பண்டையப் பெருமையை விவரமாக எடுத்துக் கூறினார்.

"வேத காலந் தொட்டு இந்தியக் கடற்படை வலிமையுடன் விளங்கி வந்தது என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. கிறிஸ்து பிறப்பதற்கு ஏழு நூற்றாண்டுகளுக்கு முன் நூற்றுக்கணக்கான இந்தியக் கப்பல்கள் வெளி நாடுகளுக்குச் சென்று வந்தன. சோழர்களும் சதவாகனர்களும் மிகவும் பலம் பொருந்திய கடற் படைகளைக் கொண்டு ஸ்வர்ண த்வீபம் முதலிய பிரதேசங்களில் வெற்றிக் கொடி நாட்டினார்கள். அவ்வாறு இந்தியக் கடற்படையின் கீர்த்தி உலகம் முழுவதும் வியாபித்திருந்த காலத்தில் கூட நாம் பிற நாடுகளை அடிமைப் படுத்தவோ பிற ஜனங்களைச் சுரண்டவோ முற்படவில்லை. உலக மக்கள் சுதந்திரத்துடனும் அமைதியாகவும் வாழ வேண்டும் என்பதே பண்டைய இந்தியக் கடற்படையின் கொள்கை. இனியும் நமது கடற்படை அதே கொள்கையையே கடைப்பிடிக்க வேண்டும்" என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அதே சமயத்தில் கடற்படையின் கடமையையும் வற்புறுத்தினார். "மனித வர்க்கத்தை யுத்த மேகங்கள் கவிந்து கொண்டிருக்கும் இக் காலத்தில் நீங்கள் நமது நாட்டின் சுதந்திரத்துக்கு எள்ளளவும் தீங்கு நேராமல் பாதுகாக்க வேண்டும். நீங்கள் அன்னியரின் தாக்குதலிலிருந்து இந்தியாவைப் பாதுகாக்கும் இரும்புக் கவசமாகத் திகழ வேண்டும்" என்று நமது கடற்படை வீரர்களுக்கு ஜனாதிபதி கட்டளை யிட்டார்.

ஜனாதிபதியின் கட்டளைக்கு இணங்க இந்தியக் கடற்படை வீரர்கள் உலக அமைதிக்கு உறுதுணையாக இருப்பார்கள்; இந்திய வியாபாரக் கப்பல்களுக்குக் காவலராக இருப்பார்கள்; படையெடுக்கும் பகைவர்களுக்குக் காலனாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

"சுயராஜ்யம் வந்து என்ன பயன்?"

இந்தக் கேள்வி மிகத் தவறானது. ஒரு பயனும் இல்லா விட்டாலும் அன்னிய ராஜ்யத்தைக் காட்டிலும் சுயராஜ்யந்தான் மேலானது. ஆனாலும் நாட்டில் இப்போது பலர் மேற்கண்ட கேள்வியைக் கேட்கத் தொடங்கி விட்டார்கள். இதற்குக் காரணம் சர்க்கார் அதிகாரிகள் பலர் பழைய அதிகார வர்க்க தோரணையில் நடந்து வருவதுதான்; முன்னை விட மோசமாகவும் நடந்து வருவதுதான்.

காங்கிரஸைக் குறை கூறினாலும் கதர்க் கட்டியவர்களைக் கேவலமாகப் பேசினாலும் ஜனங்கள் குதூகலப்பட்டுக் கைதட்டுகிறார்கள். மூன்று வருஷத்துக்கு முன் கனவிலும் நினைக்க முடியாத இந்த விபரீத நிலைமையை நாம் இந்த இதழில் சில மாதங்களுக்கு முன் குறிப்பிட்டிருக்கிறோம். சமீபத்தில் ஆச்சாரிய கிருபளானி தமிழ் நாட்டில் அந்த நிலைமையைக் கண்டு வருந்தி யிருக்கிறார்; கைதட்டுவோரைக் கோபித்துக்கொண்டு மிருக்கிறார். இந்தக் கேவல நிலைமைக்குக் காரணம் என்ன! முக்கியமாக, சர்க்கார் அதிகாரிகளின் போக்குத்தான். அவர்கள் பாமர ஜனங்களை—ஏழை விவசாயிகளைப் படுத்தி வைக்கும் பாடுதான்.

பார்க்கப் போனால், சாதாரண குடிமக்களுக்கும் அரசாங்கத்துக்கும் தொடர்பு எப்படி ஏற்படுகிறது! சர்க்கார் அதிகாரிகளின் மூலமாகவே. பழைய பிரிட்டிஷ் ஆட்சியின் மேல் ஜனங்கள் வெறுப்புக் கொண்டதற்கும் மஞ்சள் பெட்டியில் வோட்டுப் போட்டதற்கும் என்ன காரணம்! பழைய பிரிட்டிஷ் அதிகாரிகள் ஜனங்களை ஆடு மாடுகளாக நினைத்து நடத்தியதுதான் காரணம். பிரிட்டிஷ் ஆட்சி ஒழிந்து சுயராஜ்யம் வந்த பிறகும் அதிகாரிகளின் கொடுமை அப்படியே யிருக்கிறது அல்லது இன்னும் அதிகமாகி யிருக்கிறது என்றால், "சுயராஜ்யம் வந்து என்ன பயன்!" என்று ஜனங்களில் சிலர் கேட்பது இயல்பே யல்லவா!

இந்த மாகாணத்தில் உள்ள சர்க்கார் அதிகாரிகள் எல்லாரும் அப்படிப் பழைய போக்கிலேயே நடந்து கொள்கிறார்கள் என்று யாரும் சொல்லவில்லை. பெரும்பாலோர் நல்ல முறையில் நடந்து வரலாம். ஆனால் ஒரு பகுதியார் கேவலமாக நடந்து கொண்டாலும் அதுவே அதிகப் பிரபலம் அடைகிறது. இவர்கள் ஜனங்களைப் படுத்தாதபாடு படுத்தி விட்டு, அதற்குமேலே, "எல்லாம் உங்கள் காங்கிரஸ் மந்திரிகளின் காரியந்தான்!" என்று பிரசாரமும் செய்கிறார்கள். சர்க்கார் அதிகாரிகள் பலர் காங்கிரஸுக்கு விரோதமாகப் பேசுவதைப் பற்றித் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் சமீபத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அவர்கள் அப்படிப் பேசுவது முக்கியமல்ல; அதனால் ஜனங்கள் ஏமாந்து விடமாட்டார்கள். ஆனால் சர்க்கார் அதிகாரிகள் ஜனங்களை நடத்தும் முறையினால்தான் மனக்கசப்பு வளர்ந்து வருகிறது.

கீழேயுள்ள அதிகாரிகளை மேலே உள்ள அதிகாரிகளும் மேலேயுள்ள அதிகாரிகளை இன்னும் மேலேயுள்ள சர்க்கார் நிர்வாகிகளும் ஆதரிக்க வேண்டுமென்பது பிரிட்டிஷ் ஆட்சி முறையின் மரபு. அந்த மரபே இப்போதும்

அமுலில் நடந்து வருகிறது. காங்கிரஸ் மந்திரிமார்கள் கண்ணையும் காதையும் இறுக மூடிக்கொண்டு "அதிகார வர்க்கத்தினர் சொல்வதே வேதம்; பைபிள்; கொரான்" என்று சத்தியம் செய்கிறார்கள்.

இந்தப் போக்கிலேயே கொள்முதல் அதிகாரிகளின் அட்டூழியங்களைப் பற்றிச் சென்னை உணவு மந்திரி சட்டசபையில் கூறிய சமாதானம் அமைந்திருந்தது. அதை அனுசரித்தே சென்னை சர்க்கார் விளம்பர அதிகாரியும் "நாதிர்ஷா பேசுகிறார்" என்ற கட்டுரைக்குப் பதில் எழுதி யிருந்தார். அந்தப் பதிலைக் குறித்து நமக்கு வந்திருக்கும் கடிதம் ஒன்றைக் கீழே வெளியிட்டிருக்கிறோம் :—

" 'நாதிர்ஷா பேசுகிறார்' என்ற தலைப்பில் சென்னைச் செய்தி விளம்பர இலாகா டைரக்டர் அவர்களின் அறிக்கையைப் படித்தேன். அவர்கள் கூறுவது, உண்மை நடப்புக்குப் பொருத்த மில்லை. நீங்கள் மார்ச் 25-ல் எழுதினது தான் சரி. அது தான் உண்மையில் நடைபெறுகிறது.

விவசாயிகளிடமிருந்து வந்த புகார்கள் ஆதாரமற்றவை, சாட்சியமற்றவை என்று டைரக்டர் சொல்வது பிரசாரக் கலை. 7—11—50 ல் என் கிராமத்தில் 'ரைடு' நடந்தது. அதில் ஏற்பட்ட கொடுமைகளை மந்திரிக்கு எழுதினோம். அது சம்பந்தப்பட்ட T. S. O. விடம் வந்தது. இந்த ஆச்சரியத்தைக் குறிப்பிட்டுத் திரும்பவும் மந்திரிக்கு எழுதினோம். பழையபடியும் சம்பந்தப்பட்ட தாசில்தாருக்கே வந்தது! 'நானே தான் 7—11—50 ல் நடந்த சம்பவங்களில் இருந்தேனே? இதை நான் எப்படி விசாரிக்கிறது?' என்று சொல்லிவிட்டுத் தாசில்தார் யார் யாரை விசாரிக்க வேண்டும் என்பதற்கு ஸ்டேட்மெண்ட் வாங்கிக் கொண்டு போய் விட்டார். பூட்டை உடைத்தது மெய்யா? சுமங்கலி பிரார்த்தனை நடந்து கொண்டிருந்த வீட்டிற்குள் T. S. O. புகுந்து அட்டகாசம் செய்தது மெய்யா? ஜோஸ்யர் வீட்டிலும் பூசாரிகள் வீட்டிலும் மறு வாரத்துக்குச் சாப்பாட்டுக்குக் கூட இல்லாமல் நெல்லை எடுத்துக் கொண்டு போனது மெய்யா? சமைந்த பெண் வீட்டுக்குள் இருப்பதைச் சுட்டிக்காட்டி வீட்டுக்காரர் தடை செய்ததை அலட்சியம் செய்து விட்டு உள் புகுந்தது மெய்யா? இதையெல்லாம் யார் வந்து விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்? யாரிடம் விருபிப்பது? பொறுமையுடன் எங்களைக் கேவலப்படுத்தாமல் எங்களுடன் வந்து இவற்றை விசாரித்து அறிபவர் யார்? அதிகாரிகளிடமிருந்து சம்பந்தப்பட்ட நபர்களுக்கு மேலும் தொந்தரவு வராமல் பாதுகாப்பது எவர்? உண்மையில் இச் சமயத்தில் எதையும் புகார் செய்ய ஜனங்கள் அதிகாரிகளிடம் அணுக விரும்புவதில்லை. ஏனெனில் அதனால் மேலும் தங்களுக்கு விபரீதம் விளைவதை அவர்கள் கண்டு விட்டார்கள். நெல்லை ஜில்லாவில் எத்தனையோ கேஸ்கள்,—ஜனங்கள் கொள்முதல் அதிகாரிகளைத் தாக்கினார்கள் என்ற வழக்குகள்,—நீதி ஸ்தலத்தில் கட்டுக்கதை என்று தள்ளுபடி செய்யப் பட்டிருக்கின்றன. இது நீதி—நிர்வாகம் பிரிந்ததனால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அநுகூலம்.

தவிர, டைரக்டர் அவர்கள் மந்திரியாரின் உத்தரவைப் பற்றிச் சொல்வதெல்லாம் உண்மையா யிருக்கலாம். ஆனால் அதன்படிதான் கீழே உள்ள அதிகாரிகள் நடக்கிறார்கள் என்பதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது? நியாயமான உத்தரவுகளை மேலிடம் அனுப்பிவிட்டு அடித்தளத்தில் அப்படித் தான் நடக்கும் என்று நினைப்பது தெரியாத்தனம்.

எனவே நீங்கள் மார்ச் 25ல் எழுதினதே எழுத்துக்கு எழுத்து சரி என்பதை என்னுடைய அநுபவத்தைக் கொண்டு உறுதி கூறுகிறேன்.

இப்படிக்கு

................"

மேலே உள்ள கடிதத்தில் கண்டது போன்ற பல சம்பவங்கள் இம்மாகாண மெங்கும் நடைபெற்றிருக்கின்றன. சம்பந்தப்பட்ட சர்க்கார் அதிகாரிகளைக் கொண்டே விசாரித்து நியாயம் செய்து விட்டதாக நமது மந்திரிகள் ஆத்ம திருப்தி அடைகிறார்கள். ஆனால் மக்களும் திருப்தி அடைவதில்லை; நியாய தேவதையும் திருப்தி அடைவதில்லை.

ஒரு கிராமத்தில் புகுந்து கொள்முதல் அதிகாரிகள் பல அட்டூழியங்கள் புரிகிறார்கள். அந்தக் கிராமவாசிகள் மேலிடங்களுக்குச் சென்று நியாயம் கோரப் போகிறார்கள் என்று தெரிந்தால், உடனே மேற்படி அதிகாரிகள் முந்திக்கொண்டு ஜனங்கள் தங்கள் வேலையைத் தடுத்ததாகவும் தாக்கியதாகவும் வழக்குத் தொடுத்து விடுகிறார்கள். விஷயம் 'ஸப்—ஜுடிஸ்' ஆகி விடுகிறது! யாரும் அதைப் பற்றிப் பேசக் கூடாது; எழுதக் கூடாது. ஆறுமாதம் அல்லது ஒரு வருஷம் ஏழை விவசாயிகள் கோர்ட்டுகளுக்கு இழுத்து அடிக்கப்படுகிறார்கள்! பிறகு அவர்களுக்கு நியாயம் கிடைத்துத்தான் என்ன! அதற்குள்ளே அவர்கள் படுகிற கஷ்டம் ஏழு தலைமுறைக்குப் போதும் என்று ஆகி விடுகிறது. இத்தகைய அநுபவங்களை அடைந்தவர்கள் "சுயராஜ்யம் வந்து என்ன பயன்!" என்று ஏன் கேட்க மாட்டார்கள்!

பொது மக்களின் மரியாதைக்குரிய ஒரு பெரிய தலைவர் அல்லது மாஜி நீதிபதியைக் கொண்டு இம்மாகாணத்தில் நடந்துள்ள கொள் முதல் அட்டூழியங்களைப் பற்றி விசாரணை நடத்தி வைக்க வேண்டும். அப்போது தான் உண்மை வெளியாகும்; நியாயம் நிலை நாட்டப்படும்; காங்கிரஸ் ஆட்சிக்கு ஏற்பட்டுள்ள கெட்ட பெயரும் நீங்கும்.

கல்வி மந்திரியும் யானைக்காலும்

அரசியல் சட்டத்தைச் சில அம்சங்களில் திருத்துவதற்காகப் பிரதம மந்திரி நேரு கொண்டு வந்திருக்கும் பிரேரணைகளை நாம் ஆதரிக்கிறோம். முக்கியமாக, கல்வியிலும் சமூக வாழ்விலும் பின் தங்கிய வகுப்பாருக்கு விசேஷ சலுகைகள் காட்ட அனுமதிக்கும் திருத்தத்தைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறோம்.

ஹிந்து சமூகத்துக்குச் சமீப காலத்தில் ஏற்பட்ட கேடுகளுக்கெல்லாம் முக்கிய காரணம் சாதிப் பிரிவினையும் சமூக ஏற்றத் தாழ்வுகளும் தான். சாதிப் பிரிவினை ஆதிகாலில் எந்த நோக்கத்துடன் ஏற்பட்டிருந்தாலும் பிற்காலத்தில் அது ஹிந்து சமூகத்தைப் பெரிதும் பாதித்தது; நம் நாளில் பல விபரீதமான கேடுகளுக்குக் காரணமாயிற்று.

ஆதலின் ஹிந்து சமூகத்தின் நன்மை, இந்தியா தேசத்தின் நன்மை, தர்மம், நியாயம்—எல்லாக் காரணங்களையும் முன்னிட்டு, சமூக வாழ்வில் பின் தங்கியவர்களுக்கு விசேஷ வசதிகள் செய்து கொடுப்பது அவசியம். இந்த அடிப்படையின் பேரிலேயே காங்கிரஸ் மகா சபை சுதந்திரப் போரை நடத்தி வெற்றி பெற்றது. சுதந்திர இந்தியாவில்,—சுயராஜ்ய நிர்வாகத்தில்,—பின் தங்கியவர்களுக்கு விசேஷ சலுகை காட்டப்படுவது அவசியம். இந்த நாளில் எல்லா முன்னேற்றமும் கல்வி முன்னேற்றத்தைப் பொறுத்திருக்கிறது. ஆகையால், பின் தங்கியவர்களுக்கு விசேஷ சலுகைகள் காட்டப்படுவது நியாயம். ஏற்கெனவே பல தலைமுறைகளாகக் கல்வித் துறையில் முன்னேற்ற மடைந்தவர்களுடன் அவர்களைச் சமமாகப் போட்டியிடும்படிச் சொல்வதில் பொருள் இல்லை. அது நியாயமும் இல்லை; அறிவுடைமையும் அன்று.

* * *

கல்வித் துறையில் சமூக நீதி வழங்கப்படுவதற்காக ஒரு முறை இம் மாகாணத்தில் அமுலில் இருந்தது. அது 'கம்யூனல் ஜி. ஓ.' என்ற பெயரால் வழங்கப்பட்டது. சுயராஜ்ய இந்தியாவில் இந்த முறையை அமுல் நடத்துவது தகாது என்பதே நம் கருத்து. இதையும் பல காலமாக வற்புறுத்தி வந்திருக்கிறோம். எந்த சாதிப் பிரிவினைத் தீமை போக வேண்டும் என்று நாம் கருதுகிறோமோ, அதை அழுத்தமாக நிலை நாட்டுவது கம்யூனல் ஜி. ஓ. என்னும் சாதிவாரி உத்தரவு. இதை எடுத்து விட்டு இதற்குப் பதிலாகச் சமூக நீதியை நன்கு வழங்கக் கூடிய கமிட்டியை நியமிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார், ஓமந்தூர் ரெட்டியார் போன்றவர்களைக் கொண்டு மாணவர்களைப் பொறுக்கும் கமிட்டியை நியமித்தால், இவர்கள் பின் தங்கிய வகுப்பாருடைய நலன்களைக் கட்டாயம் கவனித்துக் கொள்ள மாட்டார்களா? அதே சமயத்தில் நீதிக்கு விரோதமாக அக்கிரமம் செய்துவிட மாட்டார்கள் என்ற நம்பிக்கையும் மக்களில் பெரும்பாலோருக்கு இருக்கும். இவ்விதம் செய்ய வேண்டுமென்று நாம் பல முறை இந்த இதழில் வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

பழைய சாதிப் பிரிவினை உத்தரவைப் பலமாக ஆதரித்தவர்களில் நம் கல்வி மந்திரி கனம் மாதவமேனன் ஒருவர். சென்னை மாகாண மேல் சபையில் இது சம்பந்தமாக நடந்த விவாதத்தில் கலந்து கொண்ட கனம் மாதவமேனன் பழைய ஏற்பாட்டை ஆதரித்துப் பேசிய பேச்சின் முழு விவரத்தைச் சமீபத்தில் நாம் பார்க்கும்படி நேர்ந்தது. அதில் நம் கல்வி மந்திரி யானைக்கால் உதாரணம் ஒன்று சொல்லியிருக்கிறார். மலையாளத்தில் சில பகுதிகளில் யானைக்கால் வியாதி அதிகமாம். அங்கே உள்ள வியாதியஸ்தர் சிலர் தங்கள் யானைக்காலைப் பூமியில் குழி தோண்டிப் புதைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பார்களாம். இதனால் வியாதி தீர்ந்து விடும் என்பது அவர்களுடைய எண்ணமாம்!

"யானைக்காலைப் பூமியில் புதைத்து வைப்பதினால் அந்த வியாதி இல்லாமல் போய் விடுமா? போகாது! அது போல், நம் சமூகத்தில் சாதிப் பிரிவினை இருக்கும்போது அது இல்லை என்று சொல்லி விடுவதால் பயன் இல்லை. ஆகையால் 'கம்யூனல் ஜி. ஓ.' வேண்டியதுதான்!" என்று நம் கல்வி மந்திரி உதாரணம் கூறி, அதன் படிப்பினையையும் எடுத்துக் காட்டினார்.

யானைக்காலைப் பூமியில் புதைத்து வைப்பதினால் அது இல்லாமற் போய் விடாது என்பது உண்மைதான்.

அதற்காக யானைக்கால் வியாதியஸ்தர்கள் நோய்ப்பட்ட காலை நாலுபேர் உள்ள சபையில் காட்டுவதற்கென்று வேஷ்டியை முழங்காலுக்கு மேலே தூக்கிக் கட்டிக் கொண்டு நிற்க வேண்டுமா! அல்லது மேஜை மேல் யானைக் காலைத் தூக்கிப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டுமா!

இந்தியாவின் பொது வாழ்வில் பிரமுகர்கள் சிலருக்கு யானைக்கால் வியாதி உண்டு. "நாம் தான் பிரமுகர்கள் ஆச்சே!" என்று அவர்கள் யானைக்காலைக் காட்டிக் கொண்டு நிற்பதில்லை. வேஷ்டியினாலோ, ஸாக்ஸ்—பூட்ஸ் உதவியினாலோ மறைத்துக் கொண்டுதானிருப்பார்கள்.

வைத்தியர்களிடம் யானைக்காலைக் காட்டித் தக்க சிகிச்சை செய்ய வேண்டியது அவசியம்.

மற்ற இடங்களில் நோய்ப்பட்ட காலை மூடி வைத்துக் கொள்வதும் அவசியம்.

நாகரிக சமூகத்தில் பண்பாடு உள்ளவர்கள் இப்படித்தான் செய்வார்கள்.

சமூகத்திலும் கல்வியிலும் பின் தங்கியவர்களுக்குக் கல்வி ஸ்தாபனங்களில் விசேஷ சலுகை காட்ட வேண்டும் என்று இப்போது நேருஜி கொண்டு வந்திருக்கும் திருத்தம் யானைக்கால் வியாதிக்குத் தகுந்த சிகிச்சை செய்வதைப் போன்றது!

கம்யூனல் ஜி. ஓ. முறை "என் யானைக் காலை எல்லாரும் பாருங்கள்!" என்று காட்டிக் கொண்டு நிற்பதைப் போன்றது.

இரண்டில் எது சிறந்த முறை என்று சொல்லவும் வேண்டுமா!

தெய்வ தரிசனம்

ரா. கி.

4

ருஷியாவின் கடைசி ஜார் சக்கரவர்த்தியான அலெக்ஸாண்டரை அவருடைய முதன் மந்திரி ஒரு நாள் பேட்டி கண்டு பேச வந்தார். இராஜ்ய நிர்வாகத்தைப்பற்றி முதன் மந்திரி கூறியவற்றுக்கெல்லாம் ஜார் சக்கரவர்த்தி தலையை அசைத்து, "நீர் சொல்லுவது ரொம்ப சரி!" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

முதன் மந்திரி போனபிறகு பிரதம சேனாதிபதி சக்கரவர்த்தியைப் பார்க்க வந்தார். முதன் மந்திரி கூறியவற்றுக்கு முற்றும் மாறுபட்ட அபிப்பிராயங்களைச் சேனாதிபதி கூறினார். அவருக்கும் அலெக்ஸாண்டர் தலையை ஆட்டி, "ஆமாம்; நீர் சொல்லுவது ரொம்ப சரி!" என்று கூறி வந்தார்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள் அருகிலிருந்த அலெக்ஸாண்டரின் பத்தினியான ஜார் சக்கரவர்த்தினி. சேனாதிபதி போன பிறகு சக்கரவர்த்தினி தன் கணவரைப் பார்த்துக் கூறினாள் :—

"அலெக்ஸ்! முதன் மந்திரி கூறியவற்றுக்கெல்லாம் தாங்கள் தலையை அசைத்து, 'நீர் சொல்லுவது ரொம்ப சரி' என்று ஆமோதித்து வந்தீர்கள்."

"ஆமாம், என் கண்ணே!"

"பிறகு சேனாதிபதி வந்து முதன் மந்திரி கூறியவற்றுக்கெல்லாம் மாறான கருத்துக்களைக் கூறினார்."

"ஆமாம், கண்மணி!"

"சேனாபதி கூறியவற்றுக்கும் 'நீர் சொல்வது ரொம்ப சரி' என்று தாங்கள் ஒப்பம் வைத்து வந்தீர்கள்."

"ஆமாம், என் பிரிய சகி!"


"இப்படி முற்றும் மாறான அபிப்பிராயங்களைக் கூறிய இருவருக்கும் 'நீர் சொல்வது ரொம்ப சரி' என்று தாங்கள் தலையை ஆட்டிவந்தது எனக்குப் பிடிக்கவில்லை!"

"என் கண்மணி! நீ சொல்லுவது ரொம்ப சரி!" என்றார் அலெக்ஸாண்டர்.

சென்ற இதழ்களில் நான் எழுதியவற்றிலிருந்து இலங்கைத் தமிழன்பர்கள் மேற்கூறிய ஜார் சக்கரவர்த்தியை ஒத்தவர்கள் என்ற எண்ணம் யாருக்காவது ஏற்பட்டிருந்தால் அந்த எண்ணம் ரொம்பத் தவறு என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். விஷயங்களை அலசி ஆராய்ந்து உண்மையைத் தெளிவதில் இலங்கையிலுள்ள தமிழன்பர்கள் தமிழ் நாட்டாரை விட ஒரு படி உயர்ந்தவர்கள். யார் சொல்லுவதையும் "ரொம்ப சரி" என்று உடனே ஒப்புக்கொண்டு விட மாட்டார்கள். இந்த [illegible] தமிழ் விழா நடப்பதற்குச் சில காலத்திற்கு முன்னாலிருந்து இலங்கைப் பத்திரிகை ஒன்றில் பலமான எதிர்ப் பிரசாரம் நடந்து வந்தது. எழுதியவர்கள் பேனாவைத் தீட்டிக் கொண்டு சக்கைப் போடு போட்டார்கள். டாக்டர் மு. வரதராஜனார், திரு தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் முதலிய தமிழகத்துப் பெரும் புலவர்களையும் வெளுத்துக் கட்டினார்கள். 'அம்மாமித் தமிழ்' எழுதும் புது எழுத்

தமிழ்நாட்டின் புதல்வியர் பலர் தமிழ் விழாவில் தொண்டு புரிந்தார்க





எதிரே யுள்ள படத்தில் விழாப் பந்தலைக் கூட்டித் துப்புரவு செய்யும் ஆசிரியர் ஏரம்ப மூர்த்தி. (சட்டையில் தொங்கும் தமிழ்விழாத் தொண்டர் இலச்சினையைக் கவனிக்கவும்.)


தாளர்களையும் பிய்த்து வாங்கினார்கள். ஒரு "கல்கி" இதழில் கண்ட ஆங்கில வார்த்தைகளைப் பொறுக்கி எடுத்து அவர்கள் வெளியிட்டிருந்த ஜாபிதாவைப் படித்ததும் எனக்கு மூர்ச்சை போட்டு விழ வேண்டும் போலாகி விட்டது!

"இப்படிப் பட்டவர்கள்தானா தமிழை வளர்த்துவிடப் போகிறார்கள்?" என்று எடுத்துக் காட்டித் தமிழ் விழாவுக்குத் தீவிர எதிர்ப் பிரசாரம் நடத்தப் பட்டிருந்தும், திருவிழா அவ்வளவு அமோகமாக நடந்தது தான் அதிசயத்திலும் அதிசயமாகும்.

நேயர்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய இன்னொரு தப்பபிப்பிராயத்தையும் போக்கி விட விரும்புகிறேன். 'ஈழ நாட்டுத் தமிழர்கள் தங்கள் நாட்டுப் புலவர்களை நன்கு மதிப்பதில்லை போலும்' என்று யாரும் எண்ண வேண்டாம். தங்கள் நாட்டுப் புலவர்களை அவர்கள் பெரிதும் மதித்துப் போற்றுகிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள நாம் அவர்களை நன்கு மதித்துப் பாராட்டுவதில்லை என்ற மனக்குறையும் பலருக்கு உண்டு. இந்தக் குறையை ஓரளவு தீர்க்கும்படியான சிறப்பு நிகழ்ச்சி ஒன்று மூன்றாம் நாள் திருவிழாவில் நடைபெற்றது.

புதிய துறைகளில் தமிழில் அந்தந்த ஆண்டு வெளியான நூல்களில் சிறந்ததற்குப் பரிசு வழங்குவது தமிழ் விழாவில் ஒரு முக்கியமான நிகழ்ச்சி. இந்த ஆண்டில் பரிசு பெற்ற இரு பெண்மணிகள்,—ஸ்ரீமதி ராஜேசுவரி அம்மையாரும், டாக்டர் திரிபுரசுந்தரி அவர்களும்,—யாழ்ப்பாணம் வந்து விழாவைச் சிறப்பித்தார்கள். இவர்களுக்குத் திரு அவிநாசிலிங்கம் செட்டியார் பரிசு வழங்கிய பிறகு, ஈழத்தில் தற்போது வாழும் தமிழ்ப் புலவர்களில் தலைசிறந்தவரான மகா வித்வான் திரு சி. கணேசய்யர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கும் நிகழ்ச்சி நடந்தது. அச்சமயம் சபைத் தலைமை வகித்த டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் மகா வித்வானுக்குப் பொன்னாடை போர்த்திய போது சபையில் ஆடவர்-பெண்டிர் அனைவருடைய முகங்களிலும் பெருமிதமும் எக்களிப்பும் தாண்டவமாடின.

கலைக்காட்சி மண்டப வாசல் சிற்பங்களைச் சிறப்புடன் விளங்குவது.






கல்வி வழியிலும் பண்பாட்டிலும் ஆசிரியன்மார்கள் பலர் தமிழ்விழாவில் தொண்டு செய்தார்கள். கூட்டம் - பெருக்கலைக்கூட அவர்கள் குறைவென்று நினைக்கவில்லை.

தமிழகத்திலிருந்து விழாவுக்கு வந்தவர்களில் டாக்டர் மு. வரதராஜனார், பேராசிரியர் அ. சீனிவாசராகவன், திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், பேராசிரியர் அனந்த வைத்தியநாதன், திருமதி ராஜேஸ்வரி அம்மையார், பேராசிரியர் டி. என். சேஷாத்ரி ஆகியவர்கள் புலமையும் ஆராய்ச்சியும் ததும்பிய பிரசங்கங்களைச் செய்தார்கள். திரு ம. பொ. சிவஞான கிராமணியார் 'சிலம்பு கூறும் செய்திகளை' மற்றும் இலங்கையிலுள்ள ஏழு லட்சம் இந்தியத் தொழிலாளிகளின் காதிலும் விழும்படியான இடி முழக்கக் குரலில் கூறி வீர கர்ஜனை புரிந்தார். டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் உணவைக் குறித்து ருசிகரமான பிரசங்கம் செய்தார்.

மட்டக்களப்பு வித்வான் பெரியதம்பிப் பிள்ளை அவர்கள் கம்பன் காட்டிய தமிழ் நாகரிகத்தை நன்கு எடுத்துக் காட்டினர். வட்டுக்கோட்டை முதுதமிழ்ப் புலவர் நல்லதம்பி அவர்கள் ''கண்ணீர் பெருக்கிய கலித்தொகை''யைப் பற்றிப் பேசினர். (இலங்கைத் தமிழன்பர்களைக் கண்ணீர் பெருக்கும்படி செய்து விட்டு இம்முது புலவர் சென்ற வாரத்தில் காலமான செய்தியை அறிந்து துயர மடைந்தேன்.) பண்டித மணி சி. கணபதிப் பிள்ளை அவர்கள் பழந்தமிழ்ப் பண்பில் திளைத்தவர்; புதுமையை ரசிப்பவர். கதைச் சுவையும் சிலேடையும் ஆராய்ச்சி அறிவும் ததும்பக் குதித்துக் குதித்து எக்களிப்போடு பேசினர்.

''சொல்லக் கேளம்மா—கூற்
சொல்லக் கேளம்மா!
மல்லிகைப் பூங்குழலாளே
சொல்லக் கேளம்மா!''

என்று அவர் ஆர்வம் பொங்கிய குரலில் பாடியபோது, உடல்நல மின்மையால் தமிழ்



திரு வி. எம். நரசிம்மன் (கலைக் காட்சி)



திரு ச. அம்பிகைபாகன்
(நிர்வாகம்)



முதலியார் செ. சின்னத்தம்பி
(பொக்கிஷம்)



திரு க. நவரத்தினம்
(நிர்வாகம்)


விழாவுக்கு வர முடியாமற் போன ரசிக மணி டி. கே. சி. அவர்களே வந்து விட்டாரோ என்று பிரமிக்க நேர்ந்தது.

திருமதி மகேஸ்வரி, வித்வான் வேந்தனார், ஆசிரியர் எஸ். எம். கமால்தீன் ஆகியவர்கள் அறிவாராய்ச்சி ததும்பிய சொற்பொழிவுகள் ஆற்றினார்கள்.

வேதாரண்யம் சர்தார் ஏ. வேதரத்தினம் அவர்களும், ஈழநாடு காந்திஜிக்கு அர்ப்பணம் செய்த அருந்தொண்டர் திரு அரியநாயகம் அவர்களும் தமிழ்த் திருவிழாவில் காந்தி மகாத்மாவின் கொடியை நிலைநாட்டினார்கள். சர்வோதயக் கொள்கையைச் சபையோருக்கு நினைவூட்டினார்கள்.

• • •

ஒவ்வொரு தமிழ் விழாவிலும் கலைக்காட்சியும் கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்வது வழக்கந்தான். ஆனால் யாழ்ப்பாணத் திரு விழாவில் ஏற்பாடு செய்திருந்த கலைக் காட்சியைப் போல் இதற்கு முன் நடந்த எந்த விழாவிலும் நடந்ததில்லை. பல பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்த கலைக் காட்சியின் முதற் பகுதி பிரபஞ்ச உற்பத்தியிலிருந்து ஆரம்பமாகிறது! மனித குலம் குழந்தைப் பருவத்திலிருந்த நாளிலிருந்து, உலகமெங்கும் கலையும் நாகரிகமும் எம்முறையில் வளர்ந்து வந்திருக்கின்றன என்பதைப் படிப்படியாகக் காட்டிக் கொண்டு சென்றார்கள். பாரத நாட்டில் இந்து சமய மகோன்னதத்திலும் புத்த மதத்தின் ஆதிக்யத்திலும் கலை வளர்ந்த வரலாற்றைக் காட்டினார்கள். பிறகு தமிழ்நாட்டுக்கு வந்தார்கள். தமிழகத்தில் பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் பிற்கால விஜய நகர மன்னர்கள் நாட்களிலும் நமது ஆலயங்கள், சிற்பங்கள், சித்திரங்கள் எப்படி எப்படியெல்லாம் இருந்தன, எப்படியெல்லாம் வளர்ந்தன என்பவற்றைக் கண்முன் நிறுத்தினார்கள்.




பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
(பழமையும் புதுமையும்)

தமிழ் நாட்டுக்கும் ஈழ நாட்டுக்கும் கலைப் பாலம் அமைத்து, இரண்டு நாடுகளுக்கும் நெடுநாளாக நிலைத்துள்ள கலாச்சாரத் தொடர்பை நன்கு எடுத்துக் காட்டினார்கள். இவற்றையெல்லாம் காட்டுவதற்குப் புகைப் படங்கள், ஓவியங்கள், புள்ளி விவரங்கள், சிற்ப வடிவங்கள், சிலாசாஸனங்கள் ஆகிய இவ்வளவு சாதனங்களும் துணை செய்தன.

விழாவுக்கு முதல் நாள் மாலை பரமேஸ்வராக் கல்லூரி மேல் மாடியில் எதிப் பார்த்தேன். வெறிச்சென்று காலியாக இருந்தது. இரவுக்கிரவே ஒரு மகத்தான கலை உலகம் விசுவாமித்திர சிருஷ்டியைப் போல் அங்கே உண்டாகி விட்டது. மறுநாள் போய்ப் பார்த்தால் 'கண்ணன் திருவாயிலே ஏழு உலகத்தையும் கண்ட தாயைப் போல்' பிரமிக்க



டாக்டர் சி. குருசாமி
(பொக்கிஷம்)




திரு நடேசன்
(சுகாதாரம்)



திரு இராஜ அரியரத்தினம்
(விளம்பரம்)

வேண்டியதா யிருந்தது. இந்தக் கலைக் காட்சி அற்புதத்துக்கு முக்கிய காரணமா யிருந்தவர் திருக்கேதீசுவரம் திருப்பணிக் காக இலங்கை போந்திருக்கும் ஸ்ரீ வி. எம். நரசிம்மன் (பி. ஏ., பி. இ., ஏ. எம். ஐ. இ.) என்று அறிந்தபின், அற்புதம் எனக்கு அவ்வளவு அற்புதமாகத் தோன்றவில்லை! அவரிடம் எதிர்பார்க்கக் கூடியதுதான்! தமிழ்த் திருநாள் நிர்வாக சபை சார்பாக அவருக்கு உதவி புரிந்தவர் திரு எஸ். ஆர். கனகசபை என்று அறிந்து மகிழ்ந்தேன். இவர்களுக்கும் இவர்களுக்குத் துணை புரிந்த ஸ்ரீ திருமலாச்சாரி முதலியவர்களுக்கும் கலைக் காட்சியைப் பார்த்துப் பயன் அடைந்த சுமார் ஒரு லட்சம் மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சமயத்தில், திருவிழாவின் பெரு வெற்றிக்குக் காரணமாயிருந்த இன்னும் சில நிர்வாக ஊழியர்களின் பெயர்களையும் குறிப்பிட விரும்புகிறேன். யாழ்ப்பாணப் பிரதேசத்தை வளமுள்ள பூமி என்று சொல்ல முடியாது. ஈழ நாடே இப்போது பற்றாக்குறை நாடு தான். அப்படியிருக்க, இந்தியாவிலிருந்தும் இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த ஆயிரக் கணக்கானவர்களுக்கு நாலு தினங்கள் உணவு அளிப்பதென்பது எவ்வளவு சிரம சாத்தியமான காரியம்? விழாவுக்கு உணவுப் பண்டங்கள் சேகரிப்பதில் பேருதவி புரிந்தவர்கள் மட்டக் களப்புத் தமிழன்பர்கள். அவர்கள் மூட்டை மூட்டையாக அரிசியும், பானை பானையாகத் தயிரும், கூடை கூடையாகக் கறிகாய்களும், அனுப்பி வைத்தார்களாம். ஆயினும் கிடைத்த சாமான்கள் சரிவரப் பயன்பட வேண்டும் அல்லவா? இந்த அரிய கைங்கரியத்தை மேற்பார்வை செய்து திறம்பட நடத்தியவர் ஆசிரியர் இராஜசேகரன் அவர்கள். போக்குவரவு சாதனங்களை ஒழுங்கு செய்தவர் திரு ஏ. அருளம்பலம் அவர்கள். தொண்டர் படைக்குத் தலைமை வகித்தவர் ஆசிரியர் என். தம்பிரத்தினம் அவர்கள். காரியாலயத்தில் அமர்ந்து கேட்பவர்களுக் கெல்லாம் பொறுமையுடன் பதில் சொல்லிச் சகல காரியாதிகளையும் நிர்வகித்தவர் ஆசிரியர் டி. சீனிவாசகம் அவர்கள். பந்தல் ஒழுங்குகளை மேற்பார்வை செய்தவர்கள் ஆசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களும் ஆசிரியர் குமாரசாமிப்பிள்ளை அவர்களும். தண்ணீர்ப் பந்தல் கைங்கர்யத்தை நடத்தி வைத்தவர் ஆசிரியர் கந்தையா அவர்கள்.



இலங்கையில் வாழும் தமிழ் முஸ்லிம்கள் பெரிதும் தமிழன்பு கொண்டவர்கள். அவர்களின் சார்பாக விழாவில் 'பங்கு பற்றிய' ஜனாப் கமால்தீன்.

இப்படி 'ஆசிரியர்' 'ஆசிரியர்' என்று வருவதைக் குறித்து நம்



தமிழ்த் திருவிழா மேடையில் தமிழ் ஒளிச் சுவடிகள் நடுநாயகமாக விளங்கின. விழாத் தலைவர் திரு வி. ஆர். சீனிவாசன், இலக்கிய மகாநாட்டுத் தலைவர் திரு சேதுப்பிள்ளை, விஞ்ஞான மகாநாட்டுத் தலைவர் டாக்டர் கிருஷ்ணன், சரித்திர மகாநாட்டுத் தலைவர் திரு என். நடேசன், திரு அவிநாசிலிங்கம் முதலியவர்களைப் படத்தில் காணலாம்.

நேயர்கள் வியப்படைய வேண்டியதில்லை. தமிழ் விழாவை நிர்வகித்து நடத்தியவர்கள் பெரும்பாலும் ஆசிரியர்கள் தான். பருத்தித்துறையில் நான் பார்த்திருந்த ஆசிரியர் ஒருவர் விழாப் பந்தலை யொட்டிய இடத்தைத் துப்புரவு செய்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். "தாங்கள் ஆசிரியர் சாம்ப மூர்த்திதானே" என்றேன்.

"ஆம், ஐயா!" என்றார். "ஆசிரியத் தொழிலையே இங்கும் செய்கிறீர்கள்! கூட்டிப் பெருக்குகிறீர்கள்! விளக்குமாற்றாலும் விளக்குகிறீர்கள்!" என்றேன். "சிலேடை நோய் உங்களையும் பற்றிக்கொண்டு விட்டதா?" என்றார் சாம்பமூர்த்தி. "எல்லாம் யாழ்ப்பாணத்துக் காற்றின் மகிமை; தமிழ் விழாவின் மகிமை!" என்றேன். பக்கத்தில் சுகாதார பரிசோதகர் திரு நடேசன் நின்று கொண்டிருந்தார். நெருங்கி வந்து "யாருக்கு நோய்?" என்று கேட்டார். சென்ற முறை நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது இவர் 'காக்கி' வர்ண உடுப்புத் தரித்திருந்தார். இப்போது தூய வெள்ளை உடுப்புகளுடன் விளங்கினார். "என்ன, ஐயா, வர்ணம் மாறி யிருக்கிறீரே!" என்றேன். "நீங்கள் 'கல்கி'யில் என்னைப் பிடித்து வெளுத்துப் போட்டீர்கள் அல்லவா? அதனால் வெள்ளையாகி விட்டேன்!" என்று அவரும் சிலேடையில் புகுந்தார்! (எல்லாம் தமிழ்த் திருவிழாவின் மகிமைதான்!) இவ்வளவு மாபெருங் கூட்டம் கூடியும் அந்தப் பரமேசுவரக் கல்லூரி மைதானம் துப்புரவா யிருக்கும்படி பார்த்துக் கொண்ட சுகாதார அதிகாரிகளுக்கு அவசியம் நன்றி செலுத்தியே தீர வேண்டும்.

இந்த நன்றி கூறும் படலத்தை இங்கே எதற்காக ஒப்புவிக்கிறேன் என்று நேயர்களுக்குச் சிறிது வியப்பா யிருக்கலாம். தமிழ்த் திருவிழாவின் முடிவில் "நன்றி கூறல்" என்னும் திருப்பணி எனக்கு அளிக்கப்பட்டிருந்தது. அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்காக மேற் கூறியவாறு தொண்டு செய்தவர்களின் பெயர்களை யெல்லாம் சேகரித்து வைத்திருந்தேன். அவ்வளவும் வியர்த்தமாகி விட்டன! "இதற்கு அடுத்த நிகழ்ச்சி இசைக் கச்சேரி" என்று சொன்னதுதான் தாமதம்; அடிரேகையைத் தாண்டும் படலம் ஆரம்பமாகி விட்டது! கொரியாவிலே 38-வது அட்சரேகை ஒன்றை மட்டும் தாண்டினார்கள்; அதனாலேயே எவ்வளவோ விபரீதங்கள் ஏற்பட்டு

விட்டன. இங்கேயோ 38, 39, 40—எல்லா அட்சரேகைகளும் தவிடு பொடியாகி விட்டன! "இசைக் கச்சேரி" என்று செவியில் விழுந்ததும், அந்த மகா சபையில் ஒரு மூலையில் நின்றவர்களில் சிலர் கொஞ்சம் நெருங்கி வரத் தொடங்கினார்கள். அதைப் பார்த்துவிட்டு இன்னொரு மூலையில் இருந்தவர்களும் கொஞ்சம் நெருங்கிவரப் பார்த்தார்கள். என்ன விசேஷம் என்று பார்ப்பதற்காகச் சிலர் எழுந்து நின்றார்கள். அதனால் ஏற்பட்ட இடைவெளியில் சிலர் புகுந்தார்கள். இப்படி நாலா பக்கங்களிலும் அக்ஷ ரேகைக் கயிறுகளைத் தாண்ட ஆரம்பித்து விட்டார்கள்! எனவே, போலீஸ் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டிய கட்டம் வந்து விட்டது!

திருவிழாவில் ஒலி பெருக்கிகள் எவ்வளவோ நன்றாக ஒழுங்கு செய்திருந்த போதிலும், அவ்வளவு பெரிய ஜனத் திரளுக்குப் போதியவாறு செய்யப்படவில்லை. என்ன இருந்தாலும் சொற்பொழிவு சொற்பொழிவுதான்; இசைப் பொழிவு இசைப்பொழிவுதான். நெருங்கி வந்து இன்னிசைக் கச்சேரி கேட்க ஜனங்கள் விரும்புவதும் இயல்புதான். ஆனால், அக்ஷ ரேகையைத் தாண்டும் படலத்துக்கு இடம் கொடுத்து விட்டால் பெரிய விபரீதமாகி விடலாம். "தமிழ்த் திருவிழா குழப்பத்தில் முடிந்தது" என்று பத்திரிகைகளில் பிரகசிக்க நேரிடலாம். அப்படிப்பட்ட நெருக்கடியான கட்டத்தில் போலீஸார் கூட்டத்தில் புகுந்து ஒத்துழைக்கத் தொடங்கினார்கள்; அவர்களுடைய கைத் தடிகளும் ஒத்துழைத்தன! எப்படியெனில், அத்தடிகள் யாருடனும் வலுச் சண்டைக்குப் போகவில்லை; மரியாதையாகக் கும்பிட்டு மக்களை அமைதியாக உட்காரும்படி வேண்டிக் கொண்டன! எல்லாம் தமிழ் விழாவின் மகிமைதான்!

ஸ்ரீமதி எம். எல். வஸந்தகுமாரியின் இசைக் கச்சேரியில் முதல் அரைமணி நேரம் வரையில், அக்ஷ ரேகையைத் தாண்டலும் போலீஸ் நடவடிக்கையுமாகச் சிறிது குழப்பமாயிருந்து வந்தது. பின்னர், அமைதி ஏற்பட்டது. காம்போதி ராக ஆலாபனத்தின்போது எள்ளைப் போட்டால் அதன் ஓசை கேட்கும்; அவ்வளவு நிச்சப்தம் நிலவியது. பதினாயிரம் பெண்மணிகள் மௌனமாயிருந்தார்கள். ஒரு குழந்தையின் 'கிறீச்' சத்தமும் கிடையாது. சங்கீதத்தைச் சபையோர் ரஸிப்பதற்கு அறிகுறியான கரகோஷம் மட்டும் அவ்வப்போது எழுந்தது. காம்போதி ஆலாபனத்தில் ஸ்ரீமதி வஸந்த குமாரி பொழிந்த பிர்க்காக்களை ரஸித்தார்கள்; 'காணக்கண் கோடி' கீர்த்தனத்தின் பாவத்தை ரஸித்தார்கள்; ஸ்வரப் பிரஸ்தாரத்தின் விறுவிறுப்பையும் ரஸித்தார்கள். கச்சேரியின் பிற்பகுதியில் பாடிய திரை கீதங்களும் "சின்னஞ் சிறு கிளியே" "தங்கமே தங்கம்!" என்னும் பாரதியார் பாடல்களும் வெகுவாக ரஸிக்கப்பட்டன. வரவேற்பு சபைத் தலைவர் திரு எஸ். நடேச பிள்ளை அவர்கள் "திருவிழாக் கோலாகலத்தில் வித்வான்களுக்குப் பூமாலை வாங்கி வைக்க மறந்து விட்டபடியால் புகழ்மாலை சூட்டுகிறோம்!" என்று கூறி ஸ்ரீமதி வஸந்த குமாரியையும், பக்க வாத்திய வித்வான்களாகிய ஸ்ரீ கோபால கிருஷ்ணன், ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ராவ், ஸ்ரீ வில்வாத்ரி ஐயர் ஆகியவர்களையும் சிறப்பாகப் பாராட்டினார். "வாழிய செந்தமிழ்" கீதத்துடன் கச்சேரி

யாழ்ப்பாணத்தில் தமிழுக்கு ஒப்பற்ற தொண்டு புரிந்தவர்களில் ஒருவர் மகா வித்வான் திரு சி. கணேசய்யர் அவர்கள். அப் பெரியாருக்குத் தமிழ் விழாவில் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.



முடிந்தது. தமிழ்த் திருவிழாவும் அத்துடன் இனிது முடிவடைந்தது.

"ஆம்; விழா முடிந்தது! நல்ல வேளையாக முடிந்தது!" என்று என்னால் சந்தோஷப்பட முடியவில்லை. முடிந்து விட்டதே என்று வருத்தமாகத்தான் இருந்தது. ஸ்ரீ பெரியசாமித் தூரனும் நானும் விழாவுக்கு எல்லாரினும் முதலில் வந்தோம். எல்லாருக்கும் கடைசியில் கிளம்பினோம். ஆயினும் விடை பெறுதல் எளிதாக இல்லை. வெளியூர்களி லிருந்து குடும்பத்தோடு வந்திருந்தவர்கள் சுமார் இருநூறு பேர் ராமநாதன் கலாசாலையில் தங்கி யிருந்தார்கள். அத்துக் குடியிலிருந்து வந்திருந்த அறிஞர் ஸ்ரீ பால் நாடாரும் அவர் குடும்பத்தினரும் அங்கே தங்கி யிருந்தார்கள். கோயமுத்தூரி லிருந்து வந்திருந்த ஸ்ரீ சுந்தரம் பிள்ளையின் குடும்பத்தார் அங்கே இருந்தார்கள். கொழும்பிலிருந்து வந்திருந்த ஸ்ரீ ஆர். ஏ. நடேசன் குடும்பத்தார் அங்கேதான் இருந்தார்கள். அவர்கள் எல்லாரும் புறப்பட்டு விட்டார்கள். இப்படிக் குடும்பமாக வந்திருந்த விருந்தாளிகள் இருநூறு பேரையும் கவனித்துக் கொண்டு, அவர்களுக்கு வேண்டிய வசதிகளை யெல்லாம் செய்து கொடுப்பதில் கண்ணும் கருத்துமா யிருந்தவர்கள், ராமநாதன் கலாசாலையின் தலைமை ஆசிரியை ஸ்ரீமதி பிள்ளையும், அவருடைய கணவர் ஸ்ரீமான் பிள்ளையும், கலாசாலை மாணுக்கியர் சிலரும் ஆவர். இவர்களும் புறப்பட்டுப் போய் விட்டார்கள். நாங்கள் மட்டுமே மிஞ்சி யிருந்தோம். லேடி ராமநாதன் அவர்களிடம் விடை பெறாமல் எவ்வாறு புறப்படுவது? லேடி ராமநாதன் அவர்களிடம் விடை பெற்றுக்கொள்வதுதான் எப்படி? — என்பது

பிராயம் ஆன அந்தப் பெருமூதாட்டியார் காலை ஊன்றி நடக்கும் சக்தியை இழந்திருந்தார். ஆனாலும் இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு, சில சமயம் சக்கரம் வைத்த நாற்காலியில் வளைய வந்து கொண்டு, எப்படி யெல்லாம் காரிய நிர்வாகம் செய்தார்? அயலூர்களிலிருந்து வந்திருந்தவர்களை எப்படி யெல்லாம் கவனித்தார்? அவர்களுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் செய்யப்படுகின்றனவா என்பதை எவ்வளவு ஊக்கத்துடன் மேற்பார்வை செய்தார்? வெள்ளைக் கலை யுடுத்தி வெள்ளைப் பணி பூண்டு தமிழ்த் தாயே அங்கு லேடி ராமநாதன் வடிவில் எழுந்தருளி யிருந்ததாக எங்களுக்குத் தோன்றியது! அவரிடம் விடைபெறுதல் எங்ஙனம்?

லேடி ராமநாதன் அவர்களுடைய செல்வக் குமாரியான ஸ்ரீமதி சிவகாம சுந்தரி (ஸ்ரீ எஸ். நடேசபிள்ளையின் மனைவியார்) மேனாடு—கீழ்நாடுகளின் கலாச்சாரப் பண்பாடுகளுக்கு ஒரு சிறந்த பிரதிநிதியாக விளங்கினார். கணவருடன் விமான நிலையத்துக்குச் சென்று விழாத் தலைவர் முதலிய விருந்தாளிகளை வரவேற்றுக்கொண்டு வந்தார். பின் ஒவ்வொரு நிமிடமும் அவர்களுக்கு என்ன தேவையென்று விசாரித்து உபசரிப்பதில் ஈடுபட்டிருந்தார். விருந்தாளிகளுக்கு விடை கொடுத்து அனுப்பத் தம் கணவருடன் விமான நிலையத்துக்கும் சென்றார்.

வரும் ஆண்டுகளில் தமிழ்த் திருவிழா நடக்கலாம்; சிறப்பாகவும் நடைபெறலாம். ஆனால் இத்தகைய தலைசிறந்த தமிழ்ப் பண்பாட்டை வேறு எங்கே காணப் போகிறோம்?

ஆகவே, "புறப்படட்டுமா?" "புறப்பட்டே விடட்டுமா?" என்று கேட்டுக் கொண்டு காலங் கடத்தினோம். ஆகாச விமானம் நாம் இன்றியே ஒருவேளை புறப்பட்டுப் போய் விட்டால் இன்னும் ஒரு நாள் யாழ்ப்பாணத்தின் தமிழ்க் காற்றை அநுபவிக்கலாமே என்றுதான்! ஆனால் அந்த விமானத்துக்கும் அதே எண்ணம் அன்றைக்குத் தோன்றி விட்டது! கொழும்புக்கு அருகில் புயல் அடிக்கிறது என்ற காரணத்தினால் இரண்டு மணி நேரம் தாமதித்து விமானம் புறப்பட்டது. அந்த இரண்டு மணி நேரமும் எங்களுக்குக் கிடைத்த லாபம் என்றே தோன்றியது. யாழ்ப்பாணத்து நண்பர்களுடன் விமான நிலையத்தில் தமிழ் விழாவின் சிறப்புக்களைப் பற்றிப் பேசிக் கொண்டி



ஸ்ரீமதி சிவகாம சுந்தரி: டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ்
(உபசரிப்பு: உணவு)

ருக்க முடிந்ததல்லவா? பேச்சின் இடையில் அவர்களுக்கு எச்சரிக்கையும் செய்து வைத்தேன். இதுவரையில் எல்லாம் குதூகலமாகவே முடிந்துவிட்டன. இனி மேல் குறை கூறும் படலம் ஆரம்பமாகி விடும்! நாலாபுறமும் தாக்குதலுக்கு உள்ளாவீர்கள். வில்வாத்ரி ஐயரின் கடம் பட்ட பாடு நீங்களும் படும்படி நேரிடலாம்!" என்றேன்.

* * *

ஏதோ அரசியல் லாபத்தைக் கருதித் தமிழ் விழா நடத்தினர்கள் என்ற பேச்சு யாழ்ப்பாணத்திலிருக்கும் போதே எங்கள் காதில் விழுந்து விட்டது. இது எவ்வளவு பிழையான கருத்து என்பதை அநுபவத்திலிருந்து நான் சொல்ல முடியும். இம்மாதிரி விழாக்களை நிர்வகித்து நடத்துகிறவர்கள் முடிவில் பெறும் லாபம் பல நண்பர்களின் மனஸ்தாபந்தான். "பேச இடந் தரவில்லை" என்று சிலர் கோபப்படுவார்கள். "மேடையில் இடந் தரவில்லை" என்று வேறு சிலர் கோபிப்பார்கள். "பேசுவதற்குப் போதிய அவகாசம் தரவில்லை" என்று இன்னும் சிலர் தாபப்படுவார்கள். "தொண்டர்களாம் தொண்டர்கள்! என்னைப் பந்தல் முகப்பில் நிறுத்தி விட்டார்கள்!" என்று ஆத்திரப்படுவார்கள். "கவனிப்புப் போதவில்லை" "தனிப்பட உபசரிக்கவில்லை" என்றெல்லாம் குறைப்படுவோரும் உண்டு.



ஸ்ரீமதி எம். எல். வசந்த குமாரி.
(இசை விருந்து)

யாழ்ப்பாணத் தமிழ் விழாவை நடத்திய நிர்வாகிகளில் அரசியல் தொடர்பு உடையவர்கள் முக்கியமாக ஸ்ரீ எஸ். நடேச பிள்ளையும், கனம் கே. கனகரத்தினமும் ஆவார்கள். தமிழ் விழாவினால் இவர்களுக்கு முன் இல்லாத பிரபலம் புதிதாக ஏற்பட்டு விடவில்லை. பல மாத காலம் அல்லும் பகலும் உழைத்தார்கள்; பணம் வசூலித்தார்கள்; பாடுபட்டார்கள்; கவலைப்பட்டார்கள். மற்றப்படி வேறு லாபம் எதையும் அவர்கள் அடையவில்லை. லாபம் அவர்களுக்குத் தேவையும் இல்லை. தாயினிடம் பக்தி செலுத்துவதற்கு லாபம்வேண்டுமா? தமிழ்த் தாயைப் போற்றுவோர் தமிழின்பம் என்னும் தலை சிறந்த லாபத்தை அடைகிறார்கள். வேறு லாபம் அவர்களுக்கு எதற்கு?

கடைசியில், விமானம் ஒருமாதிரி மனதைத் திடப்படுத்திக் கொண்டு புறப்பட்டது. நாங்களும் செய்காட்டிலிருந்து நாய்காடு வந்து சேர்ந்தோம். எனக்கு முன்னாலேயே இலங்கைத் தமிழன்பர் ஒருவர் எழுதி யனுப்பிய பின்வரும் பாடல் வந்து காத்திருந்தது. தமிழ் விழாவைக் கண்டு களித்த பல்லாயிரம் தமிழ் மக்களின் மனோநிலையை இந்தப் பாடல் உண்மையாகப் பிரதிபலிக்கிறது என்று கருதுகிறேன். ஆகையால் அதை இங்கு வெளியிடுகிறேன். (எழுதியவர்: கல்வியர் துறை திரு நாகராஜன்.)

1 கல்வித் தமிழினைக் கண்டேன்—கவி
காட்டிடும் இன்ப ஊற்றினைக் கண்டேன்
சின்ன உளி கொண்டு செய்த—கலைச்
சிற்பம் கதை பல கூறிடல் கண்டேன்

2 யாழ் நகர் காணாத கூட்டம்—தன்னை
யானன்று தமிழ்விழா தன்னிலே கண்டேன்
'பாழ்பட்டு நிற்கின்ற' தென்று—அன்று
பாரதி நொந்ததும் பழங் கனவாச்சு!

3 வள்ளுவரும் அங்கு நின்றார்—சபையில்
வாதிட்ட நக்கீரனும் அங்கு நின்றார்
தெள்ளு தமிழெனக் கூறி—அயலார்
திகைத்திடச் செய்திட்ட பாரதி நின்றார்

4 கூழுக்குப் பாடிய ஒளவை—தமிழ்க்
கூழ் குடிப்போ மென்று அங்ஙனே நின்றார்
ஊழுக்கிரையான அம்மை—தன்னை
ஊரறியச் செய்த இளங்கோவும் நின்றார்

5 கல்விக் கடலெனக் கூறும்—கவி
கம்பனை அங்கொரு கம்போடு கண்டேன்!
சொல்சிறந்த தமிழ் வெள்ளம்—அங்கு
சொற் பெருக்காக வழிந்ததும் கண்டேன்!

தமிழ் நாட்டுக்கும் ஈழ நாட்டுக்கும் உள்ள தொடர்பு என்றென்றும் நிலைத்திருக்குமாறு தமிழ்த்தாய் அருள் புரியட்டும்.

பொன்னியின் செல்வன்



கல்கி

அத்தியாயம் 7

"சமுத்திர குமாரி"

அன்று பகற்பொழுது வந்தியத் தேவனுக்கு எளிதில் போய்விட்டது. பாதி நேரத்துக்கு மேல் தூங்கிக் கழித்தான். விழித்திருந்த நேரமெல்லாம் பூங்குழலியின் விசித்திரமான சுபாவத்தைப் பற்றி எண்ணுவதில் சென்றது. என்ன அதிசயமான பெண்! எவ்வளவு இனிய சரளமான பெயர்? ஆனால் சுபாவம் எவ்வளவு கடுமையானது? 'கடுமை' மட்டுந்தானா? அதில் இனிமையும் கலந்துதானிருந்தது! சிறுத்தையை அடித்துக் கொன்ற காரியத்தைப் பற்றி எவ்வளவு சர்வ சாதாரணமாகக் கூறினாள்? எவ்வளவு அறிவுக் கூர்மை? எவ்வளவு முன் யோசனை?—இவ்வளவுடன் சில சமயம் உன்மத்தம் பிடித்தவள் மாதிரி நடந்து கொள்கிறாளே, அது ஏன்? இந்தப் பெண்ணின் வாழ்க்கையில் ஏதோ ஒரு கசப்பான சம்பவம் நடந்திருக்க வேண்டும்! கசப்பான சம்பவமோ, அல்லது இனிப்பான சம்பவந்தானோ? இரண்டினாலும் இப்படி ஒரு பெண் உன்மத்தம் பிடித்தவள் ஆகியிருக்கக் கூடும்! அல்லது ஒன்றுமே காரணமில்லாமல், பிறவியிலேயே இத்தகைய இயற்கையுடன் பிறந்தவளோ? இவளுடைய பெற்றோர்களின் இயற்கையில் விசேஷம் ஒன்றையும் காண வில்லையே? இனிய, சாந்த சுபாவம் படைத்தவர்களாயிருக்கிறார்களே!......குணம் எப்படியாவது இருக்கட்டும்! நம்மிடம் இவளுக்கு இவ்வளவு சிரத்தை ஏற்பட்டதன் காரணம் என்ன? பழுவூர் ஆட்களிடம் நாம் பிடிபடாமல் தப்புவிப்பதற்கு இவ்வளவு பிரயத்தனம் செய்திருக்கிறாளே? இலங்கைக்குப் படகு வலித்துக்கொண்டு வருவதாகவும் சொல்லியிருக்கிறாளே? இதிலெல்லாம் ஏதாவது ஏமாற்றம் இருக்குமோ?... ஒருநாளும் இல்லை. ஆனாலும் இவள் மனம் மாறியதன் காரணம் என்ன? நம்மிடம் இவள் எந்தவிதப் பிரதி உபகாரத்தை எதிர் பார்க்கிறாள்? பின்னால் கூறுவதாகக் கூறியிருக்கிறாளே! அது என்னவாயிருக்கும்?...

இவ்வாறு வந்தியத்தேவன் சிந்தனை செய்து கொண்டிருந்த சமயங்களில், பூங்குழலி கூறியிருந்தது போலவே, அவனைச் சுற்றி நாலாபுறங்களிலும் அடிக்கடி அமளி துமளிப்பட்டது. குதிரைகளின் ஓட்டம், மனிதர்களின் அட்டகாசம், சிறிய வன ஜந்துக்களின் பயம் நிறைந்த கூச்சல், பறவைகள் கிறீச்சிடுதல் — இவ்வளவும் சேர்ந்து சில சமயம் ஓரே அமர்க்களமாயிருந்தது. அடுத்தாற்போல் அமைதி குடிகொண்டு நிச்சப்தமாயுமிருந்தது. அமர்க்களப்பட்டதெல்லாம் தன்னைத்-

தேடிப் பிடிப்பதற்காகத்தான் என்று வந்தியத்தேவன் உணர்ந்தான். வைத்தியரின் மகன் செய்த துரோகமும் அவனுடைய மனதில் அடிக்கடி வந்து கொண்டிருந்தது. நிர்மூடன்! பூங்குழலியிடம் அதற்குள் மையல் கொண்டு விட்டதாக அவனுக்கு எண்ணம் போலும்! சிறிய குட்டையில் உள்ள தண்ணீர் வடவாமுகாக்கினியின் மீது காதல் கொண்டது போலத்தான்! பெண் சிங்கத்தை ஒரு சுண்டெலி கலியாணம் செய்து கொள்ள எண்ணிய கதைதான்! ஆனாலும் அவனுடைய அறிவீனத்தை இந்தப் பெண் எப்படிப் பயன்படுத்திக் கொண்டு விட்டாள்! அவனுடைய மனதில் எவ்விதம் பொறாமைக் கனலை மூட்டிவிட்டாள்?......அரை நாழிகை நேரத்தில் அவனைத் துரோகி யாக்கி விட்டாளே! பெண்மையின் சக்தி அபாரமானதுதான்!

வந்தியத்தேவா! ஒன்றுமட்டும் நீ ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்! நீ உன்னை வெகு கெட்டிக்காரன் என்று எண்ணி யிருந்தாய்! தந்திர மந்திர சாமர்த்தியங்களில் உனக்கு இணை யாரும் இல்லை என்று இறுமாந்திருந்தாய்! ஆனால் இந்த நாகரிகமறியாத காட்டு பிராண்டிப் பெண் உன்னைத் தோற்கடித்து விட்டாள்! கடலில் இறங்கிக் குளித்துக் கொண்டிருந்த உன்னை இந்த மறைந்த மண்டபத்தில் கொண்டு சேர்ப்பதற்கு அவள் கையாண்ட யுக்தியை என்னவென்று சொல்வது? அப்படி அவன் உன் அரைச் சுற்றுச் சுருளை எடுத்துக் கொண்டு ஓடியிரா விட்டால், இத்தனை நேரம் என்ன ஆகி யிருக்கும்? பழுவூர் ஆட்களிடம் நீ சிக்கி யிருப்பாய்! காரியம் அடியோடு கெட்டுப் போயிருக்கும்!.........ஆம்; இனி எப்போதும் இம்மாதிரி அஜாக்கிரதையாக இருந்துவிடக் கூடாது.

மேற்குக் கடலில் சூரியன் அஸ்தமித்தது. கோடிக்கரையில் இது ஓர் அற்புதமான காட்சி. அதுவரை தெற்கு நோக்கி வரும் கடற்கரை அந்த மூலையில் நேர்கோணமாக மேற்கு நோக்கித் திரும்பிச் செல்கிறது. ஆதலின் கோடிக்கரையில் மேடான இடத்திலிருந்து பார்த்தால், கிழக்கு-மேற்கு-தெற்கு ஆகிய மூன்று திசைகளிலும் கடல் பரந்திருக்கக் காணலாம். சிற்சில மாதங்களில் சூரிய சந்திரர்கள் கிழக்குக் கடலில் ஜோதி மயமாக உதயமாவதையும் பார்க்கலாம்; மேற்கே கடலைத் தங்கமயமாகச் செய்துகொண்டு மூழ்கி மறைவதையும் காணலாம். வந்தியத்தேவனுக்கு, மண்டபத்தை மூடியிருந்த மணல் திட்டின் மேல் ஏறிச் சூரியன் கடலில் மறையும் காட்சியைப் பார்க்க ஆவல் உண்டாயிற்று. அதைப் பிரயத்தனப்பட்டு அடக்கிக் கொண்டான்.

நாலாபுறமும் அந்தகாரம் சூழ்ந்து வந்தது. மறைந்த மண்டபத்தில் முன்னமே குடிகொண்டிருந்த இருள் பன்மடங்கு கரிய தாயிற்று. வந்தியத்தேவனால் அங்கே மேலும் இருக்க முடியவில்லை. வெளியேறி வந்தான். மண்டபத்தை மூடிய மணல் திட்டின் மீது நின்றான். வெகு தூரத்தில் கலங்கரை விளக்கின் ஒளி தெரிந்தது. வானத்தில் வைர மணிகள் சுடர்விட்டு ஜொலித்தன. காட்டில் பல விசித்திரமான ஒலிகள் உண்டாயின. பகலில் வனப் பிரதேசத்தில் கேட்கும் ஒலிகளுக்கும் இரவில் கேட்கும் ஒலிகளுக்கும் மிக்க வேற்றுமை இருந்தது. இரவில் கேட்கும் ஒலிகள் மர்மம் நிறைந்து உள்ளத்தில் பீதியையும் உடலிலே சிலிர்ப்பையும் உண்டாக்கின. பகலில் எதிரே புலியைப் பார்த்தாலும் மனம் பதறுவதில்லை; பயமும் உண்டாவதில்லை. இரவில் ஒரு புதரில் சின்னஞ்சிறு எலி ஓடினாலும் உள்ளம் திடுக்கிடுகிறது!

இதோ குயிலின் குரல். 'குக்கூ!' 'குக்கூ!' அந்தக் குரல் தேவகானத்தைப் போல் வந்தியத்தேவன் காதில் ஒலித்தது. குரல் வந்த திக்கை நோக்கிச் சென்றான். பூங்குழலி அங்கு நின்றாள். 'சத்தம் செய்யாமல் என்னுடன் வா!' என்று சமிக்ஞை செய்தாள். அங்கிருந்து கடற்கரை வெகு சமீபம் என்று தெரிய வந்தது.

கடற்கரையில் படகு ஆயத்தமாயிருந்தது. அதில் பாய்மரமும் பாயும் அதைக் கட்டும் கயிறும் சுருட்டி வைக்கப்பட்டிருந்தன. படகிலிருந்து இரண்டு கழிகள் நீட்டிக் கொண்

டிருந்தன. அந்தக் கழிகளின் முனையில் ஒரு பெரிய மரக் கட்டை பொருத்திக் கட்டப்பட்டிருந்தது.

படகைக் கடலில் இறக்குவதற்கு வந்தியத்தேவன் உதவி செய்யப் போனான். 'நீ சும்மா இரு!' என்று பூங்குழலி சமிக்ஞை செய்தாள். படகை லாகவமாகத் தள்ளிக் கடலில் இறக்கினாள். சிறிதும் சத்தமின்றிக் கடலில் அப்படகு இறங்கியது.

வந்தியத் தேவன் படகில் ஏறிக் கொள்ள யத்தனித்தான். "உஷ்! சற்றுப் பொறு! கொஞ்சதூரம் போன பிறகு நீ ஏறிக் கொள்ளலாம்!" என்று பூங்குழலி மெல்லிய குரலில் கூறி விட்டுப் படகைப் பிடித்து இழுத்துக் கொண்டே போனாள்.

வந்தியத் தேவன் தானும் உதவி செய்ய எண்ணிப் படகைத் தள்ளினான். படகு நின்று விட்டது. "நீ சும்மா வந்தால் போதும்!" என்றாள் பூங்குழலி. கரை ஓரத்தில் அலை மோதும் இடத்தைத் தாண்டிய பிறகு "இனிமேல் படகில் ஏறிக் கொள்ளலாம்!" என்று சொல்லி, அவள் முதலில் ஏறிக்கொண்டான். வந்தியத்தேவனும் தாவி ஏறினான். அப்போது படகு அதிகமாக ஆடியது. அந்த ஆட்டத்தில் வந்தியத்தேவன் கடலில் விழுந்து விடுவான் போலத் தோன்றியது. சமாளித்துக் கொண்டு உட்கார்ந்தான். ஆயினும் அவனுடைய நெஞ்சு பட பட வென்று அடித்துக் கொண்டது.



"இனி மேல் ஏதாவது பேசலாம் அல்லவா?" என்று கேட்டான்.

"நன்றாகப் பேசலாம். உனக்கு நடுக்கம் நீங்கியிருந்தால் பேசலாம்!" என்றாள் பூங்குழலி.

"நடுக்கமா? யாருக்கு நடுக்கம்? அதெல்லாம் ஒன்றுமில்லை."

"ஒன்றுமில்லாவிட்டால் சரி!"

"பாய்மரம் கட்ட வேண்டாமா?"

"பாய்மரம் கட்டினால் கரையில் உள்ளவர்கள் ஒருவேளை நம்மைப் பார்த்து விடுவார்கள். ஓடி வந்து பிடித்துக் கொள்வார்கள்."

"இனி அவர்கள் வந்தால் ஒரு கை பார்த்து விடுகிறேன். நீ கொஞ்சமும் பயப்பட வேண்டாம்!" என்று வந்தியத்தேவன் தன் வீரப் பிரதாபத்தைச் சொல்லத் தொடங்கினான்.



"இப்போது எதிர்க் காற்று அடிக்கிறது. பாய்மரம் விரித்தால் படகை மறுபடி கரையிலே கொண்டுபோய் மோதும். நடுநிசிக்கு மேல் காற்றுத் திரும்பக் கூடும். அப்போது பாய்மரம் விரித்தால் பயன்படும்!" என்று பூங்குழலி கூறினாள்.

"ஓ! உனக்கு இதெல்லாம் நன்றாய்த் தெரிந்திருக்கிறது. அதனாலே தான் உன்னை அழைத்துப் போகும்படி உன் தந்தை சொன்னார்."

"என் தந்தையா? யாரைச் சொல்லுகிறாய்?"

"உன் தகப்பனாரைத்தான் சொல்லுகிறேன். கலங்கரை விளக்கின் காவலர் தியாக விடங்கக் கரையரைச் சொல்லுகிறேன்."

"கரையில் இருக்கும் போதுதான் அவர் என்னுடைய தந்தை. கடலில் இறங்கி விட்டால்..."

"தகப்பனார் கூட மாறிப் போய் விடுவாரா, என்ன?"

"ஆமாம்; இங்கே சமுத்திரராஜன் தான் என் தகப்பனார். என்னுடைய இன்னொரு பெயர் சமுத்திர குமாரி. உனக்கு யாரும் சொல்லவில்லையா?"

"சொல்லவில்லை! அது என்ன விசித்திரமான பெயர்?"

"சக்கரவர்த்தியின் இளைய குமாரரைப் '**பொன்னியின் செல்வன்**' என்று சிலர் சொல்லுகிறார்கள் அல்லவா? அதுபோலத்தான்!"

இதைக் கேட்டதும் வந்தியத்தேவன் தனது அரைச்சுற்றுச் சுருளைத் தடவிப் பார்த்துக் கொண்டான்.

அதைக் கவனித்த பூங்குழலி, "பத்திரமாக இருக்கிறதல்லவா?" என்று கேட்டாள்.

"எதைப் பற்றிக் கேட்கிறாய்?"

"உன் அரைச் சுருளில் வைத்திருக்கும் பொருளைப் பற்றித்தான்."

வந்தியத் தேவனுடைய மனதில் 'சொரேல்' என்றது. ஒரு சிறிய சந்தேகம் ஜனித்தது.

அவனுடன் பேசிக் கொண்டே பூங்குழலி துடுப்பை வலித்துக்கொண்டிருந்தாள். படகு போய்க் கொண்டிருந்தது.

"இலங்கைத் தீவுக்கு நாம் எப்போது போய்ச் சேரலாம்?" என்று கேட்டான் வந்தியத் தேவன்.

"இரண்டு பேராகத் துடுப்பு வலித்தால் பொழுதுவிடியும் சமயம் போய்ச் சேரலாம்; — காற்று நமக்கு உதவியாக இருந்தால்!"

"நானும் துடுப்பு வலிக்கிறேன். உன்னைத் தனியாகவிட்டு விடுவேனா?"

வந்தியத்தேவன் தன் அருகிலிருந்த துடுப்பைப் பிடித்து வலித்தான். ஆ! படகு வலிப்பது இலேசான வேலை அன்று. மிகவும் கடினமான வேலை. படகு விர் என்று சுழன்று அடியோடு நின்று விட்டது.

"இது என்ன? நீ துடுப்பை வலித்தால் படகு போகிறது; நான் தொட்டவுடனே நின்று விட்டதே!"

"நான் சமுத்திர குமாரி யல்லவா? அதனாலேதான்! நீ சும்மா இருந்தால் போதும்! உன்னை எப்படியாவது இலங்கையில் கொண்டு போய்ச் சேர்த்து விடுகிறேன். சரிதானே?"

வந்தியத் தேவன் சிறிது வெட்கமுற்றான். சற்று நேரம் சும்மா இருந்தான். சுற்று முற்றும் பார்த்தபோது, படகிலிருந்து நீட்டிக் கொண்டிருந்த கழிகளும் கட்டையும் அவன் கண்ணில் பட்டன.

"இந்தக் கட்டை என்னத்திற்கு?" என்று கேட்டான்.

"படகு அதிகம் ஆடாமல் இருப்பதற்காக."

"இதைக் காட்டிலும் படகு அதிகம் ஆடுமா என்ன? இப்போதேதான் வேண்டிய ஆட்டம் ஆடுகிறதே! எனக்குத் தலை சுற்றும் போலிருக்கிறது."

"இது ஒரு ஆட்டமா? ஐப்பசி - கார்த்திகையில் வாடைக்காற்று அடிக்கும் போதல்லவா பார்க்கவேண்டும்?"

கரையிலிருந்து பார்த்தால் கடல் அமைதியாகத் தகடு போல் இருப்பதாகத் தோன்றியது. ஆனால் உண்மையில் அவ்விதம் இல்லையென்பதை வந்தியத்தேவன் கண்டான். நுரையில்லாத அலைகள் எழும்பி விழுந்து கொண்டுதானிருந்தன. அவை அப்படகைத் தொட்டில் ஆட்டுவதுபோல் ஆட்டிக் கொண்டிருந்தன.

"பெருங் காற்று அடிக்கும்போது இந்தக் கட்டை என்ன ஆகும்?"

"எவ்வளவு பெரிய காற்று என்பதைப் பொறுத்தது. சாதாரணமாய்ப்

பெருங் காற்று அடித்தாலும் இந்தக் கட்டை படகைக் கவிழாமல் நிறுத்தி வைக்கும். ஒருவேளை சுழிக் காற்று அடித்துப் படகு கவிழ்ந்து விட்டால் இந்தக் கட்டையைப் படகிலிருந்து அவிழ்த்து விட்டு விடலாம். அதைப் பிடித்துக் கொண்டு உயிர் தப்புவதற்குப் பார்க்கலாம்''

''ஐயோ! காற்றில் படகு கவிழ்ந்து விடுமா, என்ன?''

''சுழிக் காற்று அடித்தால் பெரிய பெரிய மரக்கலங்கள் எல்லாம் சுக்கு நூறாகிவிடும். இந்தச் சிறிய படகு எம்மாத்திரம்?''

''சுழிக்காற்று என்றால் என்ன?''

''இதுகூடத் தெரியாதா? ஒரு பக்கமிருந்து அடிக்கும் காற்றும் இன்னொரு பக்கத்திலிருந்து அடிக்கும் காற்றும் மோதிக் கொண்டால் சுழிக் காற்று ஏற்படும். இங்கே தை மாசி மாதங்களில் 'கொண்டல் காற்று' அடிக்கும். அப்போது அபாயமே இல்லை. சுலபமாகக் கோடிக் கரைக்கும் இலங்கைக்கும் போய் வரலாம். இரவுக்கிரவே போய்விட்டுத் திரும்பலாம். வைகாசியிலிருந்து 'சோழகக் காற்று' அடிக்கும். சோழகக் காற்றில் இங்கிருந்து இலங்கை போவது கொஞ்சம் சிரமம். இப்போது சோழகக் காற்றுக்கும் வாடைக் காற்றுக்கும் இடையில் உள்ள காலம். கடலில் சில சமயம் காற்றும் காற்றும் மோதிக்கொள்ளும். மத்தினால் தயிர் கடைவது போல் காற்று கடலைக் கடையும். மலை போன்ற அலைகள் எழும்பி விழும். கடலில் பிரம்மாண்டமான பள்ளங்கள் தென்படும். அப் பள்ளங்களில் தண்ணீர் கர கர வென்று சுழலும். அந்தச் சுழலில் படகு அகப்பட்டுக் கொண்டால் அரோகராதான்!''

வந்தியத் தேவனுக்குத் திடீரென்று மனதில் ஒரு திகில் உண்டாயிற்று. அத்துடன் ஒரு சந்தேகமும் உதித்தது.

''ஐயோ! நான் வரவில்லை! என்னைக் கரையிலே கொண்டுபோய் விட்டு விடு!'' என்று கத்தினான்.

''என்ன உளறுகிறாய்? பேசாமலிரு! பயமாயிருந்தால் கண்ணை மூடிக்கொள். இல்லாவிட்டால் படுத்துத் தூங்கு!''

வந்தியத் தேவனுடைய சந்தேகம் இப்பொழுது உறுதிப்பட்டது.

''நீ பெரிய மோசக்காரி! என்னைக் கடலில் மூழ்க அடிப்பதற்காக அழைத்துப் போகிறாய். நான் தூங்கினால் உன் காரியம் மிகவும் சுலபமாகும் என்று பார்க்கிறாய்!''

''இது என்ன பைத்தியம்?''

''எனக்கு ஒன்றும் பைத்தியம் இல்லை! படகைத் திருப்புகிறாயா, இல்லையா? திருப்பாவிட்டால் கடலில் குதித்து விடுவேன்!''

''தாராளமாய்க் குதி! ஆனால் குதிப்பதற்கு முன்னால் பொன்னியின் செல்வனுக்கு நீ எடுத்துப் போகும் ஓலையை எடுத்து என்னிடம் கொடுத்து விடு!''

''ஓ! அந்த ஓலையைப் பற்றி உனக்கு எப்படித் தெரிந்தது?''

''உன் இடுப்பில் சுற்றியிருக்கும் சுருளை அவிழ்த்துப் பார்த்ததில் தெரிந்தது. நீ யார், எதற்காக இலங்கை போகிறாய் என்று தெரிந்து கொள்ளாமல் உனக்குப் படகு தள்ளச் சம்மதித்திருப்பேனா? காலையில் மரத்தின்மேல் உட்கார்ந்து உன் அரைச் சுருளை அவிழ்த்து ஓலையைப் பார்த்தேன்......''

''மோசக்காரி! உன்னை நம்பி வந்து விட்டேனே? படகைத் திருப்புகிறாயா, மாட்டாயா?''

வந்தியத் தேவனுடைய திகிலும் வெறியும் பன்மடங்கு ஆயின. ''படகைத் திருப்பு! படகைத் திருப்பு!'' என்று அலறினான்.

''நான் மட்டும் இளையபிராட்டி குந்தவையாக இருந்திருந்தால் இவ்வளவு முக்கியமான ஓலையை உன்னைப் போன்ற சஞ்சல புத்திக்காரனிடம் கொடுத்து அனுப்பியிருக்க மாட்டேன்!'' என்றாள் பூங்குழலி.

''ஓகோ! ஓலை கொடுத்தது யார் என்று கூட உனக்குத் தெரிந்திருக்கிறதே! நீ வஞ்சகி என்பதில் சந்தேகமில்லை. படகைத் திருப்புகிறாயா? கடலில் குதிக்கட்டுமா?''

''குதி! தாராளமாய்க் குதி!'' என்றாள் பூங்குழலி.

வெறி கொண்ட வந்தியத்தேவன் தொப்பென்று கடலில் குதித்தான். கரையோரத்தில் இருந்ததுபோல் தண்ணீர் கொஞ்சமாக இருக்குமென்று எண்ணிக் குதித்தான். அதற்குள்ளே படகு நீச்சு நிலைகொள்ளாத ஆழமான கடலுக்கு வந்து விட்டது என்பதை

"நீங்கள் என் வீணாகப் பயப்படுகிறீர்கள்? நான் சுமங்கலியாக மஞ்சள் குங்குமத்தோடு போகிறேனே, அதுவே எனக்குப் பெரிய சந்தோஷம்!"

"இப்படியெல்லாம் பேசாதே மீனாக்ஷி! உனக்கு உடம்பு சீக்கிரம் குணமாகி விடும்!"

"நீங்கள் என்னவோ பெண்டாட்டி என்கிற ஆசையால் சொல்கிறீர்கள்? ஆனால் நான் நம்பவில்லை!"

ஆசையா! மீனாக்ஷியின் பேரில் அவள் கணவருக்கு ஆசை என்று சொன்னால் நேற்றுப் பிறந்த குழந்தை கூடக் கை கொட்டிச் சிரிக்குமே! அவரை அவள் ஆட்டி வைத்ததெல்லாம் ஊர் அறிந்திருந்தது!

"அம்மா, லக்ஷ்மி! இங்கே வா!" என்றாள் மீனாக்ஷி ஆதரவுடன்.

கலங்கிய கண்களுடன் பெண் லக்ஷ்மி தன் தாயாரருகில் வந்தாள்.

"என் கண்ணே! உன்னைத் தாண்டியம்மா ஒருவன் கையில் ஒப்பிக்காமல் போகிறேன்! அந்த ஒரு கவலைதான் எனக்கு" என்று சொல்லும்பொழுதே மளமளவென்று அவள் கண்களிலிருந்து நீர் பெருகியது.


"இந்தாருங்கள்! குழந்தைக்கு எப்படியாவது நல்ல இடமாகப் பார்த்துக் கூடிய சீக்கிரம் கல்யாணம் செய்து வையுங்கள்."

இதைச் சொல்லி முடித்ததும் மீனாக்ஷியம்மாள் ஆதரத்துடன் தன் மகளை இறுக அணைத்துக் கொண்டாள். லக்ஷ்மியும் விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள்.

"அழாதே அம்மா! ஆனால் எனக்கு ஒரு விதத்திலே கவலை விட்டது! உன்னை உன் மன்னியிடம் விட்டு விட்டுப் போகிறேன். அவள் கண்போல உன்னைப் பார்த்துக் கொள்ளுவாள்."

அதைக்கேட்ட எல்லோருக்கும் ஒரேயடியாகத் தூக்கி வாரிப் போட்டது. மீனாக்ஷியம்மாளே தன் வாயால் தன் நாட்டுப் பெண்ணை நல்லவள் என்று சொல்கிறாளே?

"லக்ஷ்மி அழாதே, அம்மா! உன்னை நல்ல இடத்திலே கொடுக்கச் சொல்லியிருக்கிறேன். நான் போன பிறகு என் இரட்டை வடம் சங்கிலியையும் காசு மாலையையும் நீ எடுத்துக் கொள். அதை எல்லாம் அப்படியே போட்டுக் கொண்டாலும் சரி, அழித்து வேறு நகை பண்ணிப் போட்டுக் கொண்டாலும் சரி, அது உன் சொத்து! அப்புறம் அந்தக் காப்பிக் கொட்டைச் செயினையும், நாக வொத்து ஒட்டியாணத்தையும் மன்னியிடம் கொடுத்து விடு!"



பண்டாரம்:—நாதக்க...தைந்நா...

பிச்சையிடுபவர்:—ஏனப்பா பண்டாரம்! முன்னெல்லாம் தேவாரம், திருவாசகம் சொல்லிக் கொண்டு வருவே, திடீரென்று இப்படி நரிக்குறவன் மாதிரி கிளம்பி விட்டாயே!

பண்டாரம்:—இந்நிலே வரும்படி அதிகமாக இருக்கு என்று இதை எடுத்துக் கொண்டேன்.

காமு திடுக்கிட்டாள். நல்ல நாள் கிழமைகளில் சொந்த நகைகளைக் கூடப் போட்டுக் கொள்ளக் கூடாது என்று சொல்லிப் பெட்டியில் வாங்கி வைத்துக் கொள்ளும் மாமியாரா இப்படிப் பேசுகிறாள் என்று அவளுக்கு வியப்பாக இருந்தது.

"கோபு எங்கே?"

கோபு பிள்ளையின் பெயர்.

"டாக்டரோடு ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறான். இதோ வந்து விடுவான்" என்று பதில் சொன்னார் அவள் கணவர்.

"உம்! அம்மா காமு, இங்கே வா!"

காமு மெள்ள மாமியாரை நெருங்கினாள்.

"உட்காரு, அம்மா! நிற்கிறாயே? நான் உன்னை ரொம்பப் படுத்தினேன் என்று ஊரிலே பலர் பேசிக் கொள்கிறார்கள்!"

"அதெல்லாம் ஒன்றுமில்லையம்மா! உங்கள் தங்கமான குணம் எனக்குத் தெரியாதா, என்ன?" என்றாள் காமு பவ்யமாக.

இது பொய்! மீனாக்ஷியம்மாளுக்கு நன்றாகத் தெரியும், அவள் மனமார இந்த வார்த்தையைச் சொல்லவில்லை என்று!

"அம்மா, காமு! நீ ரொம்ப நல்லவள். பத்தரை மாற்றுத் தங்கம் என்றாலும் அது உனக்குத் தகும். நான் ஏதாவது முன்னே பின்னே உன்னைச் சொல்லியிருந்தாலும்

குழலி படகை அவனை நோக்கிச் செலுத்தினாள். ஒரு கொடிப் பொழுதில் படகு அவனுக் கருகில் நெருங்கி விட்டது. "வா! வா! வந்து ஏறிக் கொள்!" என்றாள். ஆனால் அவன் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. விழுந்தாலும் படகைப் பிடித்து ஏறிக் கொள்ளப் போகிறவனாகத் தெரிய வில்லை. கேட்கும் சக்தியோடு பார்க்கும் சக்தியையும் இழந்து விட்டதாகத் தோன்றியது. ஆனால் அலறும் சக்தி மட்டும் இருந்தது. ஒரு கையை மேலே தூக்கி, தலையை மேலாக நிமிர்த்தி, 'ஓ!' என்று ஒரு கணம் அலறினான். சகல நம்பிக்கையையும் இழந்து மூழ்கிச் சாகப் போகிறவனுடைய ஓலக் குரல் அது என்பதைப் பூங்குழலி அறிந்தாள். அவன் தலையை நிமிர்த்திய போது பிறைச் சந்திரனின் மங்கிய நிலா வெளிச்சத்தில் அவன் முகம் ஒரு கணம் தெரிந்தது. வெறி முற்றிய பைத்தியக்காரனின் முகந்தான் அது! அவனாக வந்து படகில் ஏறிக் கொள்வான் என்று நினைப்பது வீண்!— நாம்தான் அவனைக் காப்பாற்றிப் படகில் ஏற்றியாக வேண்டும்! நல்ல சங்கடத்தை நாமாக வரவழைத்துக் கொண்டோம்! 'பெண் புத்தி பின் புத்தி' என்று சொல்லுகிறார்களே, அது சரிதான்!

உடனே பூங்குழலி மிகப் பரபரப்புடன் சில காரியங்களைச் செய்தாள். படகில் கிடந்த பாய்மரம் கட்டுவதற்கான கயிற்றின் ஒரு முனையைப் படகிலிருந்து நீண்டிருந்த கட்டையில் சேர்த்துக் கட்டினாள். இன்னொரு முனையைத் தன் இடுப்போடு சேர்த்துக் கட்டிக் கொண்டாள். கடலில் குதித்தாள். வெகு லாகவமாகக் கைகளை வீசிப்போட்டு நீந்திக் கொண்டு போனாள். வந்தியத்தேவன் அருகில் சென்றாள். கையினால் தாவிப் பிடிக்கக் கூடிய தூரத்தில் நின்றுகொண்டாள்.

வந்தியத்தேவனும் அவளைப் பார்த்து விட்டான். அவனுடைய முகத்திலும் கண்களிலும் பயங்கரமான கொலை வெறி தாண்டவமாடியது.

பூங்குழலியின் உள்ளம் அதிவேகமாக இயங்கியது. நீந்தத் தெரியாதவர்களும் கை சளைத்துத் தண்ணீரில் மூழ்கப் போகிறவர்களும் கடைசி நேரத்தில் என்ன செய்வார்கள் என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது. தங்களைக் காப்பாற்றுவதற்காக யாராவது வந்தால், அப்படி வருகிறவர்களின் தோளையோ கழுத்தையோ கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விடுவார்கள்; காப்பாற்ற வருகிறவர்களும் நீந்த முடியாமல் செய்து விடுவார்கள். உயிரின் மேலுள்ள ஆசையானது அச்சமயம் அவர்களுக்கு ஒரு யானையின் பலத்தை அளித்து விடும். காப்பாற்ற வருகிறவர்களை இறுக்கிப் பிடித்துத் தண்ணீரில் அமுக்கப் பார்ப்பார்கள். அவர்களுடைய பயங்கர ராட்சதப் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ளவும் முடியாது; நீந்தவும் முடியாது. இரண்டு பேருமாகச் சேர்ந்து கடலுக்கு அடியில் போக வேண்டியதுதான்!

இதையெல்லாம் நன்கு அறிந்திருந்த பூங்குழலி மின்னல் வேகத்தில் சிந்தனை செய்தாள்; ஒரு தீர்மானம் செய்து கொண்டாள். உயிருக்கு மன்றாடித் தத்தளித்துக் கொண்டிருந்த வந்தியத்தேவனை மேலும் சிறிது நெருங்கினாள். அவனுடைய தலைப்பக்கமாக வந்தாள். ஒரு கையினால் நீந்திக்கொண்டு இன்னொரு கையை இறுக மூடி ஓங்கினாள். வந்தியத்தேவனுடைய முகத்தை நோக்கிப் பலமாக ஒரு குத்துக் குத்தினாள். மூக்குக்கும் நெற்றிக்கும் நடுவில் அந்தக் குத்து விழுந்தது. படகு வலித்து வலித்துக் கெட்டிப்பட்டிருந்த அவளுடைய கையினால் குத்திய குத்து வஜ்ராயுதம் தாக்கியதுபோல் வந்தியத்தேவனைத் தாக்கியது. அவனுடைய தலை ஆயிரமாயிரம் சுக்கலாயிற்று. அவனுடைய கண்கள் பதினாயிரம் துணுக்குகள் ஆயின. ஒவ்வொரு கண் துணுக்கிற்கு முன்னாலும் ஒரு லட்சம் மின் பொறிகள் ஜொலித்துக் கொண்டு பறந்தன. ஒவ்வொரு மின் பொறியிலும் சமுத்திர குமாரியின் முகம் தோன்றி ஹாஹா ஹாஹா என்று பேய்ச் சிரிப்புச் சிரித்தது. ஆயிரம், பதினாயிரம், லட்சம் பேய்களின் அகோரமான சிரிப்பின் ஒலியில் அவன் காது செவிடு பட்டது. அப்புறம் அவனுக்குக் காதும் கேட்கவில்லை; கண்ணும் தெரியவில்லை; நினைவும் இல்லை! முடிவில்லாத இருள்! எல்லையில்லாத மௌனம்! (தொடரும்)

புனர் ஜன்மம்

ரஸவாதி

மீனாக்ஷியம்மாள் மரணப் படுக்கையில் இருந்தாள். ஊரிலேயே மிகவும் பொல்லாதவள் என்று பெயர் வாங்கினவள். நாட்டுப் பெண்ணை அவள் படுத்தும் பாடு ஊர் அறியும். அவளுக்குத் தெருவில் உள்ள எல்லோருமே விரோதிகள்தான்!

மீனாக்ஷியம்மாளுக்கு நேரம் போகப் போகத் தன் சக்திகள் எல்லாம் ஒடுங்கி வருவது நன்றாகத் தெரிந்தது. ‘கடைசி காலத்தில் போகும்போது கெட்ட பெயரோடு போவானேன்?’ என்று யோசித்தாள்.

“ஏற்கனவேயே நான் ரொம்பப் பொல்லாதவள் என்று பெயர் எடுத்திருக்கிறேன். மாட்டுப்பெண் காமுவைக் கூடக் கொஞ்சம் கோணத்தில் தான் வைத்திருந்தேன். அதனால் அவளை நான் படுத்துகிறேன் என்று ஊரிலே பேசிக் கொள்கிறார்களாம்?” என்று அவள் தன் கணவரிடம் சொன்னாள்.

மன வேதனை தாங்காமல் அவள் புலம்புகிறாள் என்பதை வீட்டில் அனைவரும் உணர்ந்தனர். வாய் ஓயும்வரை புலம்பட்டும். அதனால் மனத்தில் உள்ள பாரம் குறையும் என்று விட்டு விட்டனர்.

அனாதரவாக விட்டுவிட்டுப் போகிறோமே என்று கவலைப்பட நல்ல வேளையாக அவளுக்குக் குழந்தை குட்டிகள் நிறைய இல்லை. ஒரு பிள்ளை. ஒரு பெண். அவ்வளவு தான். நாட்டுப்பெண் வீட்டுக்கு வந்தாகி விட்டது. பெண் புக்ககம் போகத்தான் இன்னும் வேளை வரவில்லை! அவள் புக்ககம் போயிருந்தால் அந்தக் கவலைகூட இல்லை.

வாசலில் ‘டக் டக்’ என்று பூட்ஸ் சத்தம் கேட்டது. டாக்டர் உள்ளே நுழைந்தார். “ஏன் இப்படி வீணாய் நடக்கிறீர்கள்? நான் என்னவோ பிழைக்கப் போகிறதில்லை” என்று சொல்லிப் படுக்கையில் புரண்டாள் மீனாக்ஷியம்மாள்.

“அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். நோயாளிக்கு மனோ தைரியம்தான் முக்கியம்! அது உங்களிடம் இல்லவே இல்லை!” என்று சொல்லியவாறே டாக்டர் நோயாளியைப் பரிசோதித்தார். உடனே அவர் முகத்தில் கவலையின் ரேகை படர்ந்தது. இருந்தாலும் சிறிது யோசனை செய்து விட்டு ஒரு இன்ஜெக்ஷன் கொடுத்தார்.

வெளியே வந்த டாக்டரைக் கணவரும் மகனும் கவலையுடன் பார்த்தனர்.

“என்ன செய்வது? ஒன்றும் சொல்வதற்கில்லை. மோசம் தான்......இன்ஜெக்ஷன் கொடுத்திருக்கிறேன்......பார்ப்போம்...... இன்று ஒரு நாள் பொழுது போனால் தான் நிச்சயம்...” என்று அவர்கள் முகத்தைப் பார்க்காமலேயே பதில் சொல்லிவிட்டு வாசலைப் பார்க்க நடந்தார் டாக்டர்.

எல்லோரும் இதைக் கேட்டதும் அயர்ந்து போனார்கள். என்னதான் பொல்லாதவளாக இருந்தாலும் சாகப் போகிறாள் என்று தெரிகிறபோது வருத்தப் படாமல் இருக்க முடிகிறதா?

உள்ளே முனகல் சத்தம் கேட்டது. ‘இந்தாருங்கள், உங்களைத்தானே? கொஞ்சம் இப்படி உள்ளே வாருங்கள். டாக்டர் என்ன சொன்னார்? ஏன் இப்படிக் கலங்குகிறீர்கள்? பிழைப்பது சந்தேகந்தான் என்று சொல்லி விட்டாரா? அதைச் சொல்வதற்கு டாக்டர் எதற்கு? கைப் புண்ணுக்குக் கண்ணாடி வேறு வேணுமா?”

“அதெல்லாம் ஒன்றுமில்லை, மீனாக்ஷி! கொஞ்சம் நீ அலட்டிக் கொள்ளாமல் இருந்தால் சரியாகப் போய்விடும் என்று தான் சொன்னார்” என்று கரகரத்த குரலில் பதில் சொன்னார் அவள் கணவர்.



மானேஜர் (ஆபீஸ் பையனைப் பார்த்து):—டேய், ஒரு தடவை மணி அடித்தால் கந்தசாமியும், இரண்டு தடவை மணி அடித்தால் நீயும் வரவேண்டும் என்று நான் சொன்னேனல்லவா? ஏன் இரண்டு தடவை மணி அடித்தும் நீ வரவில்லை?

ஆபீஸ் பையன் :— இல்லேங்க, கந்தசாமியைத்தான் இரண்டு தடவை கூப்பிட்டீங்களோன்னு நினைச்சேன்!

மனசிலே வைத்துக் கொள்ளாதே. நீ வைத்துக் கொள்ள மாட்டாய் என்று எனக்குத் தெரியும். கோபுவையும், உன் மாமனாரையும் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். இரண்டு பேரும் ரொம்ப சாது. பாவம், உன் வயிற்றிலே ஒரு குழந்தை பிறந்து அதைச் சீராட்டிப் பார்த்து விட்டுப் போக வேண்டும் என்று ஆசை. ஆனால் எதற்கும் கொடுத்து வைக்க வேண்டாமா?"

"நீங்கள் கட்டாயம் அதையெல்லாம் இருந்து பார்க்கத்தான் போகிறீர்கள்!" என்றாள் காமு மரியாதையாக.

"உம், என்னமோ!—அந்தக் காப்பிக்கொட்டைச் செயினை என் ஞாபகமாகக் கழுத்திலே போட்டுக் கொள்ளு. ஒட்டியாணம், காசுமாலை இரண்டையும் அழித்து, பிறக்கிற குழந்தைக்குக் காப்பு, கொலுசு எல்லாம் பண்ணிப் போடு. பாட்டி ஒருத்தி இருந்தாள் என்று அதுகிட்டச் சொல்லு. உங்கள் பிறந்தகத்துப் பேர் எல்லாம் ரொம்ப நல்லவர்கள். அவர்களைப் பற்றி நான் ஏதாவது சொல்லியிருந்தாலும் மனசிலே ஒன்றையும் வச்சுக்காதே" — மீனாக்ஷியம்மாளின் குரல் தழுதழுத்தது.

காமுவும் லக்ஷ்மியும் அவள் கால் மாட்டில் உட்கார்ந்து கொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டார்கள். அயர்வு காரணமாக மீனாக்ஷியம்மாள் கண்களை மூடிக் கொண்டாள். நடக்கப் போவதை எதிர்பார்த்து எல்லோரும் நெருங்கிவந்தனர்.

* * *

ஆச்சரியகரமாக மீனாக்ஷியம்மாள் பிழைத்துக் கொண்டாள்! டாக்டரே கூடத் தன் மருந்தின் வேலையைக் குறித்து அதிசயத்தில் ஆழ்ந்து போனார்.

இரண்டு வாரங்கள் கழிந்தன. மீனாக்ஷியம்மாள் பூரண குணமடைந்து விட்டாள்.


"என்னடி, காமு! இதென்ன காப்பியா, வெந்நீரா? நல்ல காப்பியாக நீ போட்டுக் குடித்து விட்டு, எனக்கு இந்த மாதிரி கொண்டு வருகிறாயோ? என்ன திரிசமன், பாரு! எல்லாம் அப்படியே பிறந்தகத்து வழக்கமாக அமைந்திருக்கிறது!" என்று உறுமினாள் மீனாக்ஷியம்மாள்.

காமு பயத்துடன் உள்ளே வந்தாள். "என்னடி, இப்போ எதற்கு வைரத் தோட்டைப் போட்டுக் கொண்டு மினுக்கிக்கொண்டிருக்கிறாய்? போடி! போய்க் கழற்றி வை. உன் லட்சணத்துக்குச் சிவப்புத் தோடே போதும், போ!" என்று காமுவைக் கடிந்து கொண்டாள்.

அப்போதுதான் வாசல்புறத்தி லிருந்து வந்து கொண்டிருந்த கணவரைப் பார்த்து, "என்ன! உங்களைத்தானே? இப்படிக் கொட்டாப் புளிமாதிரி இருந்த இடத்திலேயே இருந்தால் பெண்ணுக்கு மாப்பிள்ளை தானே வந்து குதித்து விடுவான் என்று நினைத்தீர்களோ? காலு இடத்திலே பாருங்கள் என்று முட்டிக் கொள்கிறேனே, கேட்டால்தானே? உங்களுக்குக் காது செவிடாகப் போய் விட்டதா, என்ன?" என்று மீனாக்ஷி அம்மாள் தன் கணவர்மீது அதிகாரம் செலுத்த ஆரம்பித்து விட்டாள்.

அவர், பாவம்! குனிந்த தலை நிமிராமல் கொல்லைப் பக்கம் போய் விட்டார்!

புனர்ஜன்மம் எடுத்த மீனாக்ஷி அம்மாள் பழைய மீனாக்ஷியம்மாளாகவே ஆகிவிட்டாள்!



பிரமுகர்:— நூல் கிடைக்காமல் கஷ்டப்படுகிறீர்களா?

நெசவாளர்:— அடே, நூல் கிடைக்கிறது ஐயா! இப்போ ஊர்வலத்துக்கு 'லைசென்ஸ்' இல்லாமல்தான் கஷ்டப்படுகிறோம்!

அவன் அறியவில்லை. கடலில் குதித்த பிறகுதான் அதை அறிந்தான். அறிந்த பிறகு அலறித் தத்தளித்தான்!

இதற்குள் வந்தியத்தேவன் ஓரளவு நீந்தத் தெரிந்து கொண்டிருந்தான். ஆனால் தண்ணீரைக் கண்டால் அவனுக்கு இயற்கையாக ஏற்பட்ட பயம் கை கால்களின் தெம்பைக் குறைத்தது. ஆற்றிலே குளத்திலே என்றால், பக்கத்திலே உள்ள கரையைப் பார்த்துத் தைரியம் கொள்ள இடமிருந்தது. இதுவோ மா கடல். நாலாபுறமும் எங்கே பார்த்தாலும் ஒரே தண்ணீர் மயம். கடலில் அங்கே இலேசான அலை தான். எனினும் ஒரு சமயம் அவனை மேலே கொண்டு வந்தது. இன்னொரு சமயம் பள்ளத்தில் தள்ளியது. மேலே வந்த போது படகு கண்ணுக்குத் தெரிந்தது. 'ஓ' என்று கத்தினான். பள்ளத்தில் விழுந்த போது படகும் கண்ணுக்கும் தெரியவில்லை. சுற்றிலும் இருண்ட தண்ணீரின் சுவர் மட்டுமே தெரிந்தது. 'ஓ' என்று அலறும் சக்தியைக் கூட அவனுடைய நா இழந்து விட்டது. மூன்றாவது முறை கடல் அலை அவனை மேலே கொண்டு வந்த போது படகு முன்னை விடத் தூரத்துக்குப் போய்விட்டதாகத் தோன்றியது. 'இவ்வளவுதான். கடலில் மூழ்கிச் சாகப் போகிறோம்' என்ற எண்ணம் அவன் மனதில் உண்டாகிவிட்டது! நாம் மூழ்குவது மட்டுமில்லை; நம்முடைய அரைக் கச்சும் அதில் உள்ள ஓலையும் மூழ்கப் போகின்றன! குந்தவை தேவியின் முகம் அவன் மனக் கண்ணின் முன்னால் வந்தது. "இப்படிச் செய்து விட்டாயே?" என்று கேட்பது போல இருந்தது. ஆகா! என்னவெல்லாம் கனவு கண்டோம்? என்னவெல்லாம் மனக் கோட்டை கட்டினோம்? வாணர் குலத்துப் பழைய அரசு திரும்ப வந்து, இரத்தினகசிதமான சிங்காதனத்தில் பக்கத்தில் இளைய பிராட்டியுடன் வீற்றிருக்கப் போவதாக எண்ணினோமே? அவ்வளவும் பாழாகிவிட்டது! இந்தப் பாவிப்பெண் கெடுத்து விட்டாள்! இவள் ஒரு பெண் அல்ல; பெண் உருக்கொண்ட பேய். பழுவேட்டரையர்களைச் சேர்ந்தவள். இல்லை, அந்த மோகினிப் பிசாசு நந்தினியைச் சேர்ந்தவள். நாம் கடலில் மூழ்கிச் செத்தாலும் பாதகமில்லை. இந்தப் பெண் பேய் மட்டும் இப்போது நம்மிடம் சிக்கினால் இவள் கழுத்தை நெறித்து... ச்சீ! இது என்ன எண்ணம்! சாகும் போது நல்ல விஷயமாக எண்ணிக் கொள்வோம்! கடவுளை நினைப்போம்! உமாபதி! பரமேசுவரா! பழனி ஆண்டவா! பாற்கடலில் பள்ளி கொண்ட பெருமானே!...குந்தவை தேவி! மன்னிக்கவும். ஒப்புக்கொண்ட காரியத்தை முடிக்காமல் போகிறேன்...அதோ படகு தெரிகிறது! அந்தப் பெண் மட்டும் இப்போது கையில் சிக்கினால்!...

* * *

வந்தியத்தேவன் கடலில் குதித்துச் சிறிது நேரம் வரையில் பூங்குழலி அலட்சியமாகவே இருந்தாள். தட்டுத் தடுமாறி நீந்திவந்து படகில் தொத்திக் கொள்வான் என்று நினைத்தாள். கொஞ்சம் திண்டாடட்டும் என்ற எண்ணத்துடனே படகுக்கும் அவனுக்கும் இருந்த தூரத்தை அதிகமாக்கினாள். விரைவில் அவள் எண்ணியது தவறு என்று தெரிந்து விட்டது. இவனுக்கு நன்றாக நீந்தத் தெரியவில்லை; அதோடு பீதியும் அடைந்து விட்டான். 'ஆ!' 'ஓ!' என்று அவன் அலறுவது விளையாட்டுக்கு அன்று; உண்மையான பயத்தினாலேதான். இன்னும் சற்றுப்போனால் உப்புத் தண்ணீரைக் குடிக்கத் தொடங்கி விடுவான்; மூழ்கியும் போய் விடுவான். பிறகு அவனுடைய உடலைக் கண்டு பிடிக்கவும் முடியாது. சேச்சே! தவறு அல்லவா செய்து விட்டோம்? விளையாட்டு விபரீதமாக முடிந்து விடும் போலிருக்கிறதே! அக்கரை போகும் வரையில் நாம் வாயை மூடிக் கொண்டிருந்திருக்க வேண்டும். அவனுடைய இரகசியம் நமக்குத் தெரியும் என்று காட்டிக் கொண்டிருக்கக் கூடாது. அதற்குள்ளே அவசரப் பட்டு விட்டோம். ஆனாலும் இந்த முரடன் இப்படிச் செய்வான் என்று யாருக்குத் தெரியும்? தண்ணீரைக் கண்டு இவன் இப்படிப் பயப்படுவான் என்று யார் கண்டது?

அலையின் உச்சியில் வந்தியத்தேவன் அடுத்த தடவை தெரிந்தபோது, பூங்



6. அமுதவல்லி

சிறிது நேரத்துக்கெல்லாம் வீரசேனனுக்கும் அவன் தாயாருக்கும் அந்த வேற்று மனிதர் யார் என்று தெரிந்து விட்டது! அந்த மனிதர் யாருமில்லை. சாட்சாத் மார்த்தாண்ட மன்னர்தான்! சிலை வடிவில் நின்று கொண்டிருந்தார். மார்த்தாண்ட மன்னரின் சிலையைப் பார்த்துத்தான் அவர்கள் முதலில் மலைத்து நின்றனர்.

"தம்பி, வீரசேனா! உன் தந்தை இப்படியேதான் இருப்பார். அவர் அப்படியே உயிர்பெற்று எழுந்து நிற்பதுபோலவே இருக்கிறது" என்றாள் வீரசேனனின் தாயார்.


"ஐயனார் கோயிலில் என் கனவில் தோன்றியபோதும் இதேமாதிரிதான் அம்மா, அப்பா இருந்தார்" என்று சொல்லிக் கொண்டே ஆவலோடு அந்தச் சிலையின் அருகில் சென்றான் வீரசேனன். அதன் ஒவ்வொரு அவயவத்தையும் தொட்டுத் தொட்டுப் பார்த்துச் சந்தோஷமடைந்தான். பிறகு தன் தாயாருடன் சுரங்கத்தை விட்டு வெளியில் வந்தான். "அம்மா! சர்வலட்சணமும் பொருந்திய ராஜ குமாரியைத் தேடிப் போகிறேன். எனக்கு விடை கொடுங்கள்" என்று வேண்டிக் கொண்டான்.

"வீரசேனா! கொஞ்சம் பொறு. இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லி அவன் தாயார் அவசரம் அவசரமாக மாளிகைக்குச் சென்றாள். ஒரு சுருக்குப் பையில் நிறைய பொற்காசுகள் போட்டுக்கொண்டு வந்து வீரசேனனிடம் கொடுத்தாள். "வீரசேனா! வெற்றியுடன் வா! உனக்கு சர்வ மங்களமுண்டாகட்டும்! தேவி துணை புரிவாள்" என்று அன்பு ததும்ப ஆசிர்வதித்து அனுப்பி வைத்தாள்.

* * *

வீரசேனன் பல தினங்கள் நடந்தான். ராஜப்பாட்டையிலும் காட்டு வழியிலுமாக நடந்தான். போக்கு வண்டிகளில் ஏறிச் சென்றான். வழியில் தென்பட்ட பெண்களை எல்லாம் உற்று உற்றுப் பார்த்தான். தான் கையில் அணிந்திருந்த மோதிரத்தில் இருக்கும் அபூர்வ கண்ணாடியில் அந்தப் பெண்களின் உருவம் தெரிகிறதா என்றும் பார்த்தான். ஒருவருடைய உருவமும் தெரியவில்லை. கடைசியில் ஒருநாள் சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில் மிகக் களைப்புடன் ஏதோ ஒரு ஊரின் எல்லைக்கு வந்து சேர்ந்தான்.

நீண்டநாள் பிரயாணம் செய்து வந்த அலுப்பாலும் நல்ல பசியினாலும் அவன் கண்கள் இருண்டன. அவன் முகத்திலிருந்த இளமையும் அழகும் மங்கியிருந்தன. வீரசேனன் உடலின் பொன் நிறம் மாறிக் கறுத்திருந்தது. அவன் மார்பிலும் தோளிலும் இருந்த வலிமை குறைந்திருந்தது. தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்தான். மாட்டுக்காரச் சிறுவர்கள் சிலர் மாடு மேய்த்துக் கொண்டிருந்தனர். வீரசேனன் அவர்களைப் பார்த்தான். மாட்டுக்காரச் சிறுவர்களும் களைத்துப் போயிருந்த வீரசேனனைப் பார்த்தனர்.



"சிறுவர்களே! இந்த ஊருக்கு என்ன பெயர்?" என்று கம்மிய குரலில் கேட்டான் வீரசேனன்.

"ஐயாவுக்கு வெளியூர் போலிருக்கிறது. இதுதான் ஐயா அழகேசபுரம். நீங்கள் எந்த ஊருக்குப் போக வேண்டும்?" என்றான் அந்த மாட்டுக்காரச் சிறுவர்களில் ஒருவன்.

"சிறுவர்களே! எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. இந்த ஊரில் எங்கு சாப்பாடு கிடைக்கும்? முதலில் அதைச் சொல்லுங்கள்" என்று அவசரமாகக் கேட்டான் வீரசேனன்.

"இந்தச் சாலையிலேயே நேரே போங்கள். போனவுடன் மேற்கே ஒரு சாலை போகும்; அதில் திரும்புங்கள். அந்தச் சாலையில் ஒரு பிள்ளையார் கோயில் இருக்கும். அங்கே போனவுடன் வடக்கே திரும்புங்கள். அந்தத் தெருக்கோடியில் ஒரு பெரிய வீடு இருக்கும். அதில் ஒரு பாட்டியம்மா இருக்கிறாள். அவளுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்தால் போதும். ராஜ சாப்பாடு போடுவாள். வெளியூரிலிருந்து வரும் அரச குமாரர்கள்கூட அங்குதான் தங்குவார்கள்" என்று சொன்னான் அந்த மாட்டுக்காரச் சிறுவர்களில் வேறு ஒருவன்.

வீரசேனன் அந்தச் சிறுவர்களுக்கு நன்றி தெரிவித்து விட்டு அவர்கள் சொன்ன வழியே சென்று பாட்டியின் வீட்டை அடைந்தான். வீரசேனனைப் பார்த்ததும் பாட்டி வாசலுக்கு வந்தாள். "யாரப்பா நீ? உனக்கு எந்த ஊர்? என்ன வேண்டும்?" என்று அன்புடன் விசாரித்தாள்.

"எனக்கு மார்த்தாண்டபுரம். ஒரு காரியமாக இந்த ஊருக்கு வந்தேன். என் காரியம் முடியும் வரையில் தங்குவதற்கு இடம் வேண்டும். உதவி புரிய முடியுமா?" என்றான் வீரசேனன்.

"எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் நீ இந்த வீட்டில் தங்கி இருக்கலாம். எனக்குப் பிள்ளை குட்டிகள் ஒன்றும் கிடையாது" என்று சொல்லி விட்டு வீரசேனனை அழைத்துப் போய் அவனுக்கு முதலில் நல்ல சாப்பாடு போட்டாள்.

வீரசேனன் வயிறு நிறையச் சாப்பிட்டான். பசி தீர்ந்ததும் அவனுக்கு மிகவும் களைப்பாக இருந்தது. உடனே படுத்தான். படுத்தவன் படுத்தவன் தான்! நன்றாகத் தூங்கி விட்டான். கண் விழித்துப் பார்த்தபோது பொழுது விடிந்து நீண்ட நேரமாகியிருந்தது. சூரியன் வானத்தில் வெகு உயரத்தில் வந்து விட்டான். மணி பத்துக்கு மேலாகி விட்டது.

வீரசேனன் படுக்கையை விட்டு எழுந்திருந்தான். நன்றாகத் தூங்கி எழுந்ததால் அவன் உடம்பு 'கலகல' வென்று இருந்தது.

"வெந்நீர் வைத்திருக்கிறேன். அதில் குளி, வா!" என்று அன்போடு கூப்பிட்டாள் பாட்டி.

வீரசேனன் எழுந்து சென்று பாட்டி வைத்திருந்த வெந்நீரில் குளித்தான். பிறகு அவள் அளித்த பலகாரங்களைச் சாப்பிட்டான். இப்பொழுது வீரசேனனுக்குக் களைப்பு நீங்கி விட்டது. உற்சாகமாக இருந்தான். அவன் முகத்தில் காம்பீர்யமும் அழகும் துள்ள ஆரம்பித்து விட்டன.

வீரசேனன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே பாட்டியின் வாயைக் கிளறினான். அதன் மூலம் அழகேசபுரத்து அரசனின் மகள் அழகிற் சிறந்தவள் என்றும் அவளுடைய பெயர் அமுதவல்லி என்றும் அவளுக்குப் பூ கொண்டு போய்க் கொடுப்பதுதான கிழவிக்கு வேலை என்றும் கிழவியினிடம் அமுதவல்லிக்கு அதிகப் பிரியம் என்றும் தெரிந்துகொண்டான்.

சாப்பிட்டு முடிந்ததும் தன் தாயார் கொடுத்த சுருக்குப் பையை அவிழ்த்து அதிலிருந்து ஒரு கை பொற் காசுகளை அள்ளி பாட்டிக்குக் கொடுத்தான். பாட்டிக்கு அந்தப் பொற்காசுகளைப் பார்த்ததும் அகமும் முகமும் மலர்ந்தது. அவள் வயதில் அவ்வளவு பொற்காசுகளைப் பார்த்ததே இல்லை. ஆகவே அதைப் பெற்றுக் கொண்டு பாட்டியம்மாள் வீரசேனனை மிகவும் நன்றியுணர்ச்சியுடன் பார்த்தாள்.

வீரசேனன் பாட்டியின் இரக்கமான மனதை உபயோகப்படுத்திக் கொள்ளத் தீர்மானித்தான். சந்தர்ப்பத்தை நழுவ விடாமல், "பாட்டி! எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும். நீங்கள் அரண்மனைக்குப் போகும் போது என்னையும் கூடவே அழைத்துக் கொண்டு போக வேண்டும். நான் அரசகுமாரி அமுதவல்லியைச் சந்திக்கும்படிச் செய்ய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

பாட்டி முதலில் தயங்கினாள். பிறகு என்ன நினைத்தாளோ தெரியவில்லை. "வீரசேனா! நான் இன்னும் கொஞ்சம் நாழிகைக்கெல்லாம் அரண்மனைக்குப் புறப்படப் போகிறேன். நீயும் வரு





"வதற்குத் தயாராக இரு" என்று சொல்லித் தோட்டத்துப் பக்கமாகப் புறப்பட்டுச் சென்றான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் 'கம்' மென்று புஷ்பங்களின் நறுமணம் வந்தது. பாட்டி இடுப்பில் புஷ்பக் கூடையுடன் நின்று கொண்டிருந்தாள். "வீரசேனா! புறப்படலாமா?" என்று கேட்டாள்.

வீரசேனனும் பாட்டியுடன் புறப்பட்டான். அரண்மனையின் முன் வாசல் வழியே செல்லாமல் பாட்டி சுற்றி வளைத்துக் கொண்டு சென்றாள். எங்கெங்கோ எப்படியெல்லாமோ சுற்றிக்கொண்டு ஒரு தோட்டத்துக்குள் புகுந்து சென்றாள். அங்கிருந்த சிறிய வாசல் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றாள். வீரசேனனும் அவள் பின்னால் மௌனமாகச் சென்றான்.

பாட்டியுடன் வரும் வீரசேனனை அங்குள்ள வேலைக்காரர்கள் எல்லாம் வியப்புடன் பார்த்தனர். வீரசேனன் அதையெல்லாம் ஒன்றும் கவனிக்கவே இல்லை. யாராவது ஒரு பெண் எதிரே வந்தால் உடனே தன் கையிலிருக்கும் அற்புத மோதிரக் கண்ணாடியைப் பார்ப்பான். அதில்அவர்கள் உருவம் ஒன்றும் தெரியாது. மிகுந்த ஏமாற்றத்துடன் மேலே செல்வான்.

இருவரும் வேலைப்பாடுகள் நிறைந்த ஒரு மண்டபத்தின் வழியாகச் சென்றார்கள். வீரசேனன் அந்த மண்டபத்தின் அழகை நின்று நின்று பார்த்துக் கொண்டே சென்றான். கொஞ்ச தூரம் சென்றதும் ஒரு அறையின் கதவைத் திறந்து கொண்டு பாட்டி உள்ளே சென்றாள். வீரசேனனும் சென்றான்.

உள்ளே பொற்பாவை போல ஒரு இளம் பெண் நின்று கொண்டிருந்தாள். அவளுடைய முதுகுப் புறம் மட்டும்தான் தெரிந்தது. அதைப் பார்த்ததும் வீரசேனனுடைய உடலில் ஒரு புது உணர்ச்சி ஏற்பட்டது. அவன் அது வரையில் அடையாத ஒரு இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தான். பாட்டி அவன் காதருகில் வந்து "வீரசேனா! இவள் தான் இளவரசி அமுதவல்லி" என்று மெதுவாகச் சொன்னாள்.

அமுதவல்லி அங்கிருந்த கண்ணாடிக்கு முன்னால் நின்றுதன்னை அலங்காரம் செய்து கொண்டிருந்தாள். வீரசேனன் அங்கு வந்தது கண்ணாடியில் நன்றாகத் தெரிந்தது. கண்ணாடியில் தெரிந்த அந்த உருவத்தைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். கண்ணை மூடினால் அந்த அழகிய வாலிபனின் உருவம் மறைந்து விடுமோ என்று நினைத்து அவள் கண்களை இமைக்கவில்லை.

வீரசேனனும் தன்னை மறந்து அமுதவல்லியைப் பார்த்துக் கொண்டிருந்தான். அடுத்த கணம் தான் கையில் அணிந்திருந்த அபூர்வ கண்ணாடி மோதிரத்தைப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! எத்தனையோ பெண்களுக்கு முன்னால் நின்று பார்த்தபொழுதெல்லாம் அந்தக் கண்ணாடியில் ஒன்றும் தெரிந்ததில்லை. இப்பொழுது அமுதவல்லியின் உருவம் தெரிந்தது.

வீரசேனன் அமுதவல்லியின் அழகிய உருவத்தைப் பார்த்தான். அந்த அபூர்வ மோதிரக் கண்ணாடியில்தான் பார்த்தான். கண்குளிரப் பார்த்தான். பார்த்துக் கொண்டே இருந்தான்.

"பாட்டி இவர் யார்?" என்று ஒரு பொன் வீணை தமிழில் பேசுவது போல அமுதவல்லி கேட்டாள்.

வீரசேனன் நிமிர்ந்து அமுதவல்லியைப் பார்த்தான். அமுதவல்லியும் வீரசேனனைப் பார்த்தாள். (தொடரும்)



கோழியை மனிதனாக்க முடியுமா? நன்றாய் முடியும். ஆனால் தாடி மனிதனாகத்தான் ஆக்க முடியும். தயவுசெய்து படத்தைத் தலை கீழாகத் திருப்பிப் பாருங்கள்!

சென்ற இதழ் விடுகதைக்கு விடை: குத்துவிளக்கு





சாமா.

கமலா கையில் பையுடன் ரேஷன் கடைக்குப் புறப்பட்டாள். வழக்கம்போல் எதிர் வீட்டுப் பெண் சியாமளாவும் ஒரு பையை எடுத்துக்கொண்டு அவளுடன் கடைக்குப் புறப்பட்டாள்.

இருவரும் ரேஷன் கடையில் அரிசி வாங்கிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினார்கள். பாவம், சின்னப் பெண்கள்! எத்தனை நேரம் கையில் கனமான பையைத் தூக்கிக்கொண்டு வருவார்கள்! ஒரு மரத்தடியில் கமலாவும் சியாமளாவும் தங்கள் தானியப் பைகளை வைத்துவிட்டுச் சற்று நேரம் அங்கேயே உட்கார்ந்து இளைப்பாறினார்கள்.

இதைப் பார்த்துக் கொண்டேயிருந்த ஒரு மரங்கொத்திக் குருவி பசி தாங்காமல், ஒரு பையின் அடிப் பாகத்தை ஒரு கொடியில் கொத்திப் பெரிய துவாரம் போட்டுத் தானியத்தைத் தின்ன ஆரம்பித்தது. இதைக் கமலாவும் கவனிக்கவில்லை. சியாமளாவும் கவனிக்கவில்லை. அவர்கள் பாட்டுக்குப் பைகளை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார்கள். கமலா பையின் கனம் தாங்காமல் பையைத் தூக்கி முதுகில் போட்டுக் கொண்டு பேசிக்கொண்டே போனாள். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் சியாமளாவுக்கு அம்மா வீட்டில் சொன்ன ஒரு வேலையைத் தான் செய்யாமல் வந்துவிட்டது நினைவுக்கு வந்தது. உடனே அவள் வேகமாக வீட்டுக்குப் போய் விட்டாள். கமலா மாத்திரம் முதுகில் பையுடன் மெதுவாக நடந்து போனாள்.

பையில் இருந்த தானியம் அந்தத் துவாரத்தின் வழியாகப் பாதையில் கொஞ்சம் கொஞ்சமாக விழுந்துகொண்டே வந்தது. இதைக் கொத்தித் தின்னும்பொருட்டு ஏராளமாகப் பறவைக் கூட்டம் 'க்யூ' வரிசையில் கமலாவைத் தொடர ஆரம்பித்தன.

கமலா இதைக் கவனிக்கவில்லை. அவளுக்கு விளையாட்டில் ஞாபகம். இன்றைக்கு வீட்டுக்குப் போனதும் என்ன விளையாடலாம் என்று யோசித்துக்கொண்டே போனாள். ஆனால் பையில் தானியம் ரொம்பக் குறைந்துவிட்டது.

அவள் வீட்டுக்குப் போனதும் அம்மா, "என்ன கமலா, உன்னோடு ஒரு பறவைக் கூட்டத்தை அழைத்துக்கொண்டு வருகிறாயே!" என்று அதிசயத்துடன் கேட்டாள்.

கமலா அதிசயத்துடன் திரும்பிப் பார்த்தாள். அம்மாவின் கண்களில் பையில் இருந்த துவாரம் பட்டது.

"என்ன கமலா, பை ஓட்டையா என்ன? பையிலிருக்கும் தானியம் கீழே கொட்டினது கூடத் தெரியாமல் இப்படிப் பறவைகளுடன் வந்து சேர்ந்திருக்கிறாயே!" என்றாள்.

இந்தச் சமயத்தில் சியாமளா ஓடோடியும் வந்து, "கமலா, என் பை உன்னிடம் மாறிப் போய்விட்டது. என் வீட்டுக் கோதுமைப் பையை என்னிடம் கொடு. இந்தா உங்கள் வீட்டுப் பை!" என்று கூறிக் கமலாவின் பையைக் கொடுத்துவிட்டுத் தன் பையை வாங்கிக் கொண்டாள். பறவைகளைப் பார்த்துக் கமலாவும் சியாமளாவும் ரொம்பச் சந்தோஷப்பட்டார்கள். அப்பொழுதிலிருந்து அவர்கள் இருவரும் எப்பொழுது கடைக்குப் போவார்கள் என்று பறவைகள் காத்திருப்பது வழக்கமாகி விட்டது. பறவைகளைப் பார்க்க அவர்களும் ஆவலாயிருந்தார்கள்.









ஆசிரியர் : பி. பத்மராஜு

மொழிபெயர்ப்பு: எஸ். வி. எஸ்.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அந்த மழையிலும் காற்றிலும் சில நிமிஷ நேரமாக வண்டி ஸ்டேஷனில் நிற்பதுகூட அவருக்குத் தெரியவில்லை. அவர் கையில் குடையுடன் எழுந்திருந்து கதவைத் திறந்து பார்த்தார். காற்று அடித்த வேகத்தில் அவர் தள்ளாடத் தொடங்கினார். ஏன், விழுந்தே விடுவார் போலிருந்தது. அப்போது பிச்சைக்காரி, அவருடைய சாமான்களைத்தான் இறக்கி எடுத்து வருவதாகச் சொன்னாள். அதற்கு அவர் ஒன்றும் மறுக்கவில்லை. வண்டியை விட்டு இறங்கியதும் மழைக்கு ஒதுங்க ஸ்டேஷனை நோக்கி ஓடினார். அவர் பின்னாலேயே சாமான்களின் பாரத்தைத் தாங்க மாட்டாது தூக்கிக்கொண்டு தட்டுத் தடுமாறி நடந்து வந்தாள். பிச்சைக்காரி ஸ்டேஷனில் மேல் வகுப்புப் பிரயாணிகள் தங்கும் 'வெயிட்டிங் ரூமி'ல் அவற்றை இறக்கி வைத்தாள். அந்த ஸ்டேஷன் எங்கிலும் ஒரு சின்னஞ்சிறு விளக்குக்கூட எரியவில்லை. அவர் கொஞ்சம் சில்லறை எடுத்து அவளிடம் கொடுத்தார். அதை அவள் வாங்க மறுக்கவில்லை; என்றாலும் ஏதோ முணுமுணுத்துக் கொண்டேதான் வாங்கினாள். என்ன சொன்னாள் என்பது ராவுக்குச் சரியாக விளங்கவில்லை. அடுத்த கணம் அவள் போய் விட்டாள்.

ஒரே திகைப்புடன் வெயிட்டிங் ரூமுக்குள் நுழைந்தார். அவர் மனசு சிந்திக்கும் சக்தியையே இழந்து விட்டாற்போல் தோன்றியது. அந்த நடுக்கும் காற்றிலும் மழையிலும், தரையில் பாதம் பாவவில்லை. அவர் உடுத்தி



யிருந்த துணிகள் எல்லாம் நனைந்திருந்தன. ஆகவே, பெட்டியைத் திறந்து யந்திரம்போல் ஏதோ தேடினார். கைக்கு ஒரு 'டார்ச்சு' விளக்குத் தட்டுப் பட்டது. அவருக்குண்டான சந்தோஷம் சொல்லி முடியாது!

ஆமாம், அவருக்குத் தம் பெட்டியில் டார்ச்சு இருக்கிறது என்ற விஷயமே தெரியாது. ஏன் அவருக்குத் தம் பெட்டியில் என்ன இருக்கிறது, என்ன இல்லை என்பது ஒன்றுமேதான் தெரியாதே! பிறகு பெட்டியிலிருந்து குளிருக்கு அடக்கமாக இருக்கும் உடைகளாக எடுத்து அணிந்து கொண்டார். 'மப்ளர்' எடுத்துக் காதுகள் மூடிக் கொள்ளும் வகையில் தலையில் சுற்றிக் கொண்டார். கம்பளிப் போர்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டார். இப்படிக் குளிர் வந்து தம்மைத் தாக்காமலிருக்கத் தற்காப்புக்கள் செய்து கொண்டார். பெட்டியைக் கூடப் பூட்டாமல் நாற்காலியில் உட்கார்ந்து தாம் இப்படி எக்கச் சக்கமாக அகப்பட்டுக் கொண்டிருக்கும் பயங்கர சூழ்நிலையை மறக்க முயன்றார். தூரத்தே சென்று கொண்டிருந்த ரயிலின் விளக்குகள் நகருவது தெரிந்தது. உடனே இந்த ஸ்டேஷனிலும் யாராகிலும் 'ஸ்டேஷன் மாஸ்டர்' என்று ஒருவர் இருக்க வேண்டுமல்லவா என்று தோன்றியது. வெளியே வந்து பார்த்தார். இரண்டு உருவங்கள் பிளாட்பாரத்தைக் கடந்து செல்வதைப் பார்த்தார். உடனே 'ஓ' என்று இரைந்து அவர்களைக் கூப்பிட்டார். அந்த உருவங்கள் நின்றன. ராவ் அவர்களை நெருங்கிப் போய்ப் பார்த்தார். அவர்களில் ஒருவர் ஸ்டேஷன் மாஸ்டர்; இன்னொருவன் 'போர்ட்டர்'.

அவர்களிடம், "எனக்கு ஊருக்குள்ளே போக வேண்டுமே" என்று உரத்த குரலில் கேட்டார்.

"முடியாது. சாலை முழுவதும், மரங்கள் விழுந்து கிடக்கின்றன. ஒரு அங்குலம் இடைவெளி கூடக் கிடையாது. தந்திக் கம்பிகள், மின்சாரக் கம்பிகள் எல்லாம் அறுந்து விழுந்து கிடக்கின்றன. எல்லா விதமான போக்கு வரத்தும் இந்தக் காற்றிலும் மழையிலும் குட்டிச்சுவராகப் போய் விட்டன. நீங்கள் வெளியே போக முடியாது. இன்றைய இரவை வெயிட்டிங் ரூமில்தான் கழிக்க வேண்டும். அதைத்தவிர வேறு வழி இல்லை.

"இந்த வண்டி கூட அடுத்த ஸ்டேஷனில் இன்றைய இரவுக்குத் தங்கிவிடும். புயல் மிகவும் பயங்கரமாக இருக்குமாம். அதுவும் முப்பத்தாறு மணி நேரம் தொடர்ந்து வீசும் என்று எங்களுக்குச் செய்தி வந்திருக்கிறது" என்றார் ஸ்டேஷன் மாஸ்டர்.

"இந்த வெயிட்டிங் ரூமில் துணைக்கு ஒரு ஆள்கூட இல்லையே!"

"அதற்கு என்ன செய்வது? நீங்கள் எப்படியோ இருந்து சமாளித்துத்தான் ஆக வேண்டும்; வேறு வழியில்லை."

இவ்விதம் சொல்லி விட்டு, ஸ்டேஷன் மாஸ்டர் போய் விட்டார். ராவ் வெயிட்டிங் ரூமிற்குப் போனார். தாம் இனி என்ன செய்வது என்று அறியாமல், மனசு உடைந்து அங்கிருந்த சாய்மான நாற்காலியில் போய் விழுந்தார். வெளியிலடிக்கும் காற்றையும் மழையையும் வாங்கி உள்ளே விட்டுக் கொண்டிருந்த அந்த அறைக் கதவைச் சாத்தக்கூடத் தோன்றாமல் உட்கார்ந்திருந்தார். ஜன்னல் கதவுகளின் கண்ணாடிகளோ, ஏற்கெனவேயே சுக்கு நூறாக உடைந்து போய் விட்டன. சொல்லத் தெரியாததோர் பயம் அவரைப் பற்றிக் கொண்டது. அந்த பயத்தின் காரணமாக அவர் உற்ற பீதியும் வேதனையும் பொறுக்கக் கூடியதாக இல்லை. சுற்றும் முற்றும் ஒரு ஆத்மாகூடக் காணவில்லை. அந்த இரவில் ஏகாந்தமாகத் தோற்றமளித்த ஸ்டேஷன் கட்டிடமும் பயங்கரப் புயலும் ஏதோ நெஞ்சையழுத்தும் பயங்கரக் கனவுபோலிருந்தது.

★

அப்பொழுது திடீர் என்று யாரோ அந்த அறையிலிருப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. இனம் தெரியாத உருவம் ஒன்று. திறந்திருந்த கதவு வழியாக உள்ளே நுழைவதைப் பார்த்தார். உடனே தம் கையிலிருந்த டார்ச்சு விளக்கைப் போட்டுப் பார்த்தார். அந்தப் பழைய பிச்சைக்காரிதான்; சொட்டச் சொட்ட நனைந்திருந்தாள். உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அவளுடைய நனைந்த தலைமயிர் அவள் முகத்தை அழுத்திப் பிடித்திருந்தது. அந்த மயிர்க் கற்றைகளின் வழியாக மழைத் தண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

அவள், "நீங்கள் ஏன் கதவைச் சாத்தவில்லை? குளிருக்கு அடக்கமாக இருந்திருக்குமே?" என்று அவர் காது கேட்கும் வண்ணம் இரைந்து கூறினாள். அவர் யந்திரம் மாதிரி எழுந்திருந்து போய்க் கதவைச் சாத்த முயன்றார். காற்று வெகு வேகமாக அடிக்கவே, அவரால் கதவைச் சாத்த முடியவில்லை. அவள் உதவி செய்ததின் பேரில் ஒருவாறு மூடித் தாழ்ப்பாள் போட்டார். காற்று இவர்கள் சாத்திய வேகத்தைவிட இரண்டு பங்கு வேகத்துடன் அடிக்கவே, தாழ்ப்பாளைப் பிய்த்துக் கொண்டு கதவு திறந்து கொண்டது. மறுபடியும், அவர்கள் அந்தக் கதவைச் சாத்தி ஒரு மேஜை, இரண்டு நாற்காலிகள் இன்னும் அங்கிருந்த சாமான்கள் எல்லாம் கதவுடன் சார்த்தி வைத்துத் திறந்து கொள்ளாமலிருக்க முட்டுக் கொடுத்தனர். பின்னர், இந்தக் கதவைச் சாத்த வேண்டும் என்று முன்னமேயே தமக்கு ஏன் தோன்றாமல் போய் விட்டது என்று ஒரு கணம் திகைத்தார். இப்பொழுது அவருக்குச் சற்று பயம் குறைந்தது. சௌகரியமான இடத்தில்



இருப்பது போல் நினைத்தார். அடுத்த கணம் ஏதோ முறிந்து விழும் பயங்கரச் சத்தம் கேட்டது!

"என்னவோ விழுந்து விட்டது. ஒரு வேளை ஸ்டேஷன் கட்டிடத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம்! அப்பப்பா! என்ன புயல்! என்ன புயல்! இந்தமாதிரி புயலை என் ஜன்மத்திலே பார்த்ததில்லை" என்று அந்தப் பிச்சைக்காரி சொன்னாள். அவளுடைய குரலில் கொஞ்சங்கூட




பயமே தொனிக்கவில்லை. அவளுடைய மனத்திண்மையைக் கண்டு ராவ் அதிசயித்தார். அவள் ஒரு மூலையில் முழங்காலைக் கட்டிக் கொண்டு குளிரில் நடுங்கிக் கொண்டே உட்கார்ந்திருப்பதைப் பார்த்தார். அவர் தம் பெட்டியைத் திறந்து. வேஷ்டி ஒன்றை எடுத்தார். "இந்தா. இதைக் கட்டிக் கொள்" என்று சொல்லி அவளிடம் விட்டெறிந்தார். அவர் கூறியது என்னவென்று அவள் காதில் விழவில்லை. எனினும், ஒரு உலர்ந்த துணியைக் கொடுத்ததற்காக, அவள் உள்ளத்தில் நன்றியுணர்ச்சி பொங்கியது. விரைவாகவே தன் ஈர உடையைக் களைந்து விட்டு அந்த வேஷ்டியைச் சுற்றிக் கொண்டு உட்கார்ந்து விட்டாள்.

ராவுக்குப் பசித்தது. தம் பெட்டியிலிருந்து ஒரு 'பிஸ்கட்' பொட்டலத்தை எடுத்தார். இருளில் சரியாகத் தெரிந்தும் தெரியாமலுமிருந்த அந்த உருவத்தைப் பார்த்தார். அவளும் பசியுடன் இருக்கலாம் அல்லவா என்று நினைத்தார். "நீ கொஞ்சம் பிஸ்கட் சாப்பிடுகிறாயா?" என்று கேட்டார்.

"என்ன சொன்னீர்கள்?" என்று அவள் கத்தினாள். இருவருடைய குரல்களும் அந்தப் பேய்ச் சத்தத்தில் மூழ்கிவிட்டன. ஒருவர் பேச்சு இன்னொருவருக்குக் காதில் விழவில்லை. அதனால் ராவ் எழுந்திருந்து அவள் அருகில் சென்று, அவளுக்குச் சில பிஸ்கட்டுகள் கொடுத்தார்.

கொடுக்கும்போதே "இதுதான் என்னிடம் இருப்பவை!" என்று சொல்லிக் கொடுத்தார். அவர் சொன்ன மொழிகளிலும் குரலிலும் "இன்னும் இருந்தால், இன்னும் கூடக் கொடுப்பேன். என்ன செய்வது!" என்று ஆற்றாமையோடு கொடுப்பது போலிருந்தது. இவ்விதம் சொல்லிக் கொடுத்து விட்டுத் தம் பெட்டியின் மீது வந்து அமர்ந்தார். அவள் அந்த அறையிலிருந்ததனால் அவருக்குச் சற்று தைரியமாக இருந்தது. துணைக்கு ஒருவருமே இல்லாதிருப்பதை விட, அவளாவது இருந்தது அவருக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. அவளும், தான் ஒரு ஆடவனுடன் கூட இருப்பதைப் பற்றிப் பயப்பட்டதாகவோ, கவலை கொண்டதாகவோ தெரியவில்லை. அவள் மிக நிம்மதியாக இருந்தாள். ஏன், அவள் எதைப் பற்றியுமே கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இந்தப் புயலைப் பற்றிக் கூடக் கவலைப்படவில்லை. "அது. அது நடக்க வேண்டிய படி நடக்கிறது. இதில் நாம் என்ன செய்ய முடியும்!" என்ற பரிபக்குவமான மனநிலையுடையவளாக இருந்தாள். இதைப் பார்த்ததும், 'இவள் வாழ்க்கையில் மேடு பள்ளங்களை ரொம்பவும் பார்த்



இக் கதையின் ஆசிரியர் ஸ்ரீ பி. பத்மராஜு.

இருப்பவள் போலிருக்கிறது!' என்று நினைத்தார் ராவ்.

★

ராவ் தமது கைக் கடிகாரத்தைப் பார்த்தார். அதற்குள் மணி ஒன்பது ஆகியிருந்தது. ஆனால் ராவுக்கோ தாம் அங்கே யுகக் கணக்கில் இருப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டிருந்தது. 'அடுத்த ஸ்டேஷனில் போய் இறங்கியிருக்க வேண்டும்' என்று தமக்குள் சொல்லிக் கொண்டார். எப்படியோ தாம் ஒரு சின்னஞ் சிறு ஸ்டேஷனில் இறங்க வேண்டியிருக்கும் என்று தோன்றாமலேயே போய்விட்டது. அவர் போக வேண்டிய ஊரோ, ஸ்டேஷனிலிருந்து இரண்டு மைல் தூரத்திலிருந்தது. ஆனால் அந்த ஊரை அடுத்த ஸ்டேஷனில் இறங்கியும் போயிருக்கலாமே! இப்படி எண்ணிக் கொண்டு வந்த போதே திடீர் என்று இன்னொரு பயம் அவரைப் பற்றிக் கொண்டது. இந்தக் கட்டிடமும், இந்த அறையும் இருந்திருந்தாற் போல் இடிந்து விழுந்தால் என்ன செய்வது? இந்த அறையிலிருந்து வெளியே ஓடிப் போக ஏற்பட்டுள்ள வழியை மேஜை நாற்காலிகளைப் போட்டு அடைத்து வைத்திருக்கிறோமே? என்ன செய்வது? இந்தப் பீதியில், அவர் அந்தப் பிச்சைக்காரியிடம் ஓடிப் போய், "நீ என்ன நினைக்கிறாய்? இந்தக் கட்டிடம் இடிந்து விழுந்து விடுமா?" என்று கேட்டார்.

அவள், "யாரால் என்ன சொல்ல முடியும்? கட்டிடம் என்னவோ வலிவுள்ளதாகத்தான் இருக்கிறது. ஆனால் புயல் கட்டிடத்தை விட பலம் பொருந்தியிருந்தால் என்ன செய்ய முடியும்?" என்றாள்.

அவள் கூறிய வார்த்தைகள் தைரிய மூட்டுவனவாக இல்லை; ஆனால், அவள் குரல் உற்சாகமூட்டுவதாக இருந்தது. தாம் உட்கார்ந்திருந்த பெட்டிக்குத் திரும்பிச் சென்றார். அவள் எழுந்திருந்து அவருக்கு அருகிலிருந்த மூலைக்கு வந்தாள். "நான் இருந்த இடத்திலிருந்து பேசினால் சரியாகக் காதில் விழுவதில்லை" என்றாள்.

"ஆமாம், புயல் என்றால் இவ்வளவு கடுமையாக இருக்கும் என்று எனக்கு இத்தனை நாள் வரை தெரியாது!" என்றார்.

அவள், "நீங்கள் கவலைப் படாதீர்கள்! ஒருத்தராக அகப்பட்டுக் கொள்வதற்கு பதில் இரண்டு பேராக இருக்கிறோமே! அந்த டிக்கெட் கலெக்டர் என்னை அப்படியே பிடித்து வெளியே தள்ளிவிட்டார். அதனால்தான் இங்கே இருக்கிறேன். என்றாலும் இப்படி நேர்ந்து விட்டதே என்று எனக்கு இப்போது ஒருவருத்தமும் இல்லை. நீங்களோ குளிருக்கு அடக்கமாக உலர்ந்த வேஷ்டி ஒன்றைக் கொடுத்து விட்டீர்கள், பசிக்கும் கொஞ்சம் பிஸ்கட் கொடுத்துவிட்டீர்கள். இதைவிட வேறு என்னவேண்டும்? அந்த வண்டியோடேயே போயிருந்தால், இதுகூட எனக்குக் கிடைத்திராது! வாழ்க்கையில் நேரும் கஷ்டங்களை அனுபவித்துத்தான் ஆக வேண்டும். இப்படி நேர்ந்து விட்டதே என்று அங்கலாய்ப்பதில் பயன் என்ன? கஷ்டத்தைச் சுகமாக பாவிக்கும் திறமை வேண்டும்!" என்றாள்.

இவ்விதம் அவள் தனக்குத்தானே பேசிக் கொண்டது, இனந் தெரியாத மன ஆறுதலையளித்தது. ஒரு பிச்சைக்காரி தன்னுடன் அங்கிருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. எனினும் துணைக்கு இவளாவது இருக்கிறாளே என்று நன்றி செலுத்தினார் அவளுக்குத் தம் மனசுக்குள்.

"உனக்கு யாராகிலும் சொந்தக்காரர்கள் இருக்கிறார்களா?" என்று கேட்டார். இந்த மாதிரி அவளுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள விரும்புவது போல் பேசுவது அவருக்குப் பிடிக்கவில்லைதான். இருந்தாலும் கேட்டு வைத்தார். அதற்குப் பதில், உரத்துச் சொல்ல வேண்டாம் என்று சற்று அவர் அருகில் நெருங்கி வந்து சொன்னாள்:

"எல்லாருக்கும்தான் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். இருந்து என்ன பயன்? என் அப்பா ஓயாது ஒழியாது குடிக்கிறார். என் அம்மாவைக் கொன்றவர் அவர்தான் என்று சொல்லுகிறார்கள். இது என் அப்பாவைப் பற்றிய கதை. எனக்கோ கல்யாணமாகவில்லை. ஆனால் இரண்டு குழந்தைகள் இருக்கின்றன. ஒரு அயோக்கிய

னுக்குப் பிறந்தவை. அவன் குடிக்கிறது, சூதாடுகிறது இந்த இரண்டைத் தவிர வேறு ஒரு வேலையும் செய்வது கிடையாது. நான்தான் இந்தக் குடும்பத்துக்குச் சம்பாதித்துப் போட வேணும். என் இரண்டு குழந்தைகளும் ரொம்பவும் சிறிசுகள், பிச்சை எடுக்க வெளியே போகும் வயசல்ல. என் 'புருஷன்' என் சம்பாத்தியத்திலிருந்து குடிக்காக நாலணு செலவழித்து விடுவான். ஆனால் அவனுக்கு என்னைக் கண்டால் குலை நடுக்கம். அவனுக்கு என்னைக் கண்டால் உண்டாகும் அவமானத்தை மறக்கத்தான் அப்படிக் குடிக்கிறான் என்று நான் நினைக்கிறேன்'' என்றாள்.

''நீ ஒரு நாளைக்கு என்ன சம்பாதிப்பாய்?'' என்று கேட்டார்.

''ஒவ்வொரு நாள் ஐந்து ரூபாய் கூடச் சம்பாதிப்பேன். ஆனால் அடிக்கடி முடியாது; எனக்கு ஒரு காலணு கொடுக்காமல் யாருமே இருப்பதில்லை. யார் யாரிடம் எப்படி எப்படிக் கேட்க வேண்டும் என்று எனக்குத் தெரியும்'' என்றாள். அப்போது ராவ் தம்மை யறியாமலே, டார்ச்சு விளக்கை அவள் முகத்தை நோக்கிப் பிடித்தார். அவள் சிரித்துக் கொண்டிருந்தாள். அவள் முகத்தை நோக்கி விளக்கைப் பிடித்ததும் அவள் தன் சிரிப்பை நிறுத்தவில்லை. அவள் சிரித்துக்கொண்டேயிருந்தாள். இதைப் பார்த்ததும், முன் பின் தெரியாத வேற்று மனிதனுக்குத் தன் உடலை விற்பதற்குச் சற்றும் தயங்க மாட்டாள் என்று நினைத்தார். அவள் ''என்னை ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்? நான் முன்னைப் போல் இப்பொழுது அவ்வளவு அழகாக இல்லை!'' என்றாள்.

இவ்விதம் அவள் உட்குறிப்பு வைத்துப் பேசியது அவருக்குப் பிடிக்கவில்லை. ''உன் முகத்தை ஒன்றும் நான் பார்க்கவில்லை. இந்த டார்ச்சு விளக்கை அணைக்க மறந்து போய் விட்டேன்: அவ்வளவுதான்!'' என்றார்.

திடீர் என்று பயங்கரச் சத்தத்துடன் ஏதோ முறிந்து விழுந்தது. இவர்கள் முட்டுக் கொடுத்திருந்த மேஜைகளும் சாமான்களும் நாற்புறமும் சிதறின; கதவுகள் திறந்து கொண்டன. அதிலும் ஒரு கதவு முனையை விட்டுப் பெயர்ந்து வந்து விழுந்தது. ராவ் அந்தப் பிச்சைக்காரியைப் பற்றிக் கொண்டார். அந்த ஒரு கணம் அவர் சொல்லி முடியாத வேதனை அநுபவித்தார். ஆனால் அந்தப் பிச்சைக்காரி, திறந்து கிடந்த கதவின் பக்கத்து மூலைக்கு அவர் கையைப் பற்றி அழைத்துச் சென்றாள். அங்கே காற்று அவ்வளவாக அடிக்கவில்லை. அவரை அங்கே உட்கார வைத்தாள். தானும் அவர் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். தன் இரு கைகளாலும் கட்டி அணைத்துக் கொண்டாள். அவளுக்கு எவ்வித சங்கோசமும் இருக்கவில்லை. அந்தக் குளிரிலும் மழையிலும், எவருமே இப்படித்தான் செய்வார்கள் என்று எண்ணுவது போல அவ்வளவு இயற்கையாகக் கைகளை அவரைச் சுற்றி வீசினாள். அவளுடைய தேக உஷ்ணம், அவருக்கு ஹிதமாக இருந்தது.

''நெருங்கி வந்து உட்கார்ந்து என்னைக் கட்டிப் பிடித்துக் கொள்ளுங்கள். இன்னும் கொஞ்சம் உஷ்ணமாக இருக்கும். பாவம்! குளிரிலே இப்படி நடுங்குறீங்களே, சாமி!'' என்றாள்.

பிறகு அவளே அவர் முழங்கால் வரை நெருங்கி உட்கார்ந்தாள். அவளுடைய மார்பகத்தின் உஷ்ணம் இவருக்கு ரொம்பவும் ஹிதமாக இருந்தது.

அவள் பேசிக் கொண்டே போனாள். ''இந்த மூலைதான் இந்த அறைக்குள்ளேயே ஆபத்தில்லாதது...ஐயா, இப்போ தம்முடைய வீட்டைப் பற்றியும் தம் வீட்டிலிருக்கும் அருமைப் பெண்களைப் பற்றியும் நினைத்துக் கொண்டிருப்பார். ஆனால் என் குடிசையோ இந்தக் காற்றில் பறந்து போயிருக்கும். என் குழந்தைகளின் கதி என்ன ஆயிற்றோ? இருந்தாலும் அக்கம்பக்கத்திலிருப்பவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று வையுங்களேன்! ஆனால் நம்ம 'ஆளு' இருக்கானே அவன் எதுக்கும் பிரயோஜனமில்லீங்க! பிணங் கணக்கா குடிச்சிட்டுக் கிடப்பான்.''



ராவ் இவள் கூறியவற்றில் ஒன்றையும் கேட்கவில்லை. அவளுடைய தேகத்தின் ஸ்பரிசம், அதன் உஷ்ணம் — இவை இரண்டுதான் அவர் மனசு பூராவும் வியாபித்திருந்த விஷயம். அவர் அவளை இன்னும் சற்று இறுக அணைத்தார். அதன்பொருள் தான் புரிந்துகொண்டவள் போல் அவர் முழங் காலைத் தன்

விரல்களால் தட்டினாள். பிறகு அவர் மனசு எதைப் பற்றியும் சிந்திக்கும் சக்தியை யிழந்து விட்டது. ஒருமாதிரி அவர் கால்கள் மரத்துப் போய்விட்டன.

பிறகு அவருக்குச் சுய உணர்வு வந்தபோது, சுற்றுமுற்றும் பார்த்துத் தாம் எங்கே இருக்கிறோம் என்பதை உணர்ந்து கொண்டார். அந்தப் பிச்சைக்காரியை ஆட்டாமல் அசைக்காமல் தாம் வேறொரு இடத்துக்குச் சென்றார். செல்லும்போது தம் கையிலிருந்த டார்ச்சு விளக்கைப் போட்டுப் பார்த்தார். அவள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். தூக்கத்தில் அவள் முகம் களங்கமற்று விளங்கியது.

★

புயலின் கடுமை குறையவில்லை. ஆனால் அவர் சோர்ந்து களைத்திருந்தார். அதனால் சீக்கிரத்தில் தூங்கி விட்டார்.

அவர் விழித்துக் கொண்டபோது மழை நின்றிருந்தது; ஆனால் புயல் இன்னும் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. பிச்சைக்காரியும் எங்கேயோ போய் விட்டாள்; காணோம். கிழக்கு வெளுக்கத் தொடங்கியிருந்தது. தம் கைக்கடிகாரத்தைப் பார்த்தார்; மணி ஐந்து ஆகியிருந்தது. அவர் எழுந்து நின்றார். அவர் முழங்கால்கள் தீவிரமாக வலித்தன. அவர் தம் சட்டைப் பைகளைத் தொட்டுப் பார்த்தார். அவருடைய பணம் வைக்கும் தோல் பையைக் காணவில்லை. பர்ஸைக் காணவில்லை. அந்தப் பிச்சைக்காரிதான் அதைத் திருடிக் கொண்டு போயிருக்க வேண்டும் என்று அவரால் நம்ப முடியவில்லை. ஆகவே, முதல் நாள் இரவு நிகழ்ந்த குழப்பத்தில் எங்கேயாகிலும் கெட்டுப் போய் விட்டதோ என்று நினைத்தார். அந்த அறை முழுவதும் தேடினார்; கிடைக்கவில்லை. பிளாட்பாரத்துக்கு வந்தார். சுற்று வட்டாரமெல்லாம் ஊழிக்கூத்தின் சின்னங்கள் - அழிவின் சின்னங்கள் - சிதறிக் கிடந்தன.

டிக்கெட்டு கொடுக்குமிடம் இடிந்து கிடந்தது. மேஜைகள், நாற்காலிகள் பீரோக்கள் எல்லாம் உடைந்து இங்குமங்கும் சிதறிக் கிடந்தன. இந்தப் பயங்கர அழிவை, விழித்த கண் மூடாதபடி பார்த்துக் கொண்டிருந்தார்.

விடியற்காலையின் மங்கிய ஒளிக்கு அவர் கண்கள் பழக்கப்பட்டவுடன், அந்த இடிந்த அறையின் காரைக் கற்களின் கீழ் ஒரு உருவம் அமுங்கிக் கிடப்பதை பார்த்தார். அவர் தம் டார்ச்சு விளக்கைப் போட்டுப் பார்த்தார். அந்த உருவம் வேறு யாருமில்லை. அந்தப் பிச்சைக்காரிதான்!

அவருக்குத் திடுக்கிட்டது; மூச்சுத் திணறியது. அவர் குனிந்து அவளுடைய நெற்றியைத் தொட்டுப் பார்த்தார்; சில்லென்று இருந்தது. உயிர் இல்லை. உடம்பின் கீழ்ப் பகுதி நசுங்கிப் போயிருந்தது. அவளுடைய ஒரு கையில் பணப்பை இருந்தது. இன்னொரு கையில் கொஞ்சம் சில்லறையும் ரூபாய் நோட்டுக்களும் இருந்தன. இந்தச் சில்லறையும் நோட்டுக்களும் டிக்கெட்டு கொடுக்குமிடத்திலிருந்து திருடி வந்திருக்க வேண்டும். ஆமாம்; டிக்கெட் கொடுக்கும் குமாஸ்தா, தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்கிற அவசரத்தில் டிக்கெட் விற்ற பணத்தை வைக்கும் மேஜை டிராயரைத் திறந்தபடி விட்டு விட்டுப் போயிருக்க வேண்டும்.

அவர் குனிந்து அவள் நெற்றியை முத்தமிட்டார். ஒரு தடவையல்ல, பல தடவை முத்தமிட்டார். முதல் நாள் இரவு நிகழ்ந்த ஒவ்வொரு சம்பவமும், சின்னஞ் சிறு சம்பவமும், அவருக்கு மறுபடியும் மறுபடியும் நினைவுக்கு வந்தன. அந்தப் புயலிலும் மழையிலும் தமக்கு அவ்வளவு ஆறுதலளித்த அந்தப் பேதைப் பெண் இறந்து கிடந்தாள்! என்ன பரிதாபம்! அவள் தம்முடைய மணி பர்ஸையும், ஸ்டேஷன் பணத்தையும் களவாடியமைக்கு அவளைக் குற்றம் கூற அவருக்கு மனசு வரவில்லை. அவளைத் தாம் நன்றாகப் புரிந்து கொண்டுவிட்டதாக நினைத்தார். அவள், அவருடைய உள்ளத்தின் அடிவாரத்தில் கிடந்த அன்பு, ஈவு, இரக்கம் முதலிய மனிதப் பண்புகளை தொட்டு எழுப்பி விட்டாள். அவருடைய மனைவி, அவருடைய குழந்தைகள் செய்யாத காரியத்தை இவள் செய்து விட்டாள்! இந்தப் பிச்சைக்காரி சாதித்து விட்டாள்!

யாரோ சிலர் அவ்விடத்தை நெருங்கி வரும் சத்தம் கேட்டது. ஒரு கணம் ஏதோ யோசித்த வண்ணம் நின்றார். பிறகு ஒரு முடிவுக்கு வந்து, அவளுடைய கையில் இருந்த நோட்டுக்களையும் சில்லறையையும் அவள் பிடியைத் தளர்த்தி அந்த டிக்கெட் விற்பவரின் மேஜை டிராயருக்குள் போட்டார். ஆனால் மற்றொரு கையிலிருந்த தம் பர்ஸை எடுத்துக் கொள்ள அவர் விரும்பவில்லை. தம்முடைய ஞாபகார்த்தமாக ஏதாவது ஒரு பொருள் அவளுடனேயே இருக்க வேண்டும் என்று நினைத்தார். ஆனால் பிறர் அவளைத் திருடி என்று சொல்லி விட்டால் அவர் மனசு பொறுக்காது போலிருந்தது! ஆகவே, அந்த மணி பர்ஸில் வைத்திருந்த தம் பெயர் பொறித்த சிறு அட்டையை மட்டும் எடுத்து விட்டு அவ்விடத்தை விட்டு அகன்றார்.

உள்ளும் புறமும்

நா. சி. வரதராஜன்

அடிவானத்தில் பரவியிருந்த செம்மையினூடே மெல்லத் தலை நீட்டிய முழுமதி, கண்ணிமைக்கும் நேரத்தில் மேலெழும்பி வெள்ளிப் பனி நிலவை அள்ளிப் பொழிந்தது.

அந்தக் காட்சியில் தன்னை மறந்து ஈடுபட்டிருந்த ரஞ்சனியின் முகத்தில் பொலிந்த மகிழ்ச்சியின் ரேகையை, எட்ட நின்றவாறே அனுபவித்துக் கொண்டிருந்தான் ஜகதீசன். மொட்டை மாடியின் கைப்பிடிச் சுவரின்மீது ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டு வெண்ணிலவின் எழிலில் மயங்கி நின்றாள். அப்போது அவள் வதனம் நிலவைவிட அதிக இன்மை தருவதை அவன் உணர்ந்தான். தான் வந்த காரியத்தைக் கூட மறந்து போய், அப்படியே அவளைப் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டான்.

ஏதோ நினைத்துக் கொண்டவள்போல் திடீரென "அண்ணா!" என்று அழைத்தவாறு ரஞ்சனி அவன் பக்கம் திரும்பினாள். அப்போதுதான் அவனுக்குத் தன் நிலை புரிந்தது. உடனே, தான் அப்பொழுதுதான் அங்கே வந்தவனைப்போல, "ரமணி எங்கே! நானும் அவனைத் தேடிக் கொண்டுதான் வந்தேன்" என்று சொல்லித் தன்னைச் சமாளித்துக் கொண்டான் ஜகதீசன்.

"அண்ணா இங்கேதானே இருந்தான்! அதற்குள் எங்கேபோய் விட்டான்!...ஆமாம்...இன்றைக்கு நிலவு எப்படி இருக்கிறது, பார்த்தீர்களா! இப்பொழுது உங்களைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். என்னாலெல்லாம் இந்த நிலவைப் பார்த்து 'எவ்வளவு நன்றாக இருக்கிறது' என்ற அளவோடுதான் அனுபவிக்க முடிகிறது. நீங்கள் இதை அனுபவித்து-இந்த நிலவைவிட இனிமையாகக் கவிதை பாடி விடுவீர்கள்" என்றாள் ரஞ்சனி.

"என் திறமையை நீதான் மெச்சவேண்டும்."

"ஏன் நான் மெச்சினால் போதாதா!......" என்று கேட்டு விட்டு அவன் முகத்தைக் கன்னம் கனியப் பார்த்தாள் அவள். அப்பொழுது அவள் முகத்திலே ஜொலித்த பெருமையையும் குரலிலே ஒலித்த குழந்தைத்தனத்தையும் நினைத்து மனத்திற்குள் என்னென்னவோ எண்ணமிட்டான் அவன்.

"என்ன, பதிலே பேசமாட்டேன் என்கிறீர்களே! உங்களைப் புகழக்கூட அருகதை யற்றவளா நான்!"

"சேச்சே, அப்படிச் சொல்வேனா, என்ன! உன் புகழ்ச்சிக்கு, முதலில் நான் அருகதையுள்ளவன்தானா என்றுதான்......"

"இதெல்லாம் தன்னைத்தானே மறைமுகமாகப் புகழ்ந்துகொள்ளும் வழி!" என்று கூறிவிட்டுக் கலகல வென்று அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பு அவனுள்ளத்திலே ஒரு சலசலப்பை விளைத்து விட்டது.

"அண்ணா வந்தால், நான் அவனைத் தேடினதாகச் சொல்லு" என்று சொல்லி விட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தான் ஜகதீசன்.

"உ...ம்..." என்றாள் ரஞ்சனி.

மாடிப்படிகளில் இறங்கும்போது முகத்தைத் திருப்பி அவளை மற்றும் ஒரு முறை பார்த்துப் பெருமூச்சு விட்டான்.

"இந்தக் கள்ளங் கபடற்ற பெண்ணைப் போய், 'ராங்கிக்காரி, உன்னே பூரா விஷம்' என்றெல்லாம் சொல்கிறார்களே! என்ன மடமை!" என்று அவன் மனம் மறுபடியும் எண்ணிப் பெரிதும் சலசலத்தது.

2

சிறு விடுகட்டி விளையாடும் காலத்திலிருந்தே ஜகதீசனும், ரமணியும் இணை பிரியாத் தோழர்களாகப் பழகி வந்தார்கள். அவர்களுக்குள் ஆயிரமாயிரம் வாக்குவாதங்கள் நடக்கும். அபிப்பிராய பேதங்கள் வலுக்கும். ஆயினும் அவர்களிருவருக்கும் இடையே வளர்ந்த நட்பை இவற்றால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

சந்தர்ப்பங்களும் அவர்களைப் பிரித்துவைக்காத நிலையில் சாதகமாகவே அமைந்துவிட்டன. ரமணியின் தந்தை ராமநாதய்யர் ஒரு பெரிய வக்கீல். அந்த ஜில்லாவில் அவருக்கிருந்த செல்வாக்கு அவர் தொழில் வளத்திற்கு நல்ல அனுசரணையாக இருந்து வந்தது. வலுக்கட்டாயமாக யாராவது அவரைப் பிடித்திழுத்து வேறு இடத்திற்கு அழைத்தால் கூட அவர் திருநெல்வேலியை விட்டு நகரத் தயாராக இல்லை. ஜகதீசனின் தந்தை 'ஸப்ரிஜிஸ்ட்ரார்' உத்தியோகத்திலிருந்து 'ரிடையர்' ஆகி ஊரோடு வந்து எத்தனையோ வருஷங்களாகி விட்டன.

இந்த வசதிகளாலே ரமணியும் ஜகதீசனும் தங்கள் காலேஜ் படிப்பு முடியும் வரை பிரியா நண்பர்களாக இருக்க முடிந்தது. படிப்பிலோ, விளையாட்டிலோ எதிலாகட்டும், ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்களல்ல. இப்படியே காலத்தோடு ஓடி அவர்களிருவரும் இந்த வருஷம்தான் பி. ஏ. பரீட்சை எழுதியிருக்கிறார்கள்.

இந்தச் சமயத்திலேதான் சென்னையில் தன் சிற்றப்பா வீட்டில் இருந்து வந்த ரஞ்சனி—ரமணியின் தங்கை—விடுமுறைக்காக ஊருக்கு வந்து சேர்ந்தாள். மூன்று வருஷங்களுக்கு முன்பு நான்காவது பாரம் படித்துக் கொண்டிருந்தவள் சிற்றப்பாவுடன் சென்னைக்குப் போனாள். அவருக்குக் குழந்தைகளே கிடையாது. ஆகவே, 'ரஞ்சனி இங்கேயே படிக்கட்டுமே, எனக்கும் எத்தனையோ ஆறுதலாக இருக்கிறது' என்று அவர் கடிதம் எழுதியதை ராமநாதய்யர் அப்படியே ஆமோதித்து விட்டார். அதற்குப் பின் இதுவரை ரஞ்சனி ஊருக்கு வரவே யில்லை. எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை எழுதி முடித்துவிட்டு இப்பொழுதுதான் ஊருக்கு வந்திருந்தாள் அவள்.

இங்கிருந்து போகும்பொழுது இருந்ததைவிட அவள் உருவமும் குணமும், நடை உடை பாவனைகளும் எவ்வளவோ மாறியிருந்தன. எதற்கெடுத்தாலும் கோபித்துக் கொண்டு முகத்தை 'உர்'ரென்று வைத்துக் கொள்ளும் அந்த ரஞ்சனிதான் இன்று அரும்பும் குறு நகை பூக்கும் ரஞ்சனியாகத் திகழ்ந்தாள். வாரி விடப்பட்ட தலையை ஒரு கொடியில் கலைத்துப் பறக்க விட்டுக் கொண்டு குதித்துக் கொம்மாள மிடும் சிறுமியாகத் திரிந்த ரஞ்சனி, இப்பொழுது அமைதியும், அடக்கமும் பூண்டு அன்ன நடை பயிலும் குஞ்சுக் குமரியாக விளங்கினாள். அனாவசியமான வம்புப் பேச்சுக்களில் தலையிட்டுக் கொள்ளாமல், கதை, இலக்கியம், இவற்றைப் பற்றியெல்லாம் கொஞ்சும் மொழிகளில் அவள் பேசுவதெல்லாம் ஜகதீசனுக்கு மிகவும் பிடித்திருந்தது. பொதுவாக, அவளிடம் காணப்பட்ட இந்த மாறுதல் அவன் மனத்திற்கு மிகவும் இனித்திருந்தது.



"இந்தப் புடவையை வாங்கிக் கொள்ளுங்கள், அம்மா!"

"வேண்டாமப்பா! யாரும் இந்த மாதிரிப் புடவையைக் கட்டிக் கொள்ளுவதில்லை!"

"அப்படியானால் இந்த ரகப் புடவையை வாங்கிக் கொள்ளுகிறீர்களா, அம்மா?"

"வேண்டாமப்பா! இப்பொழுது யாரைப் பார்த்தாலும் இதையேதான் கட்டிக் கொள்ளுகிறார்கள்!"

இதற்கெல்லாம் முற்றிலும் மாறாக இருந்தது அவன் பெற்றோரின் மனப்போக்கு. புஸ்தகமும் கையுமாக, நாகரிக உடையணிந்து நடக்கும் ரஞ்சனி அவர்களின் கண்ணுக்கு 'ராங்கிக்காரி'யாகவும் பட்டணத்துப் பவுஷுக்காரியாகவும் தோன்றினாள். இயற்கையாகவே பருவம் அவளுக்கு அளித்திருந்த அழகும் நளினமும் இவர்கள் கண்களுக்கு 'மினுக்கலும் குலுக்கலுமாகக்' காட்சி தந்தன. அனாவசியமாகப் பேசாத அவளது தன்மை, 'கர்வத்தின் அறிகுறி'யாக அவர்கள் அறிவுக்குப் பட்டது. இந்த விஷயங்களெல்லாம் அவனுக்கு ஓரளவு தெரிந்துதானிருந்தது. ஆனால் அன்று மத்தியானம்தான் அவர்களது மன நிலையையும் பரிபூரணமாக அவனால் அறிய முடிந்தது.

"பட்டணத்துக்குப் போயிட்டு வந்தாத்தான் இப்படி மினுக்கும் குலுக்குமா எல்லோரும் ஆயிடறாளா! இது என்னமோ அதிசயமாத்தான் இருக்கு!"

"அது மட்டும் இல்லையம்மா. அந்தப் பெண் பேசறதைக் கேட்டிருக்கயோ! தன்னை விட்டாக் கிடையாதுன்னு கர்வம்! நாம் ஏதாவது கேள்வி கேட்டா, பதில் சொல்லக் கூடக் கஷ்டமாயிருக்கு!"

"ஆமாம். பொம்மனாட்டிகளோடே எல்லாம் அவளுக்குப் பேசப் பிடிக்குமா, என்ன! ஆண்பிள்ளைகளோடு சரி சமமா உட்கார்ந்து கொட்டம் அடிக்கத் தெரியும்."

"அப்படி யாரு கூடவும் பேசறதில்லையே அவள். எங்கள் ஜகதீசனிடம்தான் ஏதாவது கேட்டுக்கொண்டிருப்பாள். அவா வீட்டு பிள்ளைமாதிரி இவன் பழகிட்டானேல்லியோ!"

"அதைப்பத்தி ஒண்ணுமில்லை. அந்தக் காவாலிப் பயல் ராமு, மைனர் ராஜா எல்லோருமா அவாவீட்டு வாசல்லே நின்னுண்டிருந்தா. இவள் அவாளுக்குச் சமமாகச் சிரிச்சுச் சிரிச்சுக் கொட்டமடிக்கிறா. இதெல்லாம் என்ன!"

ஜகதீசனால் இதற்கு மேலும் அவர்கள் பேச்சைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை.

"காப்பி போட நேரம் ஆகலையா அம்மா!" என்று கேட்டுக் கொண்டே மடமடவென ரேழியினுள் நுழைந்தான் அவன். அங்கு கூடியிருந்த 'அம்மாமி'களின் கூட்டம் மெள்ளக் கலைந்தது.

அவன் மனம் மட்டும் வீணே குமும்பித் தவித்தது.

காப்பியை அருந்திவிட்டுப் பிரமை பிடித்தவன்போல் தன் அறையிலேயே வெகு நேரம் உட்கார்ந்திருந்தான். இருட்டுப் பரவும் பொழுது எழுந்து ரமணியைப் பார்க்கப் புறப்பட்டான். அங்கு புது நிலவின் ஒளியில் ரஞ்சனியின் புது எழில் அவன் மனத்தை மேலும் கிளறிவிட்டு விட்டது.

3

ஜகதீசனின் பெற்றோர்களுக்கு ரஞ்சனியின் மீது எவ்வளவுக்கெவ்வளவு வெறுப்பு வளர்ந்ததோ, அவ்வளவுக்கவ்வளவு அவள் மீது அவன் கொண்ட பிரேமையும் வளர்ந்தது. இலக்கியம், கலை இவற்றைப் பற்றியதாகத்தான் இதற்கு முன்னெல்லாம் ஜகதீசனும் ரஞ்சனியும் பேசிக் கொள்வார்கள். அது எப்

படி எப்படியோ திரிந்து பரஸ்பர ஸ்துதியில் வந்து சேர்ந்தது. ரமணியைப் பார்க்கச் செல்லும் சாக்கில் அனேகமாக நாள் முழுதுமே அவனுடன் உரையாடுவதிலேயே கழிக்க ஆரம்பித்தான் அவன். தன் பெற்றேரையும் இந்த ஊர் வம்பிகளையும் நினைத்தபொழுதெல்லாம் அவனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. 'ஒரு சிறிதும் கபடமற்று, கன்னங்குழிய, வெள்ளிச் சிரிப்புச் சிரிக்கும் இவளைப் பார்த்து இத்தனை அபாண்டமாகப் பேசுகிறார்களே!' என்று நினைத்து உள்ளுக்குள்ளேயே பொருமினான் அவன். ரஞ்சனி மட்டும் சூழ் நிலையை ஒரு சிறிதும் பொருட் படுத்தவே இல்லை. அவள் என்றும் போலத்தான் நடந்து கொண்டாள். ரமணியமாக வளர்ந்து வந்த அவர்கள் நட்பை மூட்டுக்கட்டை போட்டுத் தடுத்து விடக் காலம் முயன்று விட்டதோ என்னவோ! நிலைமை அவ்வளவுக்கு வளர்ந்து விட்டது. திடீரென வெற்று முணுமுணுப்புடனும் வம்புடனும் அடங்கியிருந்த ஜகதீசனின் பெற்றோர் நேரில் அவனைக் கண்டிக்கும் கட்டத்துக்கு வந்து விட்டனர். அடிக்கடி ரஞ்சனியின் திறமையைப் பற்றியும் குண விசேஷங்களைப் பற்றியும் அவன் ரமணியுடன் பேசுவதைக் கேட்கக் கேட்க, அவர்கள் உள்ளத்தில் அடங்கிக் கிடந்த வெறுப்பு பீறிக் கொண்டு வெளிக் கிளம்பி விட்டது.

ரமணியின் வீட்டுக்கு அவன் புறப்படும் பொழுதெல்லாம் அவன் தாய் "ஜகம், எப்பப் பார்த்தாலும் அவா வீட்டிலே அப்படி என்னடா வேலை! வயசு வந்த பெண் ஒண்ணு 'சினிமாக்காரி'யாட்டமா மினுக்கிக் கொண்டிருக்கிற இடத்துக்கு அடிக்கடி போனு நம்ம பேர் அல்லவா கெட்டுப் போகும்!" என்று ஜாடை மாடையாய் அதட்டியும் பயமாகவும் சொல்லிப் பார்த்தாள். அவன் அதற்கெல்லாம் அசைவதாகவே காணும். கடைசியில் பலத்த யோசனை செய்து ஒரு அஸ்திரத்தைப் பிரயோகித்தாள் அந்த அம்மாள். அது தாக்கிய வேகத்திலே ரஞ்சனி—ஜகதீசன் சந்திப்பதற்குப் பலமான தடைச்சுவர் எழுந்து விட்டது.

நடந்தது இதுதான்.

அன்று வழக்கம்போல் ரமணியும் ஜகதீசனும் உட்கார்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள். ரமணி கடையில் இருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டே, ஜகதீசனின் தாயார் இரைந்து தன் கணவரிடம் ரஞ்சனியைப் பற்றி அளக்க ஆரம்பித்தாள். தங்கள் பேச்சின் சுவாரஸ்யத்திலே தங்களை மறந்திருந்த நண்பர்கள் உள்ளே நிகழ்ந்த சம்பாஷணையை முதலில் கவனிக்கவில்லை. வர வர வலுத்த அந்தக் குரலில் அடிக்கடி அடிபட்ட ரஞ்சனி என்ற சொல் ரமணியை ஓரளவு திகைக்கச் செய்தது. பேச்சை நிறுத்தி விட்டு உற்றுக் கவனித்தான்.

"அந்தப் பெண் என்னமோ நம்ம ஜகதீசனை மயக்கித்தான் இருக்கு. இல்லேன்னு எப்பவும் இவனுக்கு அங்கே என்ன வேலை! நானும் இவனை எவ்வளவோ கண்டிச்சுப் பார்த்தாச்சு. நீங்க இப்படி வாயே திறக்காம இருந்தா, இன்னும் எவ்வளவுக்குப் போயிடறதோ! பார்த்தா என்னமோ மினுக்கிருளேன்னு மயங்கி விழுந்துட்டான். அந்தப் பெண்ணோடு நடவடிக்கை சுத்தமாக நன்றாக இல்லை. ஜக்கு என்ன அவளுக்கு அத்தானா. அம்மாஞ்சியா! இவன் கிட்ட பழகறதைப் பார்த்தாலே எனக்கு அது மேலே நல்ல நம்பிக்கை இல்லை. என்னமோ உருவத்தைப் பார்த்து மயங்கினா ஆயிடுத்தா! உள்ளே பூரா ஊழல்!"

"சரஸா, வீணா ஏன் இப்படித் தொண்டை கிழியக் கத்தறே! கடையிலே அவன் உட்கார்ந்திருக்கிறான். அந்த ரமணியும் கூடவேதான் இருக்கிறான்; காதிலே விழப்போகிறது."

"காதிலே விழ வேண்டும் என்றுதானே சொல்கிறேன். என்னதான் அவர்களுக்குச் செல்லமா யிருந்தாலும் வயசான பெண்ணை இப்படியா வளர்ப்பது!"

ரமணியின் முகம் சிறுத்துக் கருத்தது. கையைத் தலைக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த ஜகதீசனைக் கனிவுடன் பார்த்தான் அவன்.

"தயவு செய்து நீ இனிமேல் என் வீட்டுக்கு வராதே ஜகம்!" என்றுசொல்லி விட்டுவேறொன்றுமே கூறாமல் விடுவிடென்று வெளியே போய் விட்டான். ஜகதீசனால் பெருகி வரும் துக்கத்தைப் பொறுக்க முடியவில்லை. துக்கம் வெறுப்பாகவும் கோபமாகவும் மாறி அவன் உள்ளத்திலே உஷ்ணம் கொடுத்தது. அம்மாவின் முன் போய் என்றுமே பேசியிராத முறையில் கூச்சலிட்டான். ஆயினும் அவனது தந்தையின் அதட்டலின் முன்பும், தாயின் கண்கள் பிரயோகித்த வருணாஸ்திரத்தின் முன்பும் அவை பயனற்றுப் போயின.


அதற்குப் பின் அவன் வீட்டை விட்டு நகராமலேயே சில நாட்களைக் கழித்து விட்டான். காலம் கடகடவென உருண்டு விட்டது. வீதியில் எங்கேனும் ரமணியைச் சந்தித்தால் ஏதோ தடுக்க முடியாத உணர்ச்சி வசப்பட்டு அவர்கள் வாய்கள் மௌனம் சாதித்துவிடும். இந்த மௌனம் அவர்களது நட்பையே நாளடைவில் அறுத்து விட்டது.

இதற்கிடையிலேயே பரீட்சை முடிவுகள் வெளிவந்து விட்டன. ரமணி, ஜகதீசன் இருவருமே முதல் வகுப்பில் தேறியிருந்தனர். உத்தியோக வேட்டைக்காகவும், மனமாற்றத்திற்காகவும் ஊரைவிட்டுப் புறப்பட்டு சென்னைக்குப் பிரயாணமானான் ஜகதீசன்.

4

இரவு மணி எட்டுக்கு மேலிருக்கும். பாதையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக மின்சார விளக்குகள் ஒளி வீசிக் கொண்டிருந்தன. என்றைக்குமில்லாத ஒருவகை நிறைவு பெற்ற மனத்துடன் சைக்கிளில் வந்து கொண்டிருந்தான் ஜகதீசன். சென்னைக்கு வந்தும் இரண்டு வருஷங்கள் கடந்து விட்டிருந்தன. எப்படியோ இங்கு வந்த உடனேயே ஒரு பாங்கியில் உத்தியோகம் சம்பாதித்துக் கொண்டிருந்தான். திருநெல்வேலியிலிருந்து தன் தாயையும் தந்தையையும் கூடவே அழைத்து வந்து திருவல்லிக்கேணியில் ஒரு வீட்டில் வசதியான 'போர்ஷன்' ஒன்றில் குடியேறினான். ரஞ்சனியைப் பற்றிய நினைவு அவனை இயந்திரமாக மாற்றியிருந்தது. ஏதோ செய்து தொலைக்க வேண்டும்; வாழ்ந்து தொலைக்க வேண்டும்

ஏன் வந்தீர்?



என்ற இதய முணுமுணுப்போடு தான் அவன் இந்த உலகில் இயங்கி வந்தான்.

அன்று சாயங்காலம் என்னவோ எண்ணிக் கொண்டே வேகமாக சைக்கிளில் வந்து கொண்டிருந்தான் அவன். திடீரென, பாதையிலிருந்த விளக்குகளெல்லாம் அணைந்து போயின. எதிர்பாராத தருணத்தில் எழுந்து பரவிய இருள் அவனை ஒரு கணம் திக்கு முக்காடச் செய்தது. சைக்கிள் மணியைப் பலம் கொண்ட மட்டும் அடித்துக் கொண்டே விரைந்து வந்து கொண்டிருந்த அவனெதிரே 'பளிச்'சென அடித்த ஒளி அவன் கண்களைக் கூச வைத்தது. தன்னை அறியாமலேயே ஒரு கணம் அவன் கண்ணை மூடித் திறந்தான்.

"ஐயோ.......!"

இதற்கு மேல் அவனால் அப்பொழுது ஒன்றும் பேச முடியவில்லை. ஏன்! பேசுவதற்கு முதலில் சந்தர்ப்பமே வாய்க்கவே யில்லையே! காது பொடிபட 'ஹார்ன்' அடித்துக் கொண்டு வந்த மோட்டாரில் அவன் சைக்கிள் மோதி எங்கோ போய் விழுந்தது. அதல பாதாளத்தில் விழுவதுபோன்ற கலக்கத்தில் ஒரு கணம் திணறினான் அவன். அப்புறம் அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை!

* * *

ஜில்லென்று ஏதோ நெற்றியிலே பட்டது போன்று உணர்ந்தான் அவன். மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தான். அப்பா......! கண்களில்தான் என்ன கூச்சம்! நன்றாகத் திறக்கக்கூட முடியவில்லையே!

"அ...ம்...மா...!"

கண்களை மூடிக்கொண்டே, சிரமப்பட்டு இந்த வார்த்தையை வெளியிட்டான் அவன்.

"சொல்லி யனுப்பி யிருக்கு. இன்னம் கொஞ்ச நேரத்தி லெல்லாரும் இங்கே வந்து விடுவார்கள்!"

அமுதம் வார்த்ததுபோல இனிமை கலந்து ஒலித்த அந்தக் குரல் அவனைத் திடுக்கிட வைத்தது. எப்படியோ சிரமப்பட்டுக் கொண்டே கண்களை நன்றாகத் திறந்து பார்த்தான் அவன். எதிரே யாரையும் காணவில்லை

"நான் எங்கே இருக்கிறேன்!"

இதைக் கேட்டு அவன் வாய் மூடவில்லை.

"எல்லாம் நம் வீட்டிலேதான்!" என்று சொல்லிக்கொண்டே அவனெதிரில் வந்து நின்றாள் அவள். அப்படியே விழுங்கி விடுபவன் போல், திறந்த கண் மூடாமல் அவளையே உற்றுப் பார்த்தான் அவன். அவள் இதழ்க் கடையில் மெல்லிய முறுவல் நெளிந்தது. அவள், சாந்தம் கொழிக்கும் தன் விழிகளை உயர்த்தி நிதானமாக அவனைப் பார்த்தாள்.

"ஒன்றும் கவலைப் படாதீர்கள். விழுந்த அதிர்ச்சிதான். சீக்கிரம் குணமாகிவிடும்."

"ரஞ்சனி, நீ எப்படி...... இங்கே......!"

"அதெல்லாம் அப்புறம் சொல்கிறேன். கொஞ்சநேரம் பேசாமல் கண்ணை மூடிக் கொண்டு தூங்குங்கள். இன்னும் சற்றைக் கெல்லாம் அம்மா வந்து விடுவாள்."

அசதியின் காரணமாகவோ, அல்லது வேறு ஏதேனும் நினைத்துக் கொண்டோ அவன் பேசாமல் கண்ணை மூடிக்கொண்டு விட்டான்.

"நான் எங்கே இருக்கிறேன்! ரஞ்சனி எப்படி இங்கே வந்தாள்!"—அவன் திரும்பத் திரும்ப யோசித்துப் பார்த்தான். களைத்துச் சோர்ந்து போயிருந்த அந்த நிலையிலே அவனால் ஒன்றும் தீர்மானமாகச் சிந்திக்க முடியவில்லை. "எல்லாம் தானாகத் தெரிந்து போகிறது" என்று தன்னைத்தானே சமாதானப் படுத்திக் கொண்டான் அவன்.

உள்ளே யாரெல்லாமோ தடதடவென வரும் சத்தம் கேட்டது. கண்ணைத் திறந்து நாற்புறமும் பார்த்தான் அவன். "ஜகம்...... ஜகம்......" என்று கூவிக்கொண்டே ஓடி வந்து அவனருகில் அமர்ந்தாள் அவன் தாய். அவள் கண்கள் கலங்கிப் போய் இருந்தன.

"எங்கெல்லாம் வலிக்கறதுடாப்பா! பேச முடிகிறதா! — இப்படி, அப்படித் திரும்பிப் படுத்துக்கொள்ள முடிகிறதோ!"

அவன் 'உம்' கொட்டினான்.

"என்னமோ டாக்டர் 'ஒன்றுமில்லை. வெறும் அதிர்ச்சிதான்' என்று சொல்லி விட்டாராம். ஏதோ நீ பண்ணின புண்ணியம் தான்! இவ்வளவோடு போச்சே! ரஞ்சனி அந்தக் காரிலே இருந்ததனாலே நல்லதாயிற்று. உன்னை எப்படியோ அந்த நேரத்திலே அடையாளம் கண்டு பிடிச்சுக் காரிலேயே வீட்டுக்கும் கொண்டு வந்து சேர்த்திருக்கிறாள்!"

தாயின் முகத்திலே சுடர் விட்ட துன்பம் கலந்த மகிழ்ச்சியை அவன் நன்றாகக் கவனித்தான். கொஞ்சம் கொஞ்சமாக நடந்ததை எல்லாம் விவரமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டு விட்டான் அவன்.

அன்றைக்குத் தன் சிநேகிதி ஒருத்தியின் காரில் திருவல்லிக்கேணியிலிருந்து மயிலாப்பூருக்கு வந்து கொண்டிருந்தாள் ரஞ்சனி. தியாகராயநகரிலிருந்து மயிலாப்பூருக்குத் தன் ஜாகையை மாற்றிக் கொண்டிருந்தார் அவள் சிற்றப்பா. ஆகவே அவளும் இப்பொழுது காலேஜ் படிப்பதற்காகச் சென்னையில் தன் சிற்றப்பா வீட்டுக்கு வந்திருந்தாள்.

எதிர்பாராத சமயத்தில் எதிரே வந்த சைக்கிள் காரில் மோதி, அதிலிருந்தவன் கீழே விழுந்ததும், காரை நிறுத்திவிட்டு அதில் இருந்தவர்கள் எல்லோரும் இறங்கி வந்து பார்த்திருக்கிறார்கள். விழுந்திருப்பது ஜகதீசன்தான் என்று தெரிந்ததும், சற்றும் தாமதிக்காமல் மேற்கொண்டு கூட்டமும் கூட விடாமல் அவனை டிரைவரின் உதவியால் காருக்குள் கொண்டு வந்து, மயிலாப்பூரிலுள்ள தன் சிற்றப்பா வீட்டிற்கு எடுத்து வந்திருக்கிறாள் ரஞ்சனி. உடனேயே டாக்டருக்கும் ஜகதீசனின் தாயாருக்கும் ஆள் அனுப்பியிருக்கிறாள். அவன் பையிலிருந்த விலாசம் அவளுக்கு அநுசரணையாக இருந்தது. டாக்டர் வந்து பார்த்து 'உடம்பில் எங்கும் பலமான அடி இல்லை' என்று தெரிவித்திருக்கிறார்.

இத்தனை விஷயங்களையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு நீண்ட பெருமூச்சுவிட்டான் அவன்.

கட்டிலருகில் வந்து நின்ற ரஞ்சனியைக் கனிவுடன் பார்த்தாள் அவன் தாய். "அழகும் குணமும் சேர்ந்து அமைந்திருக்கிறது. நீ நன்றாக இருக்கணும்" என்று ஆசீர்வதித்தாள் அவள். தன் தாய்தான் பேசுகிறாளா



"நான் உங்களுக்கு அனுப்பிய 'செக்' வந்து சேர்ந்ததா?"

"ஓ! இரண்டு தடவை வந்து சேர்ந்தது, ஸார்!"

"இரண்டு தடவையா? நான் ஒரு தடவைதானே அனுப்பினேன்?"

"ஆம், நீங்கள் அனுப்பினது ஒரு தடவை. திரும்பி, பாங்கியிலிருந்து ஒரு தடவை வந்தது!"

என்று ஆச்சரியத்துடன் அவள் முகத்தைக் கவனித்தான். அவள் முகத்தில் நிலவிய அமைதியும் பெருமிதமும் அவனுக்கு ஆறுதலளித்தன. 'உள்ளும் புறமும் ஒத்தவர்களாயும் உலகில் சிலர் ரஞ்சனியைப் போல இருக்கத்தான் செய்கிறார்கள்' என்று மெதுவாக முணுமுணுத்தான் அவன்.

★

வானவீதியில் முழுமதி தகதகத்துக்கொண்டிருந்தது. அதைச் சுட்டிக் காட்டி ரஞ்சனியைத் தன் பக்கம் திருப்பினான் ஜகதீசன்.

"ரஞ்சனி, உன்னை ஒரு நாள் பூரண சந்திரனோடு ஒப்பிட்டேன். அதுகூடத் தப்புத்தான். சந்திரனில் இருக்கும் களங்கம்கூட உன்னிடம் இல்லையே!"

"போதுமே உங்கள் வர்ணனை!"

"ஏன், கேட்கப் பிடிக்க வில்லையோ!"

"இல்லை. உங்கள் வர்ணனைகளிலெல்லாம் சொக்கிப் போய் நேரம்போவது தெரியாமல் உங்களுடன் பேசிக் கொண்டிருந்ததனால்தானே நம்மைப் பிரித்து வைத்து விட்டார்கள்!"

"அடி அசடே! அப்பொழுது பிரிக்க முடிந்தது. இனிமேல் அவர்கள் நாமாக ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து போனால்கூட விடமாட்டார்கள். தெரியுமா!"

"ஏனாம்......!"

"இதோ......!"

ரஞ்சனியின் கழுத்தில் திகழ்ந்த மங்கலச் சரடைச் சுட்டிக் காட்டினான் அவன்.

அவள் சிரித்தாள்; அவனும் சிரித்தான்.

மகிழ்ச்சி தெறிக்கும் அவர்கள் சிரிப்பைக் கண்டு வானிலிருந்த சந்திரனும் ரசித்தான்.

கவலைப் படாதே!

அன்று ஞாயிற்றுக் கிழமை. விடுமுறை நாள். ஒரு காரியமுமில்லாமல், சும்மா, தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்த சாம்பு ஒரு கணம் நின்றான்.

"ஐயா, எடை பார்க்கவில்லையா? காலணாதான்!" என்றான் எடை காட்டும் எந்திரம் வைத்துக் கொண்டிருந்தவன்.

"சரி" என்று காலணா கொடுத்துவிட்டு அந்த எந்திரத்தின் மீது ஏறி நின்றான். அந்த எந்திரத்தின் முள், சரியாக 120-ல் நின்றது. அதைப் பார்த்ததும் சாம்பு திடுக்கிட்டான்.

'சென்ற வாரம் 128 ராத்தல் எடை இருந்தேன்! இந்த வாரம் 120 ராத்தல் தானே இருக்கிறேன்! எட்டு ராத்தல் குறைந்து விட்டதே! உடம்பில் ஏதோ கோளாறு இருக்க வேண்டும். இந்த வேகத்தில் எடை குறைந்து வந்தால் என்ன ஆவது? உடனே டாக்டரைப் போய்ப் பார்க்க வேண்டும்' என்று தீர்மானித்தான்.

சாம்பு டாக்டரைப் போய்ப் பார்த்தான்.

டாக்டர் அவன் உடம்பைப் பரிசோதித்தார். 'ஸ்டதாஸ்கோப்'பை மார்பில் வைத்துப் பரிசோதித்தார்; முதுகில் வைத்துப் பரிசோதித்தார்; கண்ணின் கீழ் இமையை இழுத்துப் பார்த்தார்; நாடி பிடித்துப் பார்த்தார். இன்னும் என்னவெல்லாமோ செய்து பார்த்துவிட்டு ஒரு கணம் அப்படியே நின்றார்.

"என்ன டாக்டர்! எனக்கு என்ன நோய்? ஏன் இப்படி என்னுடைய எடை குறைந்து வருகிறது?" என்று சாம்பு மிகவும் கவலையுடன் கேட்டான்.

"உடம்பெல்லாம் ரொம்பச் சரியாகத்தான் இருக்கிறது. நீங்கள் எதைப் பற்றியாவது கவலைப் பட்டுக் கொண்டிருந்திருப்பீர்கள். அதனால் தான் எடை குறைந்திருக்கிறது. எதைப்பற்றியும் கவலைப்படாதீர்கள்! எதற்கும் அடுத்த வாரம் வாருங்கள்" என்றார் டாக்டர்.

ஏதோ சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் சாம்பு வெளியேறினான்.

★

ஒரு வாரம் சென்றது. மறுபடியும் ஞாயிற்றுக் கிழமை வந்தது. டாக்டர் வீட்டை நோக்கிப் புறப்பட்டான். வழியில் எடை மிஷினை வைத்துக் கொண்டு "ஸார், உங்கள் எடை பார்க்கவில்லையா? காலணாதான்!" என்று சென்ற வாரம் அழைத்த ஆசாமியே இன்றும் கூப்பிட்டான்.

'சரி, இன்றைக்கும் பார்ப்போமே' என்று மிஷின் மீது ஏறி நின்றான் சாம்பு. முள் சுழன்று ஓர் இடத்தில் நின்றது. நின்ற இடத்தைப் பார்த்தான். சாம்பு சென்ற வாரத்தைவிட அதிகமாகத் திடுக்கிட்டு விட்டான்! முள் 112 ராத்தல்தான் காட்டியது!

'ஐயையோ! ஒரு வாரத்துக்குள் இன்னும் எட்டுப் பவுண்டு குறைந்து விட்டதே! ஈசுவரா! இது எதில் முடியுமோ தெரியவில்லையே!' என்று அங்கலாய்த்துக் கொண்டே டாக்டர் வீட்டுக்குப் போனான்.

டாக்டர், சாம்புவின் சோக முகத்தைப் பார்த்தவுடனேயே தெரிந்து கொண்டு விட்டார். "என்ன ஸார், உடம்பு எப்படியிருக்கிறது?" என்று கேட்டார்.

"இன்னும் எட்டு பவுண்டு குறைஞ்சு போச்சு ஸார்!" என்றான் சாம்பு.

"என்ன?"

"எட்டு பவுண்டு குறைந்து விட்டது!"

"ஏன்?"

"சென்ற வாரம், 'எதைப் பற்றியும் கவலைப் படாதீர்கள்!' என்று சொன்னீர்களல்லவா? அதிலிருந்து எனக்கு ஒரே கவலையாகப் போய் விட்டது—எனக்கு எதைப் பற்றிக் கவலையிருந்திருக்கக் கூடும் என்று யோசித்து யோசித்துப் பார்த்தேன்; ஒன்றும் புலப்படவில்லை. ஒரு வாரமாக இதே கவலைதான். அதன் பலனாக இன்னும் எட்டு ராத்தல் குறைந்து விட்டது!" என்றான் சாம்பு.

டாக்டர் ஒன்றும் சொல்லத் தெரியாமல் விழித்தார்!

—வேங்கு



மனைவி (பயத்துடன்):— என்ன, தந்தியா வந்திருக்கிறது?

கணவன்:—ஆமாம், நேற்றைய தினம் நான் பட்டணத்திலேயிருந்து புறப்பட்டு வருகிறேன் என்று அடித்த தந்தி இப்போதுதான் வந்திருக்கிறது!

இன்பத்துக்குப் பின்...

வேங்கட லட்சுமி

கூடத்தில் தட தட வென்று சத்தமும் அதைத் தொடர்ந்து படீரென்று ஏதோ விழுந்த ஓசையும் கேட்டது. இந்தக் கண பரம் ஓய்வதற்குள் குழந்தை முரளியின் ஓவென்ற அலறல் வீடு முழுவதும் எதிரொலித்தது. ஏதோ முக்கியமான வேலையில் ஈடுபட்டிருந்த ஹாலாஸ்யம் அதை அப்படியே போட்டு விட்டுச் சட்டென்று வெளியே வந்து கூடத்தில் எட்டிப் பார்த்தான்.

தொட்டிலண்டை இறைந்து கிடந்த விளையாட்டுச் சாமான்களின் நடுவே விழுந்து கிடந்தான் முரளி. அவன் பக்கத்தில் முக்காலியொன்று கவிழ்ந்து கிடந்தது. அதில் ஏற முயற்சித்த குழந்தை தவறிக் கீழே விழுந்திருக்கிறானென்பதை ஊகித்துக் கொண்ட ஹாலாஸ்யம் சட்டென்று ஓடி வந்து குழந்தையைத் தூக்கினான்.

பெரிதாய் அழுது கொண்டிருந்த முரளியைச் சமாதானப் படுத்த முயன்று கொண்டே, "நாணு ! நாணு !" என்று உரத்த குரலில் கூப்பிட்டான். அவனுடைய முகம் கோபத்தால் சிவந்திருந்தது.

கொல்லைப்புறத்துக் கிணற்றண்டை ஏதோ வேலையாயிருந்த சமையற்காரப் பையன் இந்தக் குரல் கேட்டு வேகமாய் ஓடி வந்தான். ஹாலாஸ்யத்தின் முகம் கோபத்தினால் சிவந்திருப்பதைக் கண்டதும் அவன் நடு நடுங்கிப் போனான். எதிரே தலை குனிந்து நின்ற அவனைப் பார்த்து, "ஏய், நாணு ! இந்த வீட்டில் கேள்வி முறையே யில்லையா ! குழந்தை தனியாக இங்கே விழுந்து கிடக்கிறது! அதைக் கவனிக்க ஒருவரும் இல்லை ! வேலைக்காரக் காத்தாயி எங்கேடா !" என்று கோபக் குரலில் கத்தினான் ஹாலாஸ்யம்.

நாணு பயத்துடன் நடுங்கிக் கொண்டே "காத்தாயி தன் பிள்ளைக்கு உடம்பு சரியில்லையென்று சீக்கிரமாகவே வீட்டுக்குப் போய் விட்டாள்" என்றான்.

"அம்மாவும்..." என்று கேட்க வாயெடுத்த ஹாலாஸ்யம் சட்டென்று நிறுத்திக் கொண்டான். அவன் வார்த்தைகள் தடைப்பட்டதற்குக் காரணம் அவன் மனம் பலத்த சிந்தனையில் ஆழ்ந்ததுதான்.

'வேலைக்காரக் காத்தாயிதான் தன்னுடைய பிள்ளைக்கு உடம்பு சரியில்லையென்று வேலையையெல்லாம் அப்படியே போட்டு விட்டு வீட்டுக்குப் போய் விட்டாள். ஆனால் பட்டம் பெற்று மகா புத்திசாலி என்று பெயர் வாங்கிய தன் மனைவி சாவித்திரியும் இப்படிச் செய்ய வேண்டுமா ?' என்ற எண்ணம் எழுந்தது.

அவன் வருத்தத்துடன் குழந்தையின் முதுகைத் தடவியபடியே, "நாணு, உள்ளே போய்க் குழந்தைக்குக் கொஞ்சம் பால் காய்ச்சிக் கொண்டு வா !" என்று உத்திரவிட்டு விட்டு முரளியைக் குழாயண்டை தூக்கிக் கொண்டு போனான். குழந்தையின் முகத்தை நன்றாகக் கழுவித் துண்டை யெடுத்துத் துடைத்து விட்டுக் குழந்தையுடன் தன் அறைக்குள் நுழைந்தான். அவனிடம் ஏதேதோ விளையாட்டுச் சாமான்களையெல்லாம் நிறைத்து விட்டு நாற்காலியில் போய் உட்கார்ந்தான். பாதியில் நிறுத்தியிருந்த ஆபீஸ் வேலையை யெடுத்து எதிரில் வைத்துக் கொண்டானே தவிர, அவன் மனம் அதில் செல்லவில்லை. தீவிரமாக அவன் சிந்தனைக் குதிரை எங்கேயோ கட்டவிழ்த்துக் கொண்டு ஓடவாரம்பித்தது.

★

"என்ன இது ! விளக்கைக் கூடப் போடாமல் இருட்டில் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்களே ! அட, இதென்ன ! முரளியா ! பாவம், தரையிலேயே தூங்கி விட்டானே !" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த சாவித்திரி மின்சார விளக்கைப் பொருத்தினாள்.

ஹாலாஸ்யம் நாற்காலியில் சாய்ந்தபடியே கண்ணைத் திறந்து ஒரு தடவை அவளைப் பார்த்துவிட்டு, "உம், விளையாடிக் கொண்டிருந்தான். அப்படியே தூங்கி விட்டான் போலிருக்கிறது !" என்று சாவதானமாகக் கூறிவிட்டு, அவளைப் பார்க்க விரும்பாதவன் போல் ஆபீஸ் கட்டையெடுத்து எதிரில் வைத்துக் கொண்டான். கையிலிருந்த அலங்காரப் பையை அங்கிருந்த மேஜையின் மேல் வைத்து விட்டுக் குழந்தையை எடுத்துப் போய் உள்ளே தொட்டிலில் விட்டுவிட்டுத் திரும்பி வந்தாள் சாவித்திரி.

ஹாலாஸ்யத்தின் எதிரில் உட்கார்ந்து கொண்டு, "இன்றைக்கு எங்கள் சங்கத்தின் வருடாந்திரத் தேர்தல் நடைபெற்றது. இந்த வருஷத்துக்கும் நான்தான் காரியதரிசி. எனக்குத்தான் அதிக வோட்டுக்கள் விழுந்தன' என்று உற்சாகத்துடன் தெரிவித்தாள்.

"உம்..." என்றான் அவள் கணவன், அவளை திரும்பிப் பாராமலேயே.

"பாவம், ஸப் ஜட்ஜ் வீட்டுப் பத்மாவை, பார்க்கணுமே !...அவளுக்கு முகம் தொங்கிப் போய்விட்டது. பெரிய மனுஷான் வீட்டு நாட்டுப் பெண்ணாயிற்றே தனக்குத் தான் காரியதரிசி பதவி நிச்சயமாகக் கிடைக்குமென்று எதிர்பார்த்தாள். கடைசியில் ஏமாந்து போய் விட்டாள்" என்றாள் சாவித்திரி.

"சரிதான்" என்று எங்கேயோ பார்த்தபடி பதில் சொன்னான் ஹாலாஸ்யம். அதற்கு மேல் அவன் ஒன்றும் பேசாததினால் சாவித்திரி மெல்ல எழுந்து உள்ளே போக எத்தனித்தாள். அவள் அறை வாயிலைக் கடக்கும் பொழுது கடுமையான குரலில், "சாவித்திரி !" என்று கூப்பிட்டான் ஹாலாஸ்யம்.

திடுக்கிட்டுத் திரும்பினாள் அவள். "என் ! என்ன வேண்டும் !" என்று கேட்டாள்.

"ஆமாம்; நானும் உன்னிடம் ரொம்ப நாளாகக் கேட்க வேண்டுமென்று எண்ணியிருந்தேன். இந்த மாதிரி நீ கொஞ்சம் கூட வீட்டுப் பொறுப்பேயில்லாமல் காலையிலிருந்து ராத்திரி வரை ஊர் சுற்றிக் கொண்டிருந்தால் குழந்தையை யார் கவனிப்பது! வீட்டை யார் கவனிப்பது! நம் காத்தாயிக்குத் தன் குழந்தையிடம் இருக்கும் அக்கறைகூட உனக்கில்லையே! கவனிப்பாரில்லாமல் குழந்தை நாற்காலியிலிருந்து கீழே விழுந்து காயம் பட்டுக் கொண்டிருக்கிறான், பார்!" என்றான்.

சாவித்திரியின் முகம் சிவந்தது. "ஏன்! காத்தாயி எங்கே போனாள்! குழந்தையைப் பார்த்துக் கொள்ளத் தானே அவளை அமர்த்தியிருக்கிறது!" என்றாள் பதிலுக்கு.

சாவித்திரியின் வார்த்தைகள் அவள் கணவனின் ஆத்திரத்தைப் பெரிதும் கிளப்பி விட்டன. "ஏன்! எல்லாரும் உன்னைப் போல் இருப்பார்கள் என்று எண்ணினாயா! உனக்குத் தான் உன் குழந்தையின் பேரில் அக்கறையில்லை. காத்தாயியும் அப்படியிருக்க வேண்டுமா! தன் குழந்தைக்கு உடம்பு சரியில்லையென்று அவள் மத்தியானமே வீட்டுக்குப் போய்விட்டாளாம். அவளுக்கு இருக்கும் அறிவு கூடப் படித்த பெண்ணான உனக்கில்லையே!...... நான் வீட்டிலிருந்ததனால் குழந்தை விழுந்ததைக் கவனித்தேன். இல்லாவிட்டால்!"...... என்று படபடவென்று பொரிந்து தள்ளினான் ஹாலாஸ்யம்.

"இல்லாவிட்டால் என்ன! தானே எழுந்திருக்கிறான்! வயசு மூன்றாகிறதே! வீணில் இந்த மாதிரியெல்லாம் நீங்கள் இடம் கொடுப்பதால்தான் அவனுக்குப் பிடிவாதமும் முரட்டுத்தனமும் வரவர அதிகமாகிக் கொண்டே வருகின்றன" என்று கோபத்துடன் அவள் சொல்லி முடிப்பதற்குள் குபீரென்று நாற்காலியை விட்டு எழுந்தான் ஹாலாஸ்யம்.



மனைவி (சினிமாக் கொட்டகையில்):—இதோ பாருங்கள், எதிர் சீட்டில் ஒருவன் தூங்கிக் கொண்டிருக்கிறதை!

கணவன்:—போடி பைத்தியமே! இந்த அதிசயத்தைக் காட்டுவதற்குத்தான் நன்றாய்த் தூங்கிக் கொண்டிருந்த என்னைத் தட்டி எழுப்பினாயோ!

"போதும்! நிறுத்து, உன் பிரசங்கத்தை!" என்று கர்ஜித்துவிட்டுத் துண்டை உதறித் தோளில் போட்டபடியே வாசற் கதவைப் படீரென்று சாத்திக்கொண்டு தெருவில் இறங்கி நடந்து விட்டான்.

ஒரு விநாடி திகைத்து நின்ற சாவித்திரி அலட்சிய பாவத்துடன் உதட்டைப் பிதுக்கியபடியே உள்ளே போகத் திரும்பினாள். 'இவருக்கென்ன இன்றைக்கு! எப்பொழுது பார்த்தாலும் வீட்டையும் குழந்தைகளையும் கட்டிக் கொண்டிருப்பதுதான் ஸ்திரீகளின் கடமையென்று எந்த மகானுபாவன் எழுதி வைத்தானோ! என்னவோ ஆத்திரப்படுகிறாரே! சமையற்காரன் சமைக்கிறான்; வேலைக்காரி மற்ற வேலைகளையெல்லாம் செய்துவிட்டுப் போகிறாள்! நானே வீட்டில் உட்கார்ந்திருக்க வேண்டுமென்று எந்த சாஸ்திரம் சொல்லுகிறது! சேச்சே! வரவர இவர் சுத்தக் கட்டுப்பெட்டியாக யல்லவோ இருக்கிறார்!" என்று எண்ணியபடியே உடை மாற்றுவதற்காகத் தன்னுடைய அறைக்குள் நுழைந்தாள்.

மறுநாட் காலை மணி எட்டரை இருக்கும். ஹாலாஸ்யத்தின் கார் வாசலில் நின்றுகொண்டிருந்தது. புதிய உடை போட்டுக்கொண்டு கையில் வைத்துக் கொண்டிருந்த நாய்க் குட்டிப் பொம்மையுடன் கலகலவென்று மழலைச் சொற்களைக் கொட்டியபடியே குழந்தை முரளி தன் தகப்பனாரின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான். அப்பொழுதுதான் தூங்கியெழுந்து மாடிப்படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்த சாவித்திரிக்கு இந்தக் காட்சி வியப்பை அளித்தது.

"எங்கே போகிறீர்கள்!" என்று தன் கணவனைப் பார்த்துக் கேட்டாள்.

"ஸ்டேஷனுக்குப் போகிறோம்!"—என்று அவளைப் பாராமலே சொன்னான் ஹாலாஸ்யம்.

"கூவண்டி பாக்கப் போறோம்!" என்று தன் பரிபாஷையில் தெரிவித்தான் குழந்தை முரளி. சாவித்திரிக்குச் சிரிப்பு வந்தது.

"யார் வருகிறார்கள்!" என்று கேட்டாள் சாவித்திரி.

"என் அம்மங்காள் சாந்தி வருகிறாள்" என்று சொல்லிக்கொண்டே மோட்டாரைக் கிளப்பினான் ஹாலாஸ்யம்.

ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றாள் சாவித்திரி. ஆனால் அவள் மீண்டும் ஏதோ கேட்கவேண்டும் என்று நினைத்து வாய் திறப்பதற்குள் வண்டி புறப்பட்டுத் தெரு மூலையையும் திரும்பி மறைந்து விட்டது.

★

சாந்தி வந்ததிலிருந்து வீடு கலகல வென்றிருந்தது. குழந்தை முரளியைத் தூக்கிக் கொண்டே திரிந்தாள். சாவித்திரியிடம் கொஞ்சம்கூடக் கல்மஷமே யில்லாமல் பழகினாள். சமையற்காரனுடன் கூடமாட எல்லா

வேலைகளும் செய்தாள். வீட்டில் பலவிதமான மாறுதல்களைப் புகுத்தி, மூலை முடுக்குகளில் ஒளிந்திருந்த குப்பைகளையெல்லாம் அப்புறப் படுத்திப் பளிச்சென்று ஆக்கி விட்டாள்.

இத்தனைக்கும் அவளும் படித்த பெண்தான். எம். ஏ. பாஸ் செய்து ஒரு கல்லூரியில் உதவிப் பேராசிரியையாக வேலைசெய்துகொண்டிருந்தாள். இப்பொழுது கல்லூரியில் கோடை விடுமுறை. அத்தான் ஜானாஸ்யம் அடிக்கடி வருந்திக் கேட்டுக் கொண்டதன் பேரில் அவர்கள் வீட்டுக்குக் கோடை விடுமுறைக்கு வந்திருந்தாள். இன்னும் கல்யாணமாகாததால் சிறிதும் விசாரமற்று இருந்தாள் சாந்தி.

அவள் வந்ததிலிருந்து சாவித்திரிக்குக் கொஞ்ச நஞ்சமிருந்த வீட்டுப் பொறுப்பும் போய்விட்டது. முரளியைக் குளிப்பாட்டுவது, உடுப்புப் போடுவது, ஆகார மூட்டுவது, எல்லாம் சாந்தியைச் சேர்ந்தது. மேற்கொண்டு வீட்டு வேலைகளிலும் பங்கெடுத்துக் கொண்டாள். ஜானாஸ்யத்துக்கான சில்லறை வேலைகளையும் உற்சாகத்துடன் செய்து வந்தாள். ஆகவே, சாவித்திரி கொஞ்சம்கூடக் கவலையேயில்லாமல், அங்கே மீட்டிங், இங்கே டின்னர், இன்னொரு இடத்தில் லெக்சர் என்பதாக வீட்டிலேயே தங்காமல் எப்பொழுதும் விசாரமற்று வெளியிலேயே நிம்மதியாகச் சுற்றிக் கொண்டிருந்தாள்.

இந்த நிலையில் ஏழெட்டு நாட்கள் சென்றன. அன்று பௌர்ணமி. சங்கத்தில் ஏதோ முக்கியமான வேலையிருப்பதாகக் கூறிப் பகல் மூன்று மணிக்கே வெளியே போய்விட்டாள் சாவித்திரி. திரும்பி வீட்டுக்கு வர நெடு நேரமாகுமென்று அவள் எதிர்பார்த்தாள். ஆனால் அதற்கு மாறாகச் சங்கத்தின் வேலை முடிந்து விடவே, சீக்கிரமே வீட்டுக்குத் திரும்பிவிட்டாள்.

அவள் உள்ளே நுழையும்பொழுது கீழே ஒருவரையும் காணோம். ஆனால் மாடியிலிருந்து கலகலவென்று பேசும் நாலைந்து புதுக் குரல்களும், முரளியின் கள்ளமற்ற சிரிப்பொலியும், இடையிடையே சாந்தியும் ஜானாஸ்யமும் பேசுவதும் அவளுக்குத் தெளிவாய்க் கேட்டன.

காலிலிருந்த செருப்பைக் கழற்றிவிட்டு அலங்காரப் பையையும் மேஜைமேல் எறிந்து விட்டு விடுவிடென்று நேராகச் சமையலறைக்குள் நுழைந்தாள். அங்கே அவள் கண்ட காட்சி அவளைத் திகைக்கச் செய்தது. பெரிய பெரிய சுயம் பூசின அடுக்குகளில் விதம்விதமான சித்திரான்னங்களைக் கலந்து வாழை யிலைகளால் மூடிவைத்திருந்தான் நாணு. ஒரு பெரிய கூடையில் அப்பளம், வடாம் எல்லாம் நிறையப் பொரித்து வைக்கப்பட்டிருந்தன. பெரிய குமட்டி அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த சேமியாப் பாயசத்தின் வாசனை கமகமவென்று வீடு முழுதும் பரிமளித்துக் கொண்டிருந்தது. நாணு அடுப்பண்டை குனிந்தபடியே பாயசத்தில் போடுவதற்காக நெய்யில் முந்திரிப் பருப்பை வறுத்துக் கொண்டிருந்தான்.

சட்டென்று தன்னைச் சமாளித்துக்கொண்ட சாவித்திரி, "நாணு! இதெல்லாம் என்ன!" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்.

சட்டென்று திரும்பிப் பார்த்த நாணு தயக்கத்துடன், "இன்றையதினம் நிலாச் சாப்பாட்டுக்காக எஜமான் இதெல்லாம் தயார் பண்ணச் சொன்னார்!" என்றான்.

"அப்படியா!" என்று கேட்டுவிட்டு அங்கிருந்து தன்னுடைய அறைக்குள் நுழைந்தாள் சாவித்திரி. உடையை மாற்றிவிட்டு விளக்கைக்கூடப் போடாமல் அப்படியே இருளில் ஒரு நாற்காலியில் போய் உட்கார்ந்தாள். அவள் மனதில் அப்பொழுதுதான் முதன் முதலாக அர்த்தமற்ற ஒரு வேதனையின் சாயல் தோன்றியது. ஏதோ யோசித்தபடியே, சாளரத்தின் வழியாகத் தெரிந்த முழு நிலவை நோக்கியபடி நெடுநேரம் உட்கார்ந்திருந்தாள்.

அவ்வீட்டில் தனக்கே உரிமையான ஸ்தானம் தன்னிடமிருந்து நழுவி விட்டதை உணர்ந்தாள். வீட்டுக்கு எஜமானியான தன்னிடம் ஒரு வார்த்தை கூடக் கேளாமல் தன் புருஷன் தன்னுடைய சிநேகிதர்களுக்கெல்லாம் நிலாச் சாப்பாடு ஏற்பாடு பண்ணியது அவளுக்கு ஆத்திரத்தைக் கிளப்பியது. அதற்குக் காரணம் சாந்திதான் என்று எண்ணியது அவள் மனம். அதைத் தொடர்ந்து அவள் சிந்தையில் இருள் சூழ்ந்தது. என்னென்னவோ குழப்பங்களில் அலை பாய்ந்தாள். 'வீட்டின் இப்போதைய நிலைமைக்கு யார் பொறுப்பாளி!' என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டாள். 'நீதான்!' என இடித்துக் கூறியது அவள் மனச்சாட்சி. 'இரண்டு வருடங்களுக்கு முன்னால் இந்த வீட்டுக்கு ராணியாக ஏதேச்சாதிகாரம் செலுத்தி வரவில்லையா நீ!—வீட்டின் பொறுப்பை விட்டுக் குழந்தையின் பராமரிப்பை வேலைக்காரியின் கையில் ஒப்படைத்துக் கணவனையும் கவனிக்காமல் இருப்பது யார்! வீட்டின் எஜமானியான நீ கொஞ்சமேனும் பொறுப்பேயில்லாமல், சதா வெளியிலேயே சுற்றிக் கொண்டிருந்தால் அந்த வீட்டில் அமைதியும் சந்தோஷமும் எப்படி நிலைக்கும்! புருஷன் தான் எவ்வளவு காலைக்கு இம்மாதிரியான நிலைமையைச் சகித்துக் கொண்டிருப்பான்!...வெளியே போய் வேலை செய்து, ஓடியாடி வீட்டுக்கு வரும்பொழுது, சிரித்த முகத்துடன் வரவேற்று உண்டியளித்து உபசரிக்கும் மனைவியில்லாவிட்டால் புருஷனின் மனம் எப்படி வெறுக்காமலிருக்கும்!...'

சட்டென்று எழுந்தாள் சாவித்திரி. விடுவிடென்று குழாயண்டை போய் முகத்தை அலம்பிக் கொண்டு நெற்றியில் குங்குமமிட்டுக் கொண்டாள். கலைந்திருந்த முன் நெற்றி மயிரை ஒதுக்கிக் கொண்டு வேகமாய் மாடிப் படியிலேறிப் போனாள்.

பால் போல் எரித்துக் கொண்டிருந்த நிலவொளியில், மொட்டை மாடியில் நாலைந்து சிநேகிதர்களுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான் ஜானாஸ்யம். ஒரு புறமாகச் சற்று ஒதுங்கி உட்கார்ந்து மடியில் குழந்தை முரளியைத் தூக்கி வைத்துக்கொண்டு கதை சொல்லுவதில் மூழ்கியிருந்தாள் சாந்தி.

எதிர்பாராமல் அங்கே வந்த சாவித்திரியைக் கண்டதும் சட்டென்று பேச்சுத் தடைப்பட்டது. சலிப்புடன் அவளை நோக்கிய ஞானலாஸ்யம் ஒரு வினாடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவளைத் தன் சிநேகிதர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

"உங்களுடைய நிலாச்சாப்பாட்டில் கலந்து கொள்ள நானும் வந்து விட்டேன்!" என்று சொல்லியவாறே சாவித்திரி சாந்தியின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். "முரளி! இங்கே வா!" என்று அவனை நோக்கிக் கையை நீட்டினாள்.

"மாமி கிட்டேயே இருக்கேன்!" என்று கூறிக் குழந்தை சாந்தியின் கழுத்தைக் கட்டிக் கொண்டான். சாவித்திரிக்கு ஒரு கணம் என்னவோ போலிருந்தது.

"முரளி! நீ அம்மா கிட்ட இரு; நான் கீழே போய் நாணுவுடன் கூட எல்லாச் சாதத்தையும் இங்கே கொண்டு வருகிறேன். அப்புறம் நாமெல்லாரும் நிலா வெளிச்சத்தில் சாப்பிடலாம்" என்று கூறிவிட்டுக் குழந்தையைச் சாவித்திரியிடம் தூக்கிக் கொடுத்துவிட்டு எழுந்து கீழே போனாள் சாந்தி. போகும் பொழுது அவள் புன்சிரிப்புடன் ஞானலாஸ்யத்தைப் பார்த்த பார்வையில் அர்த்தம் நிரம்பியிருந்தது.

சித்திரான்னங்களெல்லாம் மேலே வந்து சேர்ந்தன. இலைகளைப் போட்டு எல்லாருக்கும் பரிமாறினான் நாணு. சாவித்திரி தன் மனத்திலிருந்த துயரத்தையும் குழப்பத்தையும் அடக்கிக் கொண்டு எல்லாருடனும் கலகலப்பாய்ச் சிரித்துப் பேசினாள். அவளுடைய போக்கு ஞானலாஸ்யத்துக்கு விளங்காத புதிராயிருந்தது. ஆனால் சாந்தி மட்டும் இதை எதிர்பார்த்தவள் போல அடிக்கடி தனக்குத் தானே புன்னகை செய்து கொண்டாள்.

★

அடுத்த மூன்றாவது நாட்காலை சாவித்திரி குழந்தை முரளிக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தாள். அந்தச் சமயம் பார்த்து ஞானலாஸ்யத்தின் அறைக்குள் நுழைந்தாள் சாந்தி. புன்சிரிப்புடன் அவனெதிரில் நின்றபடியே, "அத்தான்! நான் சாயங்கால ரயிலில் ஊருக்குப் போகிறேன்" என்று தெரிவித்தாள்.

படித்துக் கொண்டிருந்த பத்திரிகையைக் கீழே போட்டுவிட்டு, "ஏன்! இன்னும் ஒரு மாதம் விடுமுறை யிருக்கிறதே! இன்னும் கொஞ்ச நாள் இருந்துவிட்டுப் போகலாமே!" என்று கேட்டான் ஞானலாஸ்யம்.

"இருந்தாலென்ன! நான் வந்த காரியம் தான் முடிந்து விட்டதே!"

"என்ன, வந்த காரியம் முடிந்துவிட்டதா!"

"ஆமாம், சாவித்திரிதான் இப்பொழுது அடியோடு மாறி விட்டாளே!"

"மாறி விட்டாள் என்பது வாஸ்தவந்தான். அதற்காக நீ இன்னும் கொஞ்ச நாள் இருந்து விட்டுப் போகக்கூடாது என்று யார் சொன்னார்கள்!"

"இனி மேல் உங்களிருவருடைய சந்தோஷத்துக்கும் இடையூறாக நான் இங்கே யிருப்பது நியாயமா! மேலும், என்னைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பும் மகானுபாவர் இன்னும் பதினைந்து நாட்களில் முகூர்த்தம் வைத்துக் கொள்ள வேண்டுமென்று அவசரப் படுத்துகிறாராம். அப்பாவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது" என்றாள். இதைச் சொல்லும்பொழுது அவளுடைய முகம் வெட்கத்தினால் சிவந்தது.

"சாந்தி!" என்றான் ஞானலாஸ்யம். அவனுடைய தொண்டை கரகரத்தது. எழுந்து நின்றபடியே, "சாந்தி! உன்னுடைய புத்தி சாவித்தனத்தினால்தான் சாவித்திரி மீண்டும் பழைய சாவித்திரியானாள். இந்தமாதிரி யுக்தி எனக்கு நீ சொல்லிக் கொடுத்து அவளைத் திருத்தி, என் குடும்பத்தில் முன்பிருந்த மாதிரி அமைதியையும் சந்தோஷத்தையும் நிலவச் செய்ததற்கு உனக்கு நான் என்னவிதமான கைம்மாறு செய்யப்போகிறேனோ!" என்று உணர்ச்சியோடு பேசினான் ஞானலாஸ்யம்.

இச்சமயத்தில் குழந்தை முரளியுடன் உள்ளே நுழைந்தாள் சாவித்திரி.

"சாந்தி! இவனுக்கு வேறு சட்டை போட்டுத் தலையை வாரி விடுகிறாயா! நான் போய்க் குளித்துவிட்டு வருகிறேன்" என்றாள்.

சாந்தி சிரித்துக்கொண்டு, "வாடா, ராஜா!" என்று குழந்தையை ஆசையோடு தூக்கிக் கொண்டாள்.

"சாவித்திரி!...சாந்திக்குக் கல்யாணமாம்; இன்றைக்கு ஊருக்குப் போகிறாளாம்" என்றான் ஞானலாஸ்யம்.

அறைக்குள் நுழையும்பொழுதே தன் கணவன் சாந்தியிடம் பேசியதைக் கேட்டுக் கொண்டு வந்த சாவித்திரி, ஒன்றுமறியாதவள் போல், "அப்படியா! எப்பொழுது முகூர்த்தம்! ஒரு வாரம் முன்னாலேயே தெரிந்தால் எனக்குச் சௌகர்யமா யிருக்கும்! சாந்தி, நீ வேணுமானால் முரளியை உன்னுடனேயே அழைத்துக் கொண்டு போ! கல்யாணக் காரியத்துக்கெல்லாம் கூடமாட ஒத்தாசையா யிருப்பான்!" என்று கூறிச் சிரித்தாள் சாவித்திரி.

"ஆருக்குக் கலியாணம்! மாமிக்கா!" என்று அக்கறையோடு விசாரித்தான் முரளி.

எல்லாரும் சிரித்தார்கள். நன்றி நிறைந்த பார்வையுடன் சாந்தியை நோக்கியபடி, "ஆமடா போக்கிரி! உன் மாமிக்குத்தான்!" என்றான் ஞானலாஸ்யம்.

"ஆது போக்கிரி! நாணு! அப்பாதான் போக்கிரி!" என்று சாந்தியின் காதுக்குள் ரகசியமாகச் சொன்னான் குழந்தை முரளி. எல்லாரும் மீண்டும் சிரித்தார்கள். கண்ணில் ததும்பிய நீரை ஒருவருமறியாமல் துடைத்துக் கொண்டு சாந்தியை அளவற்ற நன்றியுடன் பார்த்தாள் சாவித்திரி. ஆனால் அதைக் கவனியாத சாந்தி முரளிக்கு உடுப்புப் போடுவதில் தீவிரமாக முனைந்திருந்தாள்.



கவலை தீர்ந்தது

வசு

குமாஸ்தா ராமமூர்த்தியைத் தன்னுடைய அறைக்குக் கூப்பிட்டு அனுப்பினார் உதவி மானேஜர் உமா மகேஸ்வரன். ராமமூர்த்தி வணக்கம் தெரிவித்து விட்டு அவர் முன்போய் நின்றான். "ராமமூர்த்தி, உங்கள் செக்ஷனில் காலியாக இருக்கும் தலைமைக் குமாஸ்தா பதவிக்கு உங்களை நியமிக்கும்படி நீங்கள் மானேஜருக்கு செய்து கொண்ட மனுவின்பேரில் இப்போதுதான் மானேஜர் என்னைக் கூப்பிட்டுப் பேசினார். காலியாக இருக்கும் ஸ்தானத்தைப் பூர்த்தி செய்ய டைரக்டர்களுக்கு விருப்பமில்லையாம்" என்றார் உமாமகேசவரன்.

ராமமூர்த்தி, "நான் இந்தக் காரியாலயத்துக்கு வேலைக்கு வந்து ஐந்து வருஷத்துக்கு மேலாகப் போகிறது. எனக்குப் பின் வந்தவர்களில் சிலருக்குப் பிரமோஷன் கிடைத்து விட்டது. எனக்குப் பதவி இல்லாமல் போனாலும் ஊதிய உயர்வாக இருபத்தைந்து ரூபாய்வரை கிடைக்கும்படி செய்தால் என் பெரிய குடும்பத்துக்கு எவ்வளவோ உதவியாயிருக்கும்" என்றான் அடக்கமாக.

"சம்பள உயர்வு விஷயமாக நான் ஒன்றும் செய்வதற்கில்லை. ஆனால் தனிப்பட்ட முறையில் உங்களுக்கு ஏதாவது செய்யலாம் என்று எண்ணுகிறேன். உங்களுக்கு சௌகரியப்படுமானால் சொல்லுங்கள். என்னுடைய மூத்த பையன் மூன்றாவது வகுப்பில் படிக்கிறான். இளையவன் இரண்டாவது வகுப்பில் வாசிக்கிறான். உங்களால் அவர்கள் இரண்டு பேருக்கும் தினந்தோறும் காரியாலயம் விட்டதும் என்னுடைய பங்களாவுக்கு வந்து ஒரு மணி நேரமாவது 'டியூஷன்' சொல்லிக் கொடுக்க முடியுமா? உங்கள் சிரமத்துக்காக மாதம் ஐம்பது ரூபாய் நான் கொடுக்கத் தயார்" என்றார் உமா மகேஸ்வரன்.

பி. ஏ. படித்துவிட்டு உத்தியோகத்துக்காகப் பம்பாய்க்கு வருவதற்கு முன் தன் சொந்த ஊரில் பள்ளிக்கூடப் பையன்கள் சிலருக்குப் 'பிரைவேட் டியூஷன்' சொல்லிக் கொடுப்பதில் ஏற்கனவே பரிச்சயமிருந்த ராமமூர்த்திக்கு உமா மகேஸ்வரன் சொன்ன யோசனை சமய சஞ்சீவியாக அமைந்தது.

"ஸார், இன்று முதலே நான் அதைச் செய்ய சித்தமாயிருக்கிறேன். நீங்கள் செய்யும் உதவியை நான் என் ஆயுளில் மறக்க மாட்டேன்" என்று நன்றி ததும்பும் குரலில் பதிலளித்துவிட்டுத் தன் இடத்துக்குத் திரும்பினான் ராமமூர்த்தி.

அன்று காரியாலயம் விட்டதும் ராமமூர்த்தி உமாமகேஸ்வரன் ஜாகைக்குப் போனான். அப்போது வீட்டில் உமாமகேஸ்வரன், அவருடைய இரு குழந்தைகள், சமையற்காரன் இவர்கள்தான் இருந்தார்கள். உமா மகேஸ்வரனின் மனைவி மூன்றாவது பிரசவத்துக்காகத் தன்னுடைய பிறந்தகத்துக்குப் போயிருந்தாள்.

நாலு மாதம் கழிந்தது. வழக்கம்போல் அன்று மாலை தன்னுடைய வேலையைக் கவனிப்பதற்காக ராமமூர்த்தி உமா மகேஸ்வரனின் பங்களாவை அடைந்தான். வழக்கமாக ஒவ்வொரு நாளும் அவனை எதிர்பார்த்திருக்கும் குழந்தைகள் இருவரையும் அன்று காணவில்லை. விசாரித்ததில் குழந்தைகள் சகிதம் உமாமகேஸ்வரன் அன்று கைக்குழந்தையுடன் ஊரிலிருந்து திரும்பி வரும் தம் மனைவியை அழைத்துக்கொண்டு வருவதற்காக ரயில்வே ஸ்டேஷனுக்குப்

போயிருக்கிறார் என்று தெரிந்தது. இதற்குள் பங்களாவின் வாசலில் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து உமாமகேஸ்வரனும் அவருடைய முதல் இரண்டு குழந்தைகளும் இறங்கி உள்ளே போனார்கள். அவர்களைத் தொடர்ந்து அவர் மனைவி கைக் குழந்தையுடன் காரை விட்டு வெளியே வந்தாள்.

தற்செயலாக அவளைப் பார்த்த ராமமூர்த்திக்கு மயிர்க் கூச்சல் எடுத்தது. ஆமாம்! பத்து வருஷத்துக்கு முன் அவன் மதுரையில் பார்த்த பார்வதியை மறுமுறை பம்பாயில் பார்த்தபோது அதுவும் தன்னுடைய மேலதிகாரியான உமா மகேஸ்வரனின் மனைவியின் ஸ்தானத்தில் பார்த்தபொழுது அவன் மனத்தில் இல்லாத எண்ணங்கள் எல்லாம் எழுந்தன. அவன் பார்வதியைப் பார்த்த அதே கணத்தில் அவளும் அவனை ஒரு விநாடி ஊடுருவிப் பார்த்துவிட்டு, பார்த்தும் பார்க்காததுபோல் உள்ளே போய் விட்டாள். அந்த இடத்தை விட்டு உடனே போய்விட வேண்டுமென்று துடியாய்த் துடித்துக் கொண்டிருந்த ராமமூர்த்தியின் ஆவலைப் பூர்த்தி செய்வதுபோல் உமா மகேஸ்வரன் ராமமூர்த்தியிடம், "குழந்தைகள் இன்று அலைந்துவிட்டு வந்திருப்பதால் இன்றைக்கு அவர்களுக்கு விடுமுறை கொடுத்து விடுங்கள். நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்" என்று சொன்னதும் ராமமூர்த்தி விடு விடென்று ஸ்டேஷனை நோக்கி நடந்தான். அவன் மனது குழம்பிப் போயிருந்தது. அடுத்தாள் முதல் அநேகமாகத் தனக்கு உமா மகேஸ்வரன் வீட்டில் 'டியூஷன்' சொல்லிக் கொடுப்பதால் கிடைத்து வரும் அதிகப்படியான ஐம்பது ரூபாய் வருமானம் நின்று போய்விடும் என்று அவன் நினைத்தான். அந்த ஐம்பது ரூபாய் வருவாயைக் கொண்டுதான் அவன் இரண்டு மாதத்துக்கு முன் அதிக வாடகையுள்ள ஒரு போர்ஷனுக்குக் குடி வந்திருக்தான். இருமலால் அவஸ்தைப்படும் அவன் குழந்தைகளுக்கும் கர்ப்பவதியாயிருந்த அவன் மனைவி மங்களத்துக்கும் அதிகப்படியாகப் பாலும் நெய்யும் வாங்கிச் செலவு செய்ய அவனுக்குத் தைரியமிருந்தது. இவ்வளவு அனுகூலங்களும் எதிர்பாராத விதமாக தடைப்பட்டுவிடுமோ என்ற அச்சம் ராமமூர்த்தியின் உள்ளத்தை வாட்டிற்று.

2

இப்படியெல்லாம் அவன் பயப்படுவதற்குக் காரணம் இருக்கத்தான் செய்தது. பத்து வருஷங்களுக்கு முன் ராமமூர்த்தி திருச்சினாப்பள்ளியில் பி.ஏ., வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அவனுக்குத் தன் பெண் பார்வதியைக் கலியாணம் செய்து கொடுக்க மதுரையில் வேலையாயிருந்த வேணுவனேஸ்வர சாஸ்திரி முன் வந்தார். பார்வதியை நேரில் பார்த்துத் தன் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் பொருட்டு ராமமூர்த்தி அவன் கல்லூரித் தோழன் சிவராமனுடனும், தன் பெற்றோர்களுடனும் மதுரைக்கு வந்தான். பார்வதியை நேரில் கண்டதும் அவள் மனத்துக்குப் பிடிக்கவில்லை என்ற விஷயத்தை அவன் தன் பெற்றோரிடம் ருசமாகத் தெரிவித்தான். சொந்த ஊருக்குப் போனதும் அபிப்பிராயத்தைக் கடிதம் மூலமாகத் தெரிவிப்பதாக அவர்கள் சொல்லி விட்டுப் புறப்பட்டார்கள்.


அன்றைய சாயங்கால ரயிலில் ராமமூர்த்தியின் பெற்றோர்கள் அவர்கள் இருந்த ஊரான தென்காசிக்குப் பிரயாணமானார்கள். ராமமூர்த்தியும் அவன் சிநேகிதன் சிவராமனும் இரவு பத்துமணி வண்டியில் திருச்சிக்குத் திரும்பிப் போவதாகத் திட்டம் போட்டிருந்தார்கள். பொழுது போகும் பொருட்டு மதுரை நகரைச் சுற்றிப் பார்த்துவிட்டு இரவு எட்டு மணி சுமாருக்கு இருவரும் மீனாக்ஷி அம்மன் சந்நிதிக்குப் போய் அர்ச்சனை செய்து விட்டுக் கையில் புஷ்பப் பிரசாதத்துடன் வெளிப் பிராகாரத்தின் வழியாக வந்து கொண்டிருந்தார்கள். அங்கே அதிகக் கூட்டமில்லாததால் அவ்வளவாக இரைச்சலுமில்லை. எதையெல்லாமோ பற்றி வேடிக்கையாகப் பேசிக்கொண்டே வந்த அந்த நண்பர்களின் சம்பாஷணை கடைசியாக அன்று அவர்கள் போய்ப் பார்த்துவிட்டு வந்த பெண் பார்வதியைப்பற்றி ஆரம்பித்தது.



“என்னடா ராமு, பார்வதி கறுப்பாயிருக்கிறாள் என்ற காரணத்துக்காக அவளை நீ கலியாணம் செய்து கொள்ள இஷ்டப்படாதது எனக்குச் சரியாகத் தோன்றவில்லை” என்றான் சிவராமன்.

அதற்குப் பதிலுரைக்கும் விதமாக ராமமூர்த்தி, “சிவராமா, அவள் கறுப்பாக மாத்திரம் இருந்தால் எதோ தொலைந்து போகிறது என்று ஒருகால் சம்மதித்தாலும் சம்மதித்து விடுவேன். ஆனால் அவள் முகத்தில் மருந்துக்குக் கூடக் களை இல்லையே! இந்த ஜடத்தைக் கலியாணம் செய்து கொண்டு யார் ஆயுசு முழுவதும் அவஸ்தைப் படுவது என்று நினைத்துத் தான் வேண்டாமென்று ஒதுக்கித் தள்ளி விட்டேன்” என்றான் உத்ஸாகத்தோடு உரத்த குரலில்.

இதே சமயத்தில் தான் ராமமூர்த்தி கையில் வைத்துக் கொண்டிருந்த தேங்காய் மூடி நழுவிக் கீழே விழுந்தது. அதைக் குனிந்து எடுத்துக் கொண்டு நிமிர்ந்தபோது அவனை அப்பொழுது தாண்டிக் கொண்டு வேகமாகப் போன பெண்ணை ராமமூர்த்தி தற்செயலாகப் பார்க்க நேர்ந்தது. ஒரு கணம் அவன் மூச்சே நின்றுவிடும் போல் இருந்தது. அந்தப் பெண் வேறு யாருமில்லை. அவன் யாரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தானோ, அதே சாட்சாத் பார்வதிதான்! சிவராமனும் கலவரமடைந்துவிட்டான்.



அதன் பிறகு இருவரும் ரயில்வேஸ்டேஷனை அடைந்து அன்றிரவு திருச்சிக்குத் திரும்பினார்கள். சில நாட்களுக்கெல்லாம் வேறு ஒரு இடத்தில் ராமமூர்த்திக்குக் கலியாணம் நடந்தது. பார்வதியைப் பற்றிய அந்தச் சம்பவத்தை அவன் மறந்தே விட்டான். பத்து வருஷம் கழித்து அவன் மனத்தின் அடிவாரத்தில் மறைந்து கிடந்த அந்த நிகழ்ச்சியை நீட்டிய நினைவு அன்று பம்பாயில் மாதுங்காவில் உமா மகேஸ்வரன் வீட்டில் பார்வதியைப் பார்த்ததும், புத்துயிர் பெற்று ராமமூர்த்தியின் நினைவு முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டது. ஒரு வேளை அந்தச் சம்பவத்தை மனத்தில் வைத்துக் கொண்டு பார்வதி தன் புருஷன் உமா மகேஸ்வரனிடம் எதாவது காரணம் கற்பித்து ராமமூர்த்தி தன் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் டியூஷனை நிறுத்தும்படி ஏற்பாடு செய்து விட்டால் என்ன செய்வது? அவள் இன்னும் ஒரு படி மேலே போய் ராமமூர்த்தியின் உத்தியோகத்துக்கே உலை வைத்து விட்டால்!......இதையெல்லாம் நினைத்து அவன் மனம் சொல்லொணாத வேதனைக்கு ஆளாகியது.

அடுத்த நாள் அவன் காரியாலயத்துக்குக் கிளம்பும்போது எதோ பெரிய ஆபத்தை எதிர்நோக்கிப் போவதாக அவன் மனத்தில் ஒரு பிரமை எழுந்தது. அதற்குத் தகுந்த மாதிரி அவன் ஆபீஸுக்குப் போனதும் போகாததுமாக உமா மகேஸ்வரன் அவனைக் கூப்பிட்டுக் கொண்டு வரும்படி பியூனை அனுப்பி வைத்தார். உமா மகேஸ்வரனின் அறைக்குள் நுழையும் போதே ராமமூர்த்தியின் நெஞ்சு ‘திக் திக்’ என்று அடித்துக் கொண்டது.

“ராமமூர்த்தி! என் சொந்த விஷயமாகத்தான் கூப்பிட்டேன். இன்று முதல் நீங்கள் குழந்தைகளுக்கு ‘டியூஷன்’ சொல்லிக் கொடுக்க என் பங்களாவுக்கு வரவேண்டாம்...” என்று ஆரம்பித்தார் உமா மகேஸ்வரன்.

ராமமூர்த்திக்கு அதைக் கேட்டதும் மனது கலங்கத்தான் செய்தது. “சரி, சார்” என்றான் மென்று விழுங்கிக் கொண்டே.

அவன் எதிர்பார்த்ததற்கு மாறாக உமா மகேஸ்வரன் மேலும் தொடர்ந்து, “இரண்டு பையன்களும் கைக் குழந்தையுடன் எப்போதும் விளையாடிக் கொண்டிருப்பார்கள். அவர்களை ‘டியூஷனுக்கு’த் தயாராக

இருக்கும்படி ஏற்பாடு செய்வதற்குப் பதிலாக அவர்கள் தாயார் அவர்களை இஷ்டப்படியே விளையாட அனுமதித்துக் கொண்டிருப்பாள். அவர்கள் 'டியூஷன்' சரிவர நடக்காது. இதை உத்தேசித்து இன்று முதல் அவர்களைக் காரில் உங்களுடைய வீட்டுக்கே அனுப்பி வைப்பதாக உத்தேசித்திருக்கிறேன். இதில் உங்களுக்கு ஒன்றும் சிரமமிருக்காதே?" என்றார்.

"அதற்கென்ன ஸார், உங்கள் இஷ்டப்படியே செய்தால் போகிறது!" என்றான் ராமமூர்த்தி. அதுவரை அவன் நெஞ்சை அழுத்திக் கொண்டிருந்த பாரம் சிறிது நீங்கியது.

பிறகு தன் இடத்தை அடைந்தான் ராமமூர்த்தி. மறுபடியும் அவனுடைய மூளை மும்முரமாக வேலை செய்ய ஆரம்பித்தது. பார்வதி தன்னை அடையாளம் கண்டு கொண்டிருப்பாளா மாட்டாளா என்று தீவிர சிந்தனை அவன் உள்ளத்தை வாட்டியது.

3

புதிய ஏற்பாட்டின்படி உமா மகேஸ்வரனின் இரண்டு குழந்தைகளும் தினந்தோறும் ராமமூர்த்தியின் வீட்டுக்கு வந்து பாடம் கற்றுக் கொண்டு போனார்கள். இந்த விதமாக இரண்டு மாதங்கள் கழிந்தன. அன்றொரு நாள் ராமமூர்த்தி காரியாலயத்துக்குப்



தாயார் (விஷமக்காரப் பிள்ளையிடம்):— பிடிவாதம் பிடித்து அடம் பண்ணினாயோ உன்னைப் போலீஸ்காரனைக் கூப்பிட்டுப் பிடித்துக் கொடுத்து விடுவேன், தெரியுமா?

பிள்ளை:— கூப்பிடு, அம்மா! அப்பா 'பிரேக்' இல்லாத சைக்கிள் வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதைச் சொல்லி விடுகிறேன்!

புறப்படும்போது அவன் தாயார், "ராமு, இன்றைக்குக் காலையில் நீ வெளியே போயிருந்தபோது மங்களத்தை லேடி டாக்டர் வந்து பார்த்தாள். இன்னும் இரண்டொரு நாளில் பிரசவம் ஆகிவிடும் என்று சொன்னாள். நீ ஆபீஸ் விட்டதும் நேராக இங்கே வந்துவிடு" என்றாள். 'சரி' என்று சொல்லி விட்டுக் காரியாலயத்தை அடைந்தான் ராமமூர்த்தி. அங்கு போனதும் அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அவன் மனைவி மங்களத்தின் பிரசவச் செலவுக்காகக் கையில் ஒரு ஐம்பது ரூபாயாவது இருந்தால் சௌகரியமாயிருக்குமே என்ற யோசனை தான் அது. உடனே உமா மகேஸ்வரனிடம் போய்த் தன் நிலைமையைத் தெரிவித்து அந்த மாதத்துக்குக் கொடுக்க வேண்டிய 'டியூஷன்' பணத்தை அட்வான்ஸாகக் கொடுத்து உதவும்படி கேட்டுக் கொண்டான். அதற்கு அவர் சாயங்காலம் வீட்டுக்குப் போகும்பொழுது தன்னை வந்து பார்த்து வாங்கிக் கொண்டு போகும்படி சொன்னார்.

வேலை மும்முரத்தில் ராமமூர்த்தி வீட்டுக்குத் திரும்பும்பொழுது அதை மறந்து போய் விட்டான். வீட்டுக்குப் போய்த் தன் மனைவி மங்களத்தைப் பார்த்ததும்தான் ராமமூர்த்திக்குப் பணத்தைப் பற்றிய ஞாபகம் வந்தது.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் உமாமகேஸ்வரனின் குழந்தைகள் வந்தார்கள். அவர்களுக்கு 'டியூஷன்' சொல்லிக் கொடுத்து அவர்களை வீட்டுக்கு அனுப்பினான். பிறகு அவசரமாக சாப்பாட்டை முடித்துக் கொண்டு மாதுங்காவுக்குப் போய் உமா மகேஸ்வரனைப் பார்த்து விட்டுக் கையோடு பணத்தை வாங்கிக்கொண்டு திரும்பலாம் என்று நினைத்துக் கிளம்பினான்.

மாதுங்காவிலுள்ள உமா மகேஸ்வரன் பங்களாவை அடைந்ததும் வராந்தாவை ஒட்டியிருந்த பக்கத்து அறையில் உமா மகேஸ்வரனும் அவர் மனைவி பார்வதியும் பேசிக் கொண்டிருப்பது ராமமூர்த்தியின் காதில் விழுந்தது. அவர்கள் பேச்சில் தன்னுடைய பெயரும் அடிபடுவதைக் கேட்ட ராமமூர்த்தி வெளி வராந்தாவில் நின்று கொண்டு பேச்சைக் கவனிக்க ஆரம்பித்தான்.

"நம் குழந்தைகளுக்கு 'டியூஷன்' சொல்லிக் கொடுக்கிறாரே ராமமூர்த்தி, அவருக்கா 'பிரமோஷன்?'" என்று கேட்டாள் பார்வதி.

"ஆமாம். இன்னும் இரண்டொரு நாளில் அவருக்குத் தலைமைக் குமாஸ்தா வேலை


கிடைக்கும் போலிருக்கிறது. மனுஷன் பெரிய சம்சாரி. ஏற்கெனவே மூன்று குழந்தைகள். இப்போ வேறு அவர் மனைவி பிரசவத்துக்கு இருக்கிறாளாம். இந்த உத்தியோகம் அவருக்கு எவ்வளவோ உதவியாயிருக்கும். இன்றைக்கு டைரக்டர் மீட்டிங்கிலே மானேஜரும் நானும் அவர் விஷயத்தை எடுத்துச் சொன்னோம். ஒரு மட்டுக்கும் அவர்களுக்கு மனசு வந்தது. அவரை நியமித்து விடலாம் என்று சொல்லிவிட்டார்கள். ராமமூர்த்தி நல்லவர்தான். வேலையிலும் கெட்டிக்காரர். ஆனாலும் கொஞ்சம் வாய்த் துடுக்கு. யாரையும் எடுத்தெறிந்து பேசி விடுவார். இதே காரணத்தினால் அவரை ஆபீஸில் ஒருவருக்கும் பிடிக்காது என்று என் காதில் விழுந்தது. இதுவரை ஒரு சூப்ரின்டெண்டெண்டுக்காவது அவரைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கிடையாது. அதனாலே அவர்கள் ராமமூர்த்தியைப் பற்றி ஒரு வருஷமாவது நல்ல 'ரிப்போர்ட்' கொடுப்பதில்லை. அவருடைய நல்ல காலம், இப்போது இருக்கிற ஆபீஸ் சூப்ரின்டெண்டெண்ட் வயதான மனிதர். உலக அனுபவமுள்ளவர். ராமமூர்த்தியின் திறமையைப்பற்றி உள்ளது உள்ளபடியே எழுதி விட்டார். அதைத்தான் எடுத்துக் காட்டி நானும் மானேஜருமாக டைரக்டர்கள் மீட்டிங்கிலே வாதாடினோம். பாவம், ராமமூர்த்திக்கு மட்டும் கொஞ்சம் அடக்கமான குணமிருந்தால் இரண்டு வருஷத்துக்கு முந்தியே இந்த உத்தியோகம் கிடைத்திருக்கும்" என்றார் உமாமகேஸ்வரன்.

"அவருக்குத்தான் துடுக்காகப் பேசும் குணம் உடன் பிறந்ததாயிற்றே!" என்றாள் பார்வதி.

"அடே, அது உனக்கு எப்படித் தெரியும்?"

"எனக்குத் தெரிந்து பத்து வருஷத்துக்கு முந்தி கலியாண சம்பந்தமாக மதுரையிலே ஒரு பெண்ணைப் பார்க்க வந்திருந்தார் அவர். அந்தப் பெண்ணை என்னவோ அவருக்குப் பிடிக்கவில்லை. அன்றைக்குச் சாயங்காலம் அவர் கோவிலுக்குப் போயிருந்தார். அந்தப் பெண்ணும் தற்செயலாக அதே கோவிலுக்குப் போயிருந்தாள். அப்போது அவர் தன்னுடன் வந்த சிநேகிதரிடம் அந்தப் பெண் காதில் படும்படி 'அந்தப் பெண் முகத்தில் களையே இல்லை. ஜடம் மாதிரி இருக்கிறது' என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி பேசிவிட்டார்."

இவ்வளவுதானா?



"அப்புறம் அந்தப் பெண் அவரைப் பதிலுக்கு ஒன்றும் கேட்கவில்லையா?"

"அவள் தனியாகக் கோவிலுக்குப் போயிருந்தாள். தவிரவும் பதில் சொல்லி என்ன உபயோகம் என்று வருத்தத்தோடு வீட்டுக்குப் போய் விட்டாள்."

"அதற்கு அப்புறம் அவளுக்குக் கலியாணமாச்சா?"

"ஆகாமல் என்ன? ஒரு நல்ல இடத்திலே அவளுக்கு மனசுக்குப் பிடித்த பையனுக்குக் கல்யாணமாச்சு. அவள் புருஷன் நல்ல உத்தியோகத்தி லிருக்கிறார். அவளுக்கும் ஒரு குறைவுமில்லை!"

"ஒருவேளை அந்தப் பெண் இட்ட சாபம் தான் ராமமூர்த்திக்கு இத்தனை காலாகப் பாதகமாக இருந்து கொண்டிருந்ததோ, என்னவோ?" என்றார் உமாமகேஸ்வரன்.

"நான் அறிந்த மட்டுக்கும் அந்தப் பெண் அவருக்குக் கெடுதல் நினைத்ததாகத் தெரியவில்லை. அவர் தன் மனதுக்குத் தோன்றியதை வெளிப்படையாகச் சொன்னார் என்று தான் நினைத்திருப்பாள். ஆனாலும் இங்கிதம் தெரியாமல் அவள் காது கேட்கும்படி அவளைப் பற்றிக் கேவலமாகப் பேசினதைக் கேட்டுக் கொஞ்ச காலைக்கு வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்குக் கலியாணமானதற்கு அப்புறம் இதைப்பற்றி நினைத்திருக்கக்கூட மாட்டாள்" என்று சொல்லி முடித்தாள்.



அவர்:—உங்கள் பையன் ரொம்ப சாதுவாயிருப்பான் போலிருக்கிறதே! ஒன்றும் விஷமம் செய்யாமல் அவன் பாட்டுக்கு வாசலிலே உட்கார்ந்திருக்கிறானே!

இவர்:- நான் கவனிக்கவில்லையே! டேய் கிட்டு, என்ன விஷமம் பண்ணிவிட்டு இப்படிச் சாதுமாதிரி உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்? உண்மையைச் சொல்லு!


இவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த ராமமூர்த்தியின் கண்களில் நீர் சுரந்தது. பார்வதியின் உள்ளத் தூய்மையை எண்ணி அவன் மனம் அவமானத்தினால் குன்றியது. அப்பொழுதிருந்த மனோ நிலைமையில் உமாமகேஸ்வரனைப் போய்ப் பார்த்து, தான் வந்த காரியத்தைத் தெரிவிக்க ராமமூர்த்திக்கு தெம்பு இல்லை. வந்த சுவடு தெரியாமலேயே வீடு திரும்பினான். அவன் தன்னிடம் குடி கொண்டிருந்த அகம்பாவத்தையும் துடுக்குத்தனத்தையும் விலக்கிவிட வேண்டுமென்று தீர்மானத்துக்கு வந்தான்.

திரும்பித் தாதரிலுள்ள தன் வீட்டை அடைந்ததும் வாசலில் அவன் தாயார் நின்று கொண்டிருப்பதைப் பார்த்த ராமமூர்த்தி, "என்ன அம்மா வாசலில் நின்று கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான். "நல்ல பிள்ளையப்பா நீ! உன்னைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். சரியான சமயத்தில் வீட்டில் இல்லாமல்போய் விட்டாயே! நீ போனவுடன் மங்களத்துக்கு உடம்பு ஒரு மாதிரியாக இருந்தது. லேடி டாக்டருக்கு ஆள் அனுப்பினேன். அவள் வந்த பதினைந்து நிமிஷத்துக்கெல்லாம் பிரசவமாகிவிட்டது. பெண் குழந்தை பிறந்திருக்கிறது. ஏதோ பிள்ளைக் குழந்தையாக பிறந்திருக்கலாம்" என்றாள்.

ஒரு கணம் மௌனமாயிருந்தான் ராமமூர்த்தி. பிறகு ஆவேசம் வந்தவன் போல், "பெண் குழந்தையா பிறந்திருக்கிறது? அம்மா என் இஷ்ட தேவதையான பார்வதியின் பெயரை விளக்க வைக்கப் பெண் குழந்தை பிறந்திருப்பதைப் பற்றி எனக்கு எவ்வளவோ திருப்தி. பாக்கியவதி பார்வதி பிறந்த முகூர்த்தத்தில்தான் எனக்கு ஆபீஸில் பிரமோஷன் கிடைத்திருக்கிறது. இருநூறு ரூபாய் சம்பளத்தில் தலைமைக் குமாஸ்தா உத்தியோகம் என்ற தகவல் எனக்குக் கிடைத்தது" என்று சொல்லிக் கொண்டே மங்களத்தையும் பிறந்த குழந்தையையும் பார்க்க ஆர்வத்துடன் ஒரே ஓட்டமாக உள்ளே ஓடினான் ராமமூர்த்தி.

இரவு வேளைகளின் உபாதைகள்?

அவற்றை இம்முறையில் ஒழியுங்கள்...



இரவின் ஒவ்வொரு மணியிலும் தீராத தொல்லைகள்: வயிற்றுவலியினால் தூக்கமே பிடிக்கவில்லையா? ஏறக்குறைய எல்லா வயிற்றுக் கோளாறுகளுக்குக் காரணம் வயிற்றிலுள்ள அதிகப்படியான புளிப்புச்சத்து என்பதே வைத்தியர்களின் தீர்மானமான அபிப்பிராயம். ஆதலால், வயிற்றுப்பிசம், பொருமல், அஜீர்ணம் புளிப்பு, வாயு இத்யாதி உபாதைகளால் அவஸ்தைப் படுவதாயிருந்தால் அவற்றிலிருந்து விடுபட வழி இதோ இருக்கிறது.

உங்கள் மருந்துக் கடைக்காரரிடமிருந்து ஒரு பாட்டில் "பிஸ்மாக்" வாங்கி ஒரு டீஸ்பூன் (அல்லது 4/5 மாத்திரைகள்) சேர்த்து ஜலத்துடன் உட்கொள்ளுங்கள். வயிற்றிலுள்ள அதிகப்படியான புளிப்பு உடனே முறிக்கப்பட்டு பயனற்றதாகச் செய்யப்படுகிறது. வயிற்றின் உட்புறத்தோலின் எரிச்சலும் தணிக்கப்படுகிறது. "பிஸ்மாக்" அதன் நிவாரண வேலையைத் தொடர்ந்து செய்யுமாறு ஒவ்வொரு வேளையும் ஆகாரத்திற்குப்பின்னர் ஒரு டீஸ்பூன் "பிஸ்மாக்" அருந்துங்கள்.



மாத்திரைகளாகவும் பவுடராகவும் கிடைக்கும்

'பிஸ்மாக்'

க்ஷணமே அஜீர்ணத்தைப் போக்குகிறது

"பிஸ்மாக்" எவ்வாறு வலியிலிருந்து குணமளிக்கிறது.

வயிற்றுக் கோளாறுகளுக்கெல்லாம் முக்கிய காரணமான, வயிற்றிலுள்ள அதிகப்படியான புளிப்பை முறித்துப்பயனற்றதாகச் செய்கிறது. "பிஸ்மாக்" புளிப்பை முறிக்கும் பொருள் அதிதுரிதமாக வலியைக் குறைத்தவுடன் மற்றப் பொருள்கள் வேலையைத் துவக்குகின்றன. ஒன்று புளிப்பு வயிற்றினுள் மேலும் சேருவதைத் தடுப்பது. மற்றொன்று வயிற்றின் உள்தோலின் எரிச்சலைக் குறைத்துக் குணப்படுத்துவது.

இந்தியாவில் தயாரிப்பவர்கள்:
ஜீயாப்ரே மானர்ஸ் & கோ., லிட், பம்பாய்-1
பிராஞ்சுகள்: மதராஸ் - கல்கத்தா - டில்லி

Edited, Printed and Published by R. Krishnamurthy at The "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras


எங்கள் வீட்டில் எப்பொழுதும்
டால்டாவையே சமையல் செய்ய
தேர்ந்தெடுக்கிறோம்—அது நாங்கள்
அன்றாடம் செலவு செய்யும் சக்தியை
ஈடுசெய்ய உதவுகிறது!
DALDA
HYDROGENATED GROUNDNUT AND TIL OIL
डालडा
சமநிலை உணவில் உங்களுக்குத்தேவையான கொழுப்பைக் கொடுக்கிறது
HVM. 143-172 TM